Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 40 | விலை – 40 ரூபா

சுடர் :35 கதிர் :19 கார்த்திகை 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 15 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050



## வட கிழக்குக்கு வெளியேயும் கூட்டமைப்பு தேர்தலில் போட்டி

### கோத்தா அரசை பகைக்க விரும்பவில்லை என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 15
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயும் போட்டியிடும். இவ்வாறு கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற் 37

### முச்சந்தி முரளி



" அந்தாள் வெள்ளைக்கொடியோட போனவைக்கு செய்தது தெரிஞ்சும், சம்பந்தரும் வெள்ளைக்கொடி காட்டுறார் என்டா பாருங்கோவன்...!"

## மண்ணைக் காக்க மக்கள் போர்

### இயக்கச்சியில் வீதியை குறுக்கறுத்து ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சி, டிசெம்பர் 15
சட்டவிரோத மணல் மண் அகழ்வுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் ஏ– 9 பிரதான வீதியை மறித்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 37

## சிமெந்து விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 15
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 50 கிலோ கிராம் சிமெந்து பக்கெட்டின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.
வற் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் 37

## மயிரிழையில் தப்பிய சாரதி

கொடிகாமம், டிசெ. 15
ரயிலுடன் மோதிய கார் தூக்கி வீசப்பட்டது. காரிலிருந்த சாரதியும் மற்றொரு நபரும் மயிரிழையில் உயிர் தப்பினர். இந்தச் சம்பவம் சாவகச்சேரி அரசடிச் சந்தியில் நேற்று மாலை 2.10 மணிக்கு இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் 37

## வன்முறைகளுடன் தொடர்புடையோர் கைது

### சொல்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 15
சுதுமலை மற்றும் நவாலிப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சுதும்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் மோட்டார் சைக்கிளில் சென்ற குழு ஒன்று வீட்டு உடமைகளை அடித்துச் சேதப்படுத்தியது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் மானிப்பாய் பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர். இதே 37

## கைக்குண்டு மீட்பு

யாழ், டிசெ. 15
வல்வெட்டித்துறை சமரபாகு நாச்சிமார் கோவிலடியில் கைக்குண்டு நேற்று மீட்கப்பட்டுள் 37

### தூதரக அதிகாரி கடத்தல்:

## ராஜித, மங்களவிடம் விசாரணை

கொழும்பு, டிசெ. 15
சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டமை தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் அமைச் 37

## மயங்கினார் தூதரக பணியாளர்!

கொழும்பு, டிசெ. 15
கொழும்பில் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சுவிஸ் தூதரக பெண் அதிகாரியிடம் விசாரணை நடத்தப்பட்ட போது அவர் இரண்டு முறை மயங்கி வீழ்ந்தார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு தெரிவித்துள்ளனர்.
'சுவிஸ் தூதரகப் பணியாளரைக் கடத்தியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று. பணியாளர் அளித்த அறிக்கையி 37

## வர்ணமயமாகும் யாழ்ப்பாணம்



37

### பல்கலைக் கழகங்களுக்கு

## 83 ஆயிரம் மாணவர்கள் உள்ளீர்ப்பு

### பந்துல தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 15
2020ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 33 ஆயிரத்தில் இருந்து 83 ஆயிரம் வரையில் அதிக 37



# எதிர்க்கட்சிக்கான தகுதி ஜே.வி.பிக்குத்தான்

அதன் யாழ். இணைப்பாளர் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 15

எதற்கும் விலைபோகாத, ராஜபக்ஷாக்களுக்கு அஞ்சாத ஜெ.வி.பி யினர்தான் நாட்டின் எதிர்க்கட்சிப் பதவிக்கு, பொருத்தமானவர்கள் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று ஜே.வி.பியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் ஆர்.சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மீண்டும் மஹிந்த தரப்பின் குடும்ப,சர்வாதிகார ஆட்சி ஆரம்பித்துள்ளது என்பதற்கு உதாரணமாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கீழ் 80 க்கும் அதிகமான அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. முக்கியமான நிறுவனங்கள் அதன் கீழான நிர்வாகங்கள் அவர்களின் குடும்பத்தின் பொறுப்பில் உள்ளன. இவை மீண்டும் குடும்ப ஆட்சியை நிறுவுவதற்கான செயற்பாடாக அமைகிறது.

காலம் செல்லச்செல்ல மக்கள் மீது அரசியல் பொருளாதார சுமைகள் அதிகரிக்கப்படும் என்பதை மக்கள் உணர வேண்டும். சிங்கள பௌத்த ஆதிக்கத்தை நிலைநாட்ட அவர்கள் முயற்சிக்கிறார்கள். எதிர்காலத்தில் உருவாகும் இந்த நெருக்கடியை எதிர் கொள்வதற்கு பலமான எதிர்க்கட்சி தேவை. எதிர்க் கட்சி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் குழப்ப நிலை காணப்படுகிறது.

நாட்டின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், கட்சித் தலைமை என்று எல்லா விடயங்களுக்கும் அந்தக் கட்சியில் குழப்பநிலை காணப்பட்டு அந்தக் கட்சி தற்போது பலமிழந்துள்ளது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த தரப்புக்குப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுப்பதற்குக் கட்சி தாவுவதற்குப் பலர் தயாராக உள்ளனர். இந்த நிலையில் விலை போகாத, ராஜபக்ஷவுக்கு அஞ்சாத நாம் உள்ளோம். இதனை மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்- என்றார். (த-7)



# அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கான அலுவலகம் உத்தியோகபூர்வமாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளைப் பல்கலைக் கழகத்துக்குள் சிறப்பாக முன்னெடுத்து செல்வதற்காக இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

திறப்பு நிகழ்வின் போது மாணவர்கள் ,விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வருகை தந்து தேவைகளைப் பெற்று கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

# வெள்ளை வான் கடத்தல் குறித்து கருத்துத் தெரிவித்த 2 பேர் கைது

கொழும்பு, டிசெ.15

வெள்ளை வான் கடத்தல் குறித்து கருத்துத் தெரிவித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அப்போதைய அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் இவர்கள் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு வெள்ளை வான் கடத்தல் குறித்து கருத்து வெளியிட்டிருந்தனர். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த காலத்தில் வெள்ளை வான் கடத்தல் இடம்பெற்றது எனவும், அவ்வாறு கடத்தப்பட்டவர்கள் கொடூர சித்தரவதைகளின் பின்னர் ஆற்றில் வீசப்பட்டு முதலைகளுக்கு இரையாக்கப்பட்டனர் எனவும் இவர்கள் தெரிவித்திருந்தனர். ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தற்போது இவர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர். இவர்கள் இருவரும் தாம் கடத்தலுக்குப் பயன்படுத்திய வெள்ளை வான் ஒன்றின் சாரதிகளாகச் செயற்பட்டிருந்தோம் என்று குறித்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தனர். (எ-22)

# உறவுகளைப் பலப்படுத்துவதற்கு ஜப்பான் - இலங்கை இணக்கம்

கொழும்பு, டிசெ.15

பொருளாதார முக்கியத்துவமுடைய துறைகளில் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தவும் அதற்கான பிரதான துறைகளை இனங்கண்டு அர்ப்பணிப்புடன் செயற்படவும் இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள ஜப்பானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மொதேகி டொசிமிட்சு மற்றும் 8 பேர் கொண்ட ஜப்பானிய உயர்மட்ட இராஜதந்திர குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தபோதே இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜப்பானுக்கு எதிர்வரும் மே மாதம் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை வந்துள்ள அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் மொதேகி டொசிமிட்சு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மே மாதம் இடம்பெறவுள்ள 'ஆசிய நண்பர்கள்' சர்வதேச மாநாடு இந்தப் பயணத்துக்கான சிறந்த சந்தர்ப்பம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொருளாதார முக்கியத்துவமுடைய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தவும் அதற்கான பிரதான துறைகளை இனங்கண்டு அர்ப்பணிப்புடன் செயற்படவும் இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கிழக்கு கொள்கலன் இறங்குதுறை உள்ளிட்ட துறைமுக உட்கட்டமைப்பு, வசதிகளின் அபிவிருத்தி, அதிவேக வீதிகள், விவசாயம், அதிநவீன தொலைக்காட்சித் தரவுப் பரிமாற்றம், இடர் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த ஜப்பானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், இலங்கை ஜப்பானின் சிறப்பு நட்பு நாடாகும் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியை ஜப்பானுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள 'ஆசிய நண்பர்கள்' சர்வதேச மாநாடு அதற்கான உகந்த சந்தர்ப்பமாகும் எனவும் ஜப்பானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்ட துடன், ஜனாதிபதியும் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் இருநாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் என நம்பிக்கை வெளியிட்டதுடன், பரஸ்பர நன்மைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அபிவிருத்திச் செயற்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்ப தற்கான இருதரப்பு முறைமை யொன்றை நிறுவுவதற்கு எதிர்பார்ப்பது எனவும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஜப்பான் நிறுவனங் களை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பாக இது அமையும் எனவும் ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

எமது நாடு பொருளாதார ரீதியில் சிறியதாகும். ஆயினும் எம்மிடம் திறமையுள்ள, கல்விகற்ற மனித வளம் இருக்கின்றது. இதனை அடிப்படையாகக்கொண்ட உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதே எனது அபிலாஷையாகும். இந்த இலக்கினை அடைவதற்கு ஜப்பானின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்க்கின்றோம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு முதலீடுகளை, குறிப்பாக சீனா, ஜப்பான், இந்தியா, தென்கொரியா, ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் போன்ற பிராந்திய நாடுகளின் முதலீடுகளை எதிர்பார்க்கின்றது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிராந்திய ஒத்துழைப்புகள் தொடர்பில் கவனம் செலுத்திய ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், சுதந்திரமான, திறந்த இந்து பசுபிக் பிராந்திய எண்ணக்கரு தொடர்பில் தமது நாட்டின் அர்ப்பணிப்பை இதன்போது சுட்டிக்காட்டியதுடன், பாதுகாப்பு, நிலைத்தன்மை ஆகியன பிராந்திய ஒத்துழைப்பில் முக்கிய பங்குவகிக்கின்றன என்று தெரிவித்தார். இதற்கு இந்து சமுத்திர வலயம் நெருக்கடிகளற்ற அமைதியான பிராந்தியமாக காணப்பட வேண்டியது அவசியமாகும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளிநாட்டு உறவுகள் பற்றிய தமது நிலைப்பாட்டை வலியுறுத்திய ஜனாதிபதி, உலகப் பலசாலிகளின் வரையறைக்குள் கட்டுப்படும் தேவை இலங்கைக்கு இல்லை. நாம் ஏனைய நாடுகளின் நட்பினை எதிர்பார்க்கும் அதேவேளை அவர்களது ஆதிக்கத்தினை மறுக்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையில் இனங்களுக்கிடையே சமாதானம், உறுதிப்பாடு மற்றும் நல்லிணக்கத்தைப் பலப்படுத்தவே தமது நாடு செயற்படும் என்று ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார் என்றுள்ளது. (எ)

**JAFFNA MEDICAL ASSOCIATION**
**ANNUAL GENERAL MEETING - 2020**
**NOTICE OF MEETING**

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Wednesday, 29th January 2020 at 11.00 a.m. at the Auditorium of Medical Students' Hostel, Jaffna, for the following purposes;

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2019 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the committee of management for year 2020.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management,
Honorary Secretary
15th December 2019
(CS 29889) (13.17)

# டெங்கு நோயாளி தப்பியோட்டம்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைபெற்றவந்த டெங்கு நோயாளி அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், வவுனியா நெடுங்கேணி நயினாமடுவில் வைத்துப் பிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய தகவல் பகிரப்பட்ட நிலையில், வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணியக அதிகாரிகள் அங்கு அவரை அவதானித்துப் பிடித்தனர். அவர் தற்போது வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. நயினாமடுவைச்சேர்ந்தஅவர்வாகன சாரதியாகக் கடமைபுரிகின்றார். அவர் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் டெங்குத் தொற்று ஏற்பட்டது. சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் அவர் நேற்றுமுன்தினம் மருத்துவ விடுதியி லிருந்து தப்பியோடியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

# மின்சார சபை பிரச்சினைக்கு துரிதமாகத் தீர்வு பெறப்படும்

## ஜனாதிபதியுடனான சந்திப்பில் முடிவு

கொழும்பு, டிசெ.15

இலங்கை மின்சார சபை, இலங்கை பேண்தகு சக்திவலு அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக துரிதமாகத் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ஷ மற்றும் மின்சக்தி, சக்திவலு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இலங்கை மின்சார சபை, இலங்கை பேண்தகு சக்திவலு அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டதுடன், அந்த நிறுவனங்களில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான துரித தீர்வுகள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மின் உற்பத்தித் துறையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் புதிய செயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய சாத்திய வள அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின் உற்பத்தி துறைசார்ந்த முன்மொழிவுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அந்த முன்மொழிவுகளுக்கு மின்சக்தி அமைச்சின் அதிகாரிகள் பூரண இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் மின்சக்தித் தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் அதற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் வெளிநாடுகளைத் தெளிவுபடுத்தி புதிய செயற்திட்டங்களுக்கான முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு உரிய பெறுகை நடைமுறைகளை பின்பற்றுதல் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

கடந்த சில வருடங்களில் மின்உற்பத்தி துறை தொடர்பாக வெளிநாடுகளுடன் பல புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும், அவற்றுள் பெரும்பாலானவை அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தமாக அமையாது தனியார் நிறுவனங்க ளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவே காணப்படுகின்றன. அதனால் அந்தச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய கற்கைகளை மேற்கொண்டு நாட்டிற்கு நன்மை பயக்கும் வகையில் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (ஐ)

16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகப் பிரவேசம்
12 • 10 • 1934

விண்ணகப் பிரவேசம்
12 • 01 • 2004



அமரர் திரு. கணபதிப்பிள்ளை திருச்செல்வம்

(சுதுமலை மேற்கு மானிப்பாய்)
அதிபர் Chemax Prints (Pvt) Ltd.
திதி: 17-12-2019

**மார்கழி மாத அபரபட்ஷ (தேய்பிறை) சஷ்டி**

நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பதினாறு
ஆனாலும் உங்கள் நினைவலைகளுடன் வாழும் எம்
நெஞ்சங்கள் ஆறவில்லை தங்கள் ஆத்மா சாந்தியடைய
சுதுமலை புவனேஸ்வரி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.
தங்களின் நினைவோடு வாழும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் நண்பர்கள், ஊழியர்கள்

இல. 7, சாள்ஸ் பிளேஸ், தெஹிவளை.

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 06.11.2019 புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது செல்வப்புதல்வி

**சுரேஸ் உலகேந்திரன் பிரியங்கா**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு சிவப்பேறு குறித்த கிரியை நிகழ்வுகள் எதிர்வரும் 18.12.2019 புதன்கிழமை அன்று கீரிமலையில் 9.00 மணியளவில் நடைபெறுவதுடன் 20.12.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 03.01.2011
உதிர்வு 06.11.2019

இல.361, 3 ஆம் ஒழுங்கை,
திருநாவற்குளம்,
வவுனியா.
(CS 00622)(14.17)

குடும்பத்தினர்.
077 939 7371/
077 457 6948

# மாகாணப் பாடசாலைக்கான அதிகாரங்களைப் பறிக்காதீர்

## விஜயகலா எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு கிழக்கில் தேசிய பாடசாலைகள் அமைக்கும் விடயத்தில் மாகாண சபைகளின் அதிகாரங்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம். மாகாணங்களுக்கான அதிகாரங்களை மத்திய அரசின் கீழ் கொண்டுவரும் செயற்பாடுகள் வடக்குகிழக்கைப்பொறுத்தவரையில்இடம் பெறக்கூடாது என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் சகல வசதிகளையும் கொண்ட 3 பாடசாலைகளை அபிவிருத்திசெய்து அந்தப்பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மேம்படுத்துவதன்மூலம்தேசியபாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 வரையில் அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தைநடைமுறைப்படுத்துவதற்குஅமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குகிழக்கில்அதிகாரங்களுக்குப்பங்கம் ஏற்படாதவகையில்தேசியபாடசாலைகளுக்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். தொகுதிக்கு ஒரு பாடசாலையைத் தெரிவுசெய்து அதற்கான வளத்தைப் பெருக்கி அதனை தேசிய பாடசாலையாக மாற்ற முயற்சி எடுத்திருந்தோம். ஆனாலும் புத்திஜீவிகளின் ஆலோசனை காரணமாக அந்தச்செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தோம்.

தற்போது இடைக்கால அரசு பிரதேசசெயலர் பிரிவுகள்தோறும் 3 பாடசாலைகளைத்தெரிவுசெய்து தேசிய பாடசாலைகளாக மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது. வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் இத்தகைய செயற்பாடு மாகாணங்களின் அதிகாரத்தை கொழும்பு அரசு பறிப்பதாகவே அமையும். எனவே தொகுதிக்கு ஒரு பாடசாலையைத் தெரிவு செய்து அவற்றின் வளங்களைப் பெருக்கி தேசிய பாடசாலையாக மாற்றுவது குறித்து பரிசீலிக்கலாம். - என்றார். (கு)

Canada VISA கூடிய விரைவில் உங்கள் கைகளில்

பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
O/L உடன் விண்ணப்பிக்கலாம் • Without IELTS
சகல வசதிகளும் செய்து தரப்படும்



Mr. P. Jegan
Director-Flex Institute

Sponsor Letters
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

Hotline: 0777-761 346

நிராகரிக்கப்பட்ட விசாக்கள்
மிக விரைவில் பெற்றுத்தரப்படும்.

விசா பெற்றுக் கொண்ட சிலர்




flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06.
flexinstitute04@gmail.com www.flexinstitute.lk

10 வருட கால நம்பிக்கையான சேவை

# மயங்கி அடுப்பில் வீழ்ந்தார் முதியவர்

சாவகச்சேரி, டிசெ.15

சமையலில் ஈடுபட்ட 88 வயது முதியவர்மயங்கிஅடுப்பில்வீழ்ந்ததில் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்றது.

எரிகாயங்களுக்கு இலக்கான முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

## VACANCY
## MARKETING ASSISTANT

Prestigious educational institute seeks marketing assistant. Established since 1996, IIS City Campus, Jaffna will celebrate its 25th anniversary in 2020 as a provider of education excellence. The company welcomes enthusiastic candidates with proven marketing experience in the education sector.

### Requirements

* Excellent verbel,written and communication skills in English.
* Strong organizational and time management skills to manage multiple projects simultaneously.
* Ability to wotk indepcntly,self - motivated and adaptable , and possessing a positive attitute.
* Desire to be proactive and create a positive experience for others.
* Creative thinker and problem solver; ability to think critically.
* Demonstrated proficiency with Ms Office applications.
* Prior Experiences working in a diverse, cross-cultural environment.
* Flexibility in work hours is essential.

WALK IN INTERVIEW
Date : 20/12/2019
Time: 10.00 am

Director HR,
IIS CITY CAMPUS
441.Clock Tower Road,jaffna
021 222 8060 / 0717774666
www.iis.edu.lk


## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் கந்தையா
**குணபாலசிங்கம்**
(ஓய்வுபெற்ற சாரதி, தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் ஆனையிறவு)
திதி:- அபரபக்க சதுர்த்தி (15.12.2019)



பத்து ஆண்டுகள் சென்றதுவோ
பாசமிகு தந்தை எம்மைப் பிரிந்து!
அன்பு தவழும் உம் முகத்தை
அவனியில் தேடுகிறோம் நாள்தோறும்!
அப்பா என்று நாம் அழைத்தால்
எங்கிருந்தாலும் எம்மிடம் ஓடி
வருவீர்கள் நொடிப்பொழுதில்
எம்மைக்காண
பத்தாண்டுகள் நாம் அழைத்தும்
கேட்கவில்லையோ அப்பா உங்களுக்கு!
மீண்டும் நாம் காண்போமா
உம் அன்பு வதனத்தை!
காத்திருக்கின்றோம் விழிநீரோடு நாம் உமக்காக!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

மலர்வு 13.03.1940 உதிர்வு 05.12.2009

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(AKN/662)(11.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி நி.மயூரா அவர்களின்
பாசமிகு தாயார்
**திருமதி சிவறஞ்சினி மகேஸ்வரன்**
(ஓய்வு பெற்ற பிரதி அதிபர் - வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்)



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச்சமூகம்**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி**
(CS 29938)(14.17)


## நிஷாதி பியூட்டிப்பார்லர் and அக்கடமி
### அழகுக்கலை நிபுணர் நிஷாதி பெரேராவினால்

மணப்பெண்கள் அலங்காரம் செய்தல், அழகுக்கலை சிகை அலங்காரம் செய்தல், 06 மாதம் பயிற்சிப் பாடநெறிக்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளல்.

**பாடநெறிக்கான விவரம்:**
- மணப்பெண்கள் அலங்காரம் (இந்து, கிறிஸ்ரியன், முஸ்லீம்)
- மேக்கப் - சருமத்தின் நிறத்திற்கேற்ப எந்தவொரு சருமத்திற்கும் மேக்கப் செய்யும் பாடநெறி
- பேஷல் மற்றும் விஷேசமான பேஷல், கணினி மூலம்
- பருக்கள் சருமத்திற்கு சிகிச்சை செய்தல்
- மெனிகியூர் and பெடிகியூ
- கண்ணிமை சரிசெய்தல் - த்ரெடின்
- வெக்சின் - கைகால்களில் உரோமம் நீக்குதல்
- கெயாக்கட்டிங் - தலைமயிர் வெட்டுதல்
- கெயாசெட்டிங்
- ஒயில் ரீட்மென்ட்
- தலை அலங்காரம் செய்தல்
- ஸ்ரேட்டிங் - ரிலக்சின் - ரீபொன்டிங்-பேமிங்
- சிகை வர்ணமயமாக்கல்

TVEC பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆதலால் அரச அங்கீகாரம் பெற்ற பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

பாடநெறிக் கட்டணம் 24000/=
(பகுதிக்கட்டணமாக செலுத்த முடியும்)
பதிவுக்கட்டணம் 1000/=

✓ போன்ற அனைத்து தெரிவுகளையும் தங்களுக்கு பயிற்றுவிக்கப்படும். மேலும் அலகுகளை பயிற்சிகள் தனித்தனியாக பயிற்றுவிக்கப்படும்.
✓ பயிற்சி காலங்களில் தேவையான பொருட்கள் அனைத்தும் இலவசமாகவும், வேறு கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.
✓ ஒரு தடவைகளில் மாணவர்கள் 12 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இடம் : முழங்காவில் பொலிஸ் நிலையம் முன்பாக "நிஷாதி பியூட்டிப்பார்லர்" நிலையம்
திகதி : 2019.12.22
நேரம் : மு.ப. 09.00 மணி
Phone No - 077 052 1068



## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(C.11756)



O' level பரீட்சையின் பின்னர்...
யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சியில்

**Diploma in Spoken** Full / Part time
# English

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
# IELTS

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லுவதற்கு
**IELTS A1 LIFE SKILLS**

BRITISH COLLEGE
More information 0777-596148

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel - 021- 4927113
103, Mannar Rd, Vavuniya. Tel - 024 - 4930041
A9 Road, Kilinochchi. Tel : 021-4927114


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் திருவாதவூரர்
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், மல்லாவி)



பிறப்பு 16.03.1940 இறப்பு 11.12.2019

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் திருவாதவூரர் கடந்த 11.12.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - மதியாபரணம் தம்பதிகளின் மருமகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், பொன்னம்பலம் (பிரான்ஸ்), அனுசியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜிதாவின் பாசமிகு மாமனாரும், ஜெகநாதன், வைரமுத்து, காலஞ்சென்ற அம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னரத்தினம், செல்லம்மா, காலஞ்சென்ற சத்தியமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், சரணிதாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம்.
தகவல்:
**குடும்பத்தினர்.**
(CS/29945)(11.17)
021 790 0672, 077 961 8794



## அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தல் நேற்று

முல்லைத்தீவு, டிசெ. 15

தேசத்தின் குரல் அன்ரன்பாலசிங்கத்தின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் கைவேலியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் இது நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலர் இ.கதிரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு பொதுச்சுடரை கட்சியின் செயலர் ஏற்றினார். மாவீரர் ஒருவரின் மனைவி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து மலர்வணக்கம் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி3)

## மட்டக்களப்பிலும் பாலாவுக்கு அஞ்சலி

மட்டக்களப்பு, டிசெ. 15

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலம்சென்ற மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 13ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டு அம்பாறை மாவட்ட தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் நா.தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டு அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் நா. நகுலேஸ், அந்தக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலர் ச.சாந்தன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து காலம் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் உருவப் படத்துக்கு ஈகைச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி, அகவணக்கமும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து நினைவுரைகள் நடைபெற்றன. (த)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த **13.11.2019** புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் பரராஜசிங்கம் சிவஞானம்



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று **(15.12.2019)** ஞாயிற்றுக்கிழமை காலை **11.00** மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**குடும்பத்தினர்**
**கற்பகப் பிள்ளையார் கோவிலடி**
**இணுவில் மேற்கு**

CS2995(16)17

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலஸ் லோறன்ஸ்

**(ஓய்வுபெற்ற பொறியியலாளர், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)**



தோற்றம் 01.11.1940 மறைவு 13.12.2019

இளவாலை சென்.ஜேம்ஸ் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலஸ் லோறன்ஸ் கடந்த (13.12.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ் ஆரோக்கியம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான அருளப்பு - மேரி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகி யோசேப்பின் அவர்களின் அன்புக்கணவரும் றுபினஸ் (நிர்வாக உத்தியோகத்தர் - தாய் லாந்து தூதராலயம், கொழும்பு), அனிமரியற்றா, ஜோ இக்னேசியஸ், ஜெனி யூலிற்றா (அமெரிக்கா), ஜோண் லம்பேட் (இத்தாலி), ஜேம்ஸ்கிறிஸ்ரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காமெலிற்றா சுகந்தினி (அபிவிருத்தி உத்தி யோகத்தர், தெல்லிப்பளை பிரதேச செயலகம்), பிரான்சிஸ் சேவியர், மேரி டனிற்றா (தாதிய உத்தியோகத்தர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலை), யோண்டி பிறிற்ரோ (அமெரிக்கா), வொல்காயூலி (இத்தாலி) ஆகியோ ரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற யூலியன் மற்றும் கிரேசியா, நோபேட், டிலுக்ஷன், சயோனா, பெலினா, டறிஸ்ரன், ஸேவான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2019) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் இளவாலை புனிதயாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**சென் ஜேம்ஸ் வீதி, இளவாலை. 077 967 2740, 077 723 7116, 077 132 0748**



### பரமலிங்கம் நரேந்திரராசா

அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் நரேந்திரராசா கடந்த (13.12.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் பஞ்சவர்ணம் தம்பதிகளின் அன்பு மகனும் கமலாதேவியின் பாசமிகு கணவரும் ஜெயவதனா, செந்தூரன், மயூரன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூலேந்திரராஜா, தனலங்க (இந்தியா), புஸ்பநேரு, மகேந்திரராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.30 மணியளவில் அளவெட்டி வீரசைவ இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**பன்னாலை, அளவெட்டி 077 990 6860**

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 29 - 05 - 1952



மறைவு 14 - 12 - 2019

### கணபதிப்பிள்ளை நடராசா

**(நல்லூர் அரசடி வீதி, பழமுதிர்ச்சோலை முன்னாள் உரிமையாளர்)**

யா/ தாவடி, வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா (நல்லூர் அரசடி வீதி பழமுதிர்ச்சோலை முன்னாள் உரிமையாளர்) நேற்று (14.12.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை யோகம்மா தம்பதிகளின் மருமகனும் சுந்தரேஸ்வரியின் (மாம்பழம்) அன்பு கணவரும் அகிலன் (படவரைஞர், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், கைதடி) ஆரூரன் (வைத்தியர் - கிளிநொச்சி பொது வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு தந்தையாரும் நளின மயூரதி (ஆசிரியை, யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை), தயானி (வைத்தியர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தியாகராசா, பாக்கியலக்சுமி (தேவி) மற்றும் சரஸ்வதி (வேவி), ஆனந்தராசா (லண்டன்), மனோரஞ்சிதம் (ராணி), ரதிதேவி( ஆசிரியை, யா/ தாவடி இந்துக்கலவன் பாடசாலை) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, அருமைத்துரை மற்றும் ஜெகசோதி, சின்னத்துரை, ஜீவா (லண்டன்) யோகேந்திரன், சிவகுமார் , சிவயோகநாதன் (லண்டன்), சிவகுமார் (குமார் - நோர்வே), சிவகௌரி, சிவானந்தன் ஆகியோரின் மைத்துனரும் கிஷானிகா, ரித்விகன், வர்னிஷா, நயனிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2019) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**021 221 5619** **தகவல்: குடும்பத்தினர்**



### தில்லையம்பலம் வன்னியசிங்கம்

***(ஓய்வுநிலை பிரதம லிகிதர்)***

இல.**24, 1**ஆம் ஒழுங்கை சங்கத்தானையைப் பிறப்பிடமாகக் கொண்ட தில்லையம்பலம் வன்னியசிங்கம் கடந்த **(13.12.2019)** வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - பகவதி தம்தியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விநாயமூர்த்தி- கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை - சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் பரந்தாமன் (சிரேஷ்ட விரிவுரையாளர், DELT- யாழ் பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி பரசுராமன் (கனடா), கர்ணன் (MBC Networks (PVT) LTD) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌரி (அதிபர், யா/கல்வியங்காடு இ.த.க பாடசாலை), வைத்தியகலாநிதி ஜெயந்தினி (தோற்சிகிச்சை நிபுணர்- அவுஸ்ரேலியா), மகிதினி (ஆசிரியை- சென்மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம்- கொழும்பு- **04**) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மாதுமை, அக்ஷயன், அபிஸ்ணா, அர்ஜீன், வரோதயன், ஹரிஸ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பரமானந்தம் அவர்களின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மைத்துனரும் நளாயினி (UK), குமுதினி (UK), நந்தகுமார் (கனடா), ரவி (UK) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் **(17.11.2019)** செவ்வாய்க்கிழமை காலை **10** மணியளவில் இல.**15/2,** தாளையடிலேன், திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.15/2, தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி.** **தகவல்: குடும்பத்தினர்.**

**077 528 6386, 021 222 7440**

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 .. 12 .. 1939

மறைவு 14 .. 12 .. 2019

### திருமதி ரேவதி பத்மநாதன்

"நவவாசா", ஏழாம் கட்டை ஒழுங்கை, மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி ரேவதி பத்மநாதன் நேற்று **(14.12.2019)** சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி செல்லத்துரை பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (சேவையர்), சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், ஜெகநாதன், அருந்ததி, செல்வ நாதன், தமயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.தயாமதி, Dr.சதா னந்தன், Dr.பவானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கரன், மாதுரி, சுவேதா, மேகா, பவித்திரா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(16.12.2019)**திங்கட்கிழமை முற்பகல் **11.30** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 1.00 மணியவில் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**ஏழாம் கட்டை ஒழுங்கை,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 021 224 1061**

CS10890(16/17)

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் மகாலிங்கம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாலிங்கம் நேற்று **(14.12.2019)** சனிக்கிழ்மை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் அன்னப்பிள்ளை தம்பதி யினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, அன்னப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பார்த்தீபன் (லண்டன்), வாகீசன் (லண்டன்), மாலினி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யாழினி, புஸ்பபதி, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனலட்சுமி (லண்டன்), அன்னலட்சுமி காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பிரவீன், கபிஷன், கரீஸ், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(16.12.2019)** திங்கட்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இலங்கை வங்கி முன்வீதி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 021 224 0194**

J10889(16/17)

## மரண அறிவித்தல்

### அமரர் ஞானஏந்தல் திருமதி தனேஸ்வரி முத்துக்குமாரு
### (சுதுமலை சகோதரிகள்)



மலேசியாவை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனேஸ்வரி முத்துக்குமாரு நேற்று (14.12.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கா.சி .செ. முத்துக்குமாரு (பிரசித்த நெத்தாரிசு) அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி நாகலிங்கம் மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தில்லைநாயகி - பெருமாள்பிள்ளையின் பாசமிகு சகோதரியும் ஜெயலக்ஷிமி (ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி) இராதா கிருஷ்ணன் (வலயக்கல்வி பணிப்பாளர் - வவுனியா தெற்கு வலயம்), மகாலக்ஷிமி (பாமா- சங்கீத ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), ஜெனலக்ஷிமி(ஜேர்மன்), அனந்தகிருஷ்ணன் (உரிமையாளர் - TRINTEC Computer Pvt Ltd - Trincomalee), காலஞ்சென்றவர்களான கோபாலகிருஷ்ணன், சௌந்தரகிருஷ்ணன் ஆகியோரின் தாயாரும் ரஜினி (பிரான்ஸ்), சிலோஜினி (லண்டன்) ஆகியோரின் பெரிய தாயும், வரதராஜன், கேந்திரேஸ்வரி (பிரதி அதிபர் - ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி - திருகோணமலை), வசந்தகுமார் (ஜேர்மனி), மாதுமை, பிரபாகரன் (பிரான்ஸ்), சுவேந்திரதாஸ் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் சைதன்யா - றொசாந்தன் (கனடா), காலஞ் சென்ற கானவர்மன், சைந்தவி, கானசோபன் (பிரா ன்ஸ்), கௌதமன் (உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி), சாகித்யா (வைத்தியர் - யாழ் போதனா வைத்திய சாலை), மதுஷாகரன் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் - பொறியியல் பீடம்), ஜெயபிறியா, கிருபாகரன் (உரிமையாளர் - கரன் வோச் & றேடியோ), சந்துருகேஷன் (இலங்கைவங்கி - முள்ளியவளை) மிதுஷா - மிதுலா - ஆரணி (ஜேர்மன்), மதனகிருஷ்ணன், அபிநயகிருஷ்ணன் (திரு கோணமலை), பிரசாந் - ஜர்ஷிகா - அபிவர்ஷன் (லண்டன்) மற்றும் தர்ஷினி -, பிரகாசினி - கரிஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் சரன், லக்ஷகி ஆகி யோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2019) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (6/7, துர்க்கா ஹோம் தொம்பை வீதி உடுவில் கிழக்கு, சுன்னாகம்) நடைபெற்று பூதவுட்ல் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் கிழக்கு, சுன்னாகம்**

**தகவல் : குடும்பத்தினர்**

**தொடர்பு:- மு. இராதாகிருஷ்ணன் 077 365 3822, 077 354 8372, 021 224 2306**


VAT வரி சலுகை உங்களுக்கு
விசேட விலைக்கழிவுகள்
மாற்றுமுறை விலைக்கழிவு
இலகுதவணைக் கொடுப்பனவு
சிங்கர் பொருட்களின் விலை குறைந்துள்ளது
SINGER
பெரிதாக சிந்தியுங்கள்
சிறிதாகச் செலுத்துங்கள்
SINGER®
இச்சலுகைகளைப் பெற்றிட உடனடியாக உங்கள் அருகிலுள்ள
சிங்கர் காட்சியறைக்கு விரைந்திடுங்கள்

## பணிப்பெண் தேவை

யாழ்.பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் மதியம். இரவு (இரண்டுவேளை) உணவு தயாரிப்பதற்குப் பெண் ஒருவர் தேவை.
(வேலைநேரம் காலை 10 - 12 மணி. மாலை 5 - 7 மணி)
இடைப்பட்ட நேரத்தில் வீடு சென்று வரலாம்.
நாள் ஒன்றுக்கு 500/- சம்பளம்
வேலை நபர் ஒருவருக்கு உணவு தயாரித்தல்.
1½, 2½ வயதுடைய குழந்தைகளுக்கு உணவு ஊட்டிவிடல் போன்றவற்றுக்காகப் பணிப்பெண் தேவை.

**077 711 1999**

(CS/29943)(11,17)

## For Sale

Brand New (Whirl Pool) Refrigerator used only Three Months For Sale.
Contact- Siva Chunnakam South Chunnakam. No Brokers.

**076 741 0470**

(CS/29939)(11,17)

## Study in ROMANIA

**Dip. / Ad.Dip. / BSc. / MSc.**

- UGC Approved Universities & Colleges
- Low pament methodes

இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையம்
17 வருடகால நம்பகமான சேவை சட்டரீதியான ஆலோசனைகள்
படிப்பதோடு தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கள்

முழு செலவினம் ரூ. 980,000 BSc. MSc.

Only the Application FEE need to pay before FEB 2020

**New Way Skyline**
International College Private Limited

Company Reg. PV 00210551
22 Srimahabodhi Road, Dehiwala
011 5 944 143
077 33 47 332






சிறப்பிதழ்
15.12.2019
சூரியகாந்தி




அர்த்தமிழக்கும்
ஜனநாயகம்

12

■ அருண்பாக்யா

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எப்படித் தோற்றது என்ற விடயம் பற்றித் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகிறது அந்தக் கட்சி. இந்தத் தொடரில் 9.12.2019 அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஒன்றுகூடி ஆராய்தல் நடந்தது. அதில்,"பௌத்த அடிப்படைவாதத்தைக் கட்டியெழுப்பிப் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்குத் தயாராக வேண்டும். பௌத்த அடிப்படை வாதிகளான மத்திய வர்க்கத்தினரும் இளைஞர் யுவதிகளுமே இந்தத் தேர்தலில் எமக்கு வாக்களிக்கவில்லை" என்றிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இவ்விரு கருவிகளும் தான் கோத்தாபய ராஜபக்ஷவின் வெற்றிக்கு வித்திட்டன என்று கூறப்பட்டா லும் இந்தக் காரணங்களையும் தாண்டி இஸ்லாமிய அடிப்படைவாதிகளும், தமிழ்ப் பிரிவினைவாதிகளும், இலங்கை ஒரு பௌத்த நாடல்ல என்று கூறிய மங்கள சமரவீர போன்றவர்களும்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்குக் காரணமாக அமைந்தனர் என்கின்றது ராஜபக்ஷ தரப்பு.





# பௌத்தம் இல்லா அரசியல் வீண்!

# பெரும்பான்மைச் சிங்கள மக்களின் விருப்பத்துக்கு எதிராக எதுவும் நடக்காது என்பதையே ஜனாதிபதி கோத்தாபயவின் வெற்றி நிரூபித்திருக்கிறது.



ரணில் விக்கிரமசிங்க பௌத்த அடிப்படைவாதத்தைக் கையிலெடுக்க முற்படுவது மேற்படி மூன்று தரப்பினருக்கும் (ராஜபக்ஷ தரப்பு குறிப்பிடுகின்ற இஸ்லாமிய அடிப்படைவாதிகள், தமிழ்ப் பிரிவினைவாதிகள், இலங்கை ஒரு பௌத்த நாடல்ல என்று கூறிய மங்கள சமரவீர போன்றவர்கள்) தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கடந்த தேர்தலில் போட்டியிட்ட சஜித் பிரேமதாச வெற்றிபெற்றால் தமக்கு நன்மை என நினைத்த தமிழ், முஸ்லிம் தலைவர்களுக்கு தாங்கள் கடந்த நான்கரை ஆண்டுகளாக பௌத்த நீறு பூத்த நெருப்பாகவிருந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருங்கி இருந்திருக்கிறோம் என்பது இதன் மூலம் அதிர்ச்சியை ஏற்படுத்தும். கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் அருமை பெருமைகளை வடக்குக் கிழக்கு முழுவதும் எடுத்துச் சென்று சஜித் பிரேமதாசவை வடக்குக் கிழக்கில் வெற்றி பெற வைக்கப்பட்டது. தற்போது தோல்விக்கான காரணம் பற்றி ஆராய்ந்த வேளை, நான் பொறுப்பெடுத்துப் பரப்புரை செய்த வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமோக வெற்றியீட்டப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் பொறுப்பெடுத்த ஏழு மாகாணங்களில்தான் சஜித் தோல்வி அடைந்திருக்கிறார் எனவே தோல்விக்கான பொறுப்பை நான் ஏற்கப்போவதில்லை என்று ரணில் குறிப்பிட்டிருக்கிறார்.

### ஐ.தே.கவுக்குள் முரண்பாடுகள்

தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள முரண்பாடுகள் மக்களுக்குத் தெரியவந்தன. அதற்கு முன்னர் கூட அவர்களிடம் அரச தலைவர் தேர்தல் தொடர்பான ஒருமித்த கருத்தோ ஒருங்கிணைந்த ஊடகச் செயற்பாடுகளோ இருக்கவில்லை என்பதும், தெற்கில் ஏற்கனவே தமக்கென்றிருந்த தொகுதிகளில்கூட மக்கள் மாறி வாக்களித்திருக்கிறார்கள் என்பதும் வெளிப்பட்டிருக்கிறது. தேர்தலுக்குச் செலவிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் போதிய பணமிருக்கவில்லை என்ற நிலையில் இராணுவ ஆட்சி, வெள்ளைவான் கடத்தல், குடும்ப ஆட்சி ஆகிய விடயங்களை எதிர்த் தரப்பினருக்கு எதிராக முன்வைத்தபோதிலும் அது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

### தனித்தனியாக தமிழ், முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்தமை

ராஜபக்ஷ தரப்பு வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அமோக வெற்றியைப் பெறுவது என்பதையும் நாடளாவிய ரீதியில் 55 வீத வாக்குகளைப் பெறமுடியும் என்பதையும் உறுதிப்படுத்திய பின்னர் தமிழ், முஸ்லிம் தலைவர்களைத் தனித்தனியாகச் சந்தித்துத் தமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டிருக்கிறார்கள். தமிழ், முஸ்லிம் தரப்புகள் தமக்கு ஆதரவளிக்காது என்று அவர்களுக்கு நன்கு தெரிந்திருப்பினும் அவ்வாறு செய்ததன் நோக்கம் என்னவெனில் இந்தத் தரப்புகள் நேரடியாகத் தம்மை எதிர்ப்பதை உறுதிப்படுத்துவதுடன் தெற்கில் தமக்குள்ள ஆதரவுத்தளத்தைப் பலப்படுத்துவதற்குமாகும். தேர்தலுக்குப் பின்னர் இந்த இரண்டு தரப்புகளையும் எவ்வாறு கையாள்வது என்ற மாற்றுத் திட்டமும் ராஜபக்ஷ தரப்பினரிடம் இருந்தது. ஆனால் தமது ஆதரவின்றி எந்தவொரு வேட்பாளரும் ஜனாதிபதி பதவிக்கு வரமுடியாது என்பதை மந்திரமாகத் திரும்பத் திரும்பத் தமிழ், முஸ்லிம் தரப்புகள் ஓதிக்கொண்டிருந்தார்கள். இதன் உச்சமாகத் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அறிக்கைகளையும் விட்டனர்.

அவையே சிங்கள மக்களின் வாக்குகளைக் கோத்தாபய ராஜபக்ஷவின் காலடியில் குவிப்பதற்குப் போதுமானவையாக இருந்தன.

### பொதுத் தேர்தலுக்கான முன்னெடுப்புகள்

மிகக் குறுகிய காலமே பொதுத் தேர்தலுக்கு இருப்பதால் ரணில் விக்கிரமசிங்க பௌத்த அடிப்படை வாதத்தைக் கையிலெடுத்திருக்கிறார். தமிழ்க் கட்சிகள் மனித உரிமைகள் பற்றியும் அரசியல் தீர்வு பற்றியும் பேச ஆரம்பித்திருக்கின்றன. தமிழ்த் தேசியம் பேசுபவர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை. இந்த நாட்டின் மூத்த குடி மக்கள் நாம் எனக் கதையளக்கும் தமிழரிடம் வினைத்திறன் இல்லை என்பதை நாளுக்கு நாள் உறுதிப்படுத்துகின்றனர். அவர்கள் மலையாக நம்பியிருந்த ரணிலும் பௌத்த அடிப்படை வாதத்தைக் கையிலெடுத்திருப்பது வடக்குக் கிழக்கில் ஏட்டிக்குப் போட்டியாக விகாரைகளைக் கட்டுவதற்குக் களம் அமைக்கலாம்.

### கோத்தாபய ராஜபக்ஷவின் வினைத்திறன்

கோத்தாபயராஜபக்ஷஜனாதிபதியாகப் பதவி ஏற்றதன் பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப்போல குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். விளம்பரங்கள், பதாகைகள் என எதையும் காட்சிப்படுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அலுவலகங்களில் கூட இலங்கைக்கான இலட்சினை மாத்திரம் இருக்கவேண்டுமே தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது என்று வரையறுத்துள்ளார். இதன் மூலம் வடக்குக் கிழக்கிலும் இலங்கையர் என்ற ஒரு கலாசார அடையாளத்தை மட்டுமே பேண முடியும். குப்பைகளை அகற்றிய பின் பாடசாலைச் சுவர்கள், நகரங்களின் சுவர்கள் என எல்லா இடங்களிலும் ஓவியங்களை வரைவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தச் சித்திரங்களில் பௌத்த விகாரைகள், புராதன மன்னர்கள், அநகாரிக தர்மபால, பௌத்த பிக்குகள், சிங்கள கலாசார வெளிப்பாடுகள், இயற்கைச் சூழலைப் பேணும் விடயதானங்கள் எனப் பல கருத்துருவாக்கங்கள் உள்ளடக்கப்பட்டுத் திட்டமிட்டு வரைந்து வருகின்றனர். இந்த ஓவியங்களை மறைத்து வேறு யாரும் தமது தேர்தல் சுவரொட்டிகளை ஒட்ட முடியாது ஆனால் மக்களின் மனதில் அந்த ஓவியங்களின் பின்னணியில் அரச தலைவர் கோத்தாபயவின் படம் மனதில் தெரியும். அதை வைத்துத் தேர்தலுக்கு முன்னர் வடக்குக் கிழக்குத் தவிர ஏனைய மாகாணங்களில் இந்த ஓவியங்களை வரைந்து முடிக்க வாய்ப்புண்டு.

### மக்களுக்கான சலுகைகள்

தேர்தலுக்கான முன்னெடுப்புகளில் மஹிந்த தரப்பு புதிதாக எதையும் செய்யவில்லை. எனினும் ஏற்கனவே நல்லாட்சி அரசு நடைமுறைப்படுத்தியிருந்த வரி மற்றும் அதிகரித்த விலைகளைக் குறைப்பதன் மூலம் மக்களைத் திருப்திப்படுத்த முனைகிறது. அதன் மூலம் கடந்த நான்கரை வருட காலத்தில் வீணாக இவ்வளவு பணத்தைச் செலவிட்டிருக்கிறோமே என்ற மனநிலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. சாதாரண அலுவலகங்கள் தொடக்கம் அமைச்சரவை வரை கண்காணிக்கப்பட்டு மேலதிக ஊழியர்கள், மேலதிக பண விரயம் என்பன தவிர்க்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றிய 2ஆயிரத்து 500 ஊழியர்கள் 250 ஊழியர்களாகக் குறைக்கப்பட்டுள்ளனர். வீடமைப்பு அதிகார சபையில் 650 பேர் பணியாற்றக்கூடிய வசதிகள் மட்டும் உள்ள நிலையில் 2ஆயிரத்து 500பேருக்கு மேல் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றசெய்தியும்வெளிவந்துள்ளது.

### தமிழரின் நிலை

தேர்தலுக்கு முன் தமக்கென ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட முடியாத நிலை தமிழருக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தளவுக்குத் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகள் வலுத்துள்ளன. இந்த நிலையில் வெளிப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் பௌத்த அடிப்படைவாதக் கருத்து இவர்களது நிலைமையை மேலும் மோசமடைய வைக்கும். முஸ்லிம்கள் தொடர்பான ராஜபக்ஷ அணியினரின் அணுகுமுறையும் ரணிலின் பௌத்த அடிப்படைவாதக் கருத்துகளும் சிறுபான்மையினர் சுதந்திரமாக முடிவெடுப்பதைத் தடை செய்யும். இதைவிட வடக்குக் கிழக்கில் தமக்குச் சார்பான தமிழ் முஸ்லிம் தலைவர்களை உருவாக்குவதிலும் மஹிந்த தரப்பு கவனம் செலுத்தி வருகிறது.

ராஜபக்ஷ தரப்பினர் தம்மால் புதிதாகத் தயார்ப்படுத்தப்படும் தமிழர்களுக்கே அமைச்சுப் பதவிகளை வழங்க விரும்புவர். வருடக் கணக்கில் பிரிந்து செயற்பட்டு வருகின்ற தமிழ்க் கட்சிகள் இதில் கவனம்பெறாது. கூட்டமைப்பின் அரசியல் போக்குப் பிழையானது என்று கூறி அந்தக் கட்சிக்கு எதிராகக் களமிறங்கிய கட்சிகள் எல்லாம் சிதைந்து இறுதியில் விக்னேஸ்வரனும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் எஞ்சியிருந்தார்கள். அவ்விருவருக்கும் இடையில்கூட ஒரு யாப்பையோ, புரிந்துணர்வு ஒப்பந்தமோ மேற்கொள்ள முடியாத அளவுக்கு ஒவ்வாமை ஏற்பட்டிருக்கிறது.



இலங்கையின் இரண்டு முதன்மைக் கட்சிகளும் பௌத்த சிங்கள அடிப்படை வாதத்தையே விரும்புகின்றன என்பது சிறுபான்மை இனங்களின் சுயாதிபத்தியத்தைப் பாதிக்கச் செய்யும்.

நாட்டின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதற்காகவும், வெற்றியீட்டுவதற்காகவும் இரண்டு முதன்மைக் கட்சிகளும் பௌத்த அடிப்படைவாதத்தை மேலும் மேலும் பற்றிப் பிடிப்பதைத் தவிர அவைகளிடம் வேறு வழிகள் இருக்கப்போவதில்லை.

இங்கு பெரும்பான்மைச் சிங்கள மக்களின் விருப்பத்துக்கு எதிராக எதுவும் நடக்காது என்பதையே ஜனாதிபதி கோத்தாபயவின் வெற்றி நிரூபித்திருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் பௌத்தம் இல்லாத நாடு பாழ், பௌத்தம் இல்லாத அரசியல் வீண் என்ற கருத்தே வலுவானதாக இருக்க முடியும்.




# புரட்சிகளால் பாதிப்படைகின்றது தமிழினத்தின் வாழ்க்கைப்போக்கு

மருத்துவர் சி. யமுனாநந்தா.

இந்தியாவின் தொடருந்துப் பாதை, இலங்கையின் தொடருந்துப் பாதை, தென்னாபிரிக்காவின் தொடருந்துப் பாதை, மலேசியாவின் தொடருந்துப் பாதை ஆகியன கைத்தொழில் புரட்சியில் வளர்ச்சியின் ஒழுங்குகளாக அமைகின்றன. தொடருந்துகளின் பயணத்தின் நிலையையும் கப்பல் பயணங்களின் நிலையையும் பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் எழுச்சியையும் இன்றுவரை எடுத்துக்காட்டுகின்றன இவை. இந்தச் சமாந்தரக்கோடுகளின் அடிப்படைக்குத் தமிழனின் அதீத உழைப்பே காரணமாக அமைந்துள்ளது.

### இந்தியாவில் பிரித்தானியர்


ஆங்கிலேயர் இந்தியாவின் தமிழகத்தைச் சூறையாடியபோது ஆளுநரை நியமித்துத் தமிழகத்தின் சொத்துக்களைப் பிரித்தானியாவுக்குக் கப்பலில் கடத்தினர். தமிழகத்தின் நீர்ப்பாசன முறைகள் முகாமைப்படுத்தாது விடப்பட்டுப் பஞ்சம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். மெல்ல மெல்ல ஆங்கிலேயருக்குச் சேவகம் செய்யும் குடிமக்களாக மாற்றப்பட்டனர். கட்டாயப் புலம்பெயர்வுக் குள்ளாகினர். ஒரு சிலருக்கு ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டு, அவர்களால் ஏனைய தமிழ் மக்கள் அடிமைகளாக மாற்றப்பட்டனர். வயல் நிலங்கள், காடுகள் என்பன தேயிலை, இறப்பர் தோட்டங்களாக மாற்றப்பட்டன. தமிழகத்தில் தொடருந்துப் பாதை தமிழர்களால் போடப்பட்டது. பின்னர் அதில் தமிழர்கள் கூலிகளாகப் பணியாற்றினர். அவற்றில் வேலை செய்ய வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். கூலி வேலை செய்வதற்குத் தமிழர்களை ஆங்கிலேயர் பழக்கப்படுத்தத் தொடங்கினர். அவர்களைக் கண்காணிப்பதற்குக் கங்காணி என்ற வேலையையும் உருவாக்கினர். இவ்வாறு கூலி வேலைக்காகவே தொடருந்துகளில் கிராமம் கிராமமாக மக்கள் ஏற்றப்பட்டு இராமேஸ்வரம் வழியே இலங்கைக்கும், சென்னை வழியே மலேசியா, தென்னாபிரிக்காவுக்கும் அனுப்பப்பட்டனர்.

### இராணுவத்தின் கண்காணிப்பில் மக்கள்

இலங்கை, மலேசியா, தென்னாபிரிக்கா, மொறிசியஸ் ஆகிய நாடுகளில் தொடருந்துப் பாதை அமைத்தலில் இருந்து, தேயிலைத் தோட்டம், இறப்பர் தோட்டம், கரும்புத் தோட்டம், சுரங்கத் தொழில் என்பவற்றில் தமிழர்களை ஈடுபடுத்துவதற்காகப் பிரித்தானிய இராணுவம் கடமையில் இருந்தது. கைத்தொழில் புரட்சியின் காரணமாக மிகவும் பாதகமான விளைவுகள் தமிழகத்தில் ஏற்பட்டன. தமிழரின் இராஜ்ஜியம் அழிக்கப்பட்டு, குடிமக்கள் கூலிகளாக இலங்கை, மலேசியா, மொறிசியஸ் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். பிரித்தானியரால் தமிழர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டு கூலிகளாக கப்பல்களில் நாடு கடத்தப்பட்டமையே கைத்தொழில் புரட்சியினால் தமிழினத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு ஆகும்.

### இலங்கையில் பிரித்தானியர்

பிரித்தானியரால் இலங்கையின் மலையகத்தில் உள்ள தமிழ் மக்களைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவம் உருவாக்கப்பட்டது. தியத்தலாவை இராணுவ முகாம் இத்தகையதே. இதுவே பின்னர் இலங்கையின் இராணுவமாக மாறியது. காலப்போக்கில் இவ்விரு நாடுகளின் சுதந்திரத்தைப் பிரித்தானியர் வட இந்தியரிடமும் தென்னிலங்கைச் சிங்களவரிடமும் 1948ஆம் ஆண்டுகளில் கொடுத்துவிட்டுச் சென்றனர். 1948 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட தமிழின அழிவுகள் தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாகும். அதாவது 2ஆம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் இந்தியா, பாகிஸ்தான் பிரிவடைந்த பின்னர், இந்தியா பாகிஸ்தான் எல்லைப் போரில் எல்லைப்படையில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் 'மட்ராஸ் ரெஜிமண்ட்' என்ற பெயரில் தொடருந்துகளில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டு இந்திய எல்லையில் காவலுக்கு நிற்க வைக்கப்பட்டனர். அதேபோல் இலங்கையில் விமானக் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடு என்பனவற்றின் மூலம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இவையும் புலம்பெயர் அகதி வாழ்வும் தொழில்நுட்பப் புரட்சியால் தமிழினத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளே. இந்தியாவிலுள்ள தொடருந்துப் பாதைகள் தமிழகத்தின் வளங்கள் சுரண்டப்படவும் தமிழகத்தில் ஹிந்தித் திணிப்பு ஏற்படவும் முதன்மைக் காரணிகளாக அமைகின்றன.



### தமிழர்களின் கடின உழைப்பின் வெளிப்பாடு

இலங்கையில் உள்ள தொடருந்துப் பாதைகள், குறிப்பாக மலையகத்தில் தமிழர்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக உள்ளன. இந்தத் தொடருந்துப் பாதைகளை நோக்கும்போது இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு எவ்வாறு தமிழர்கள் தமது கடின உழைப்பைத் தியாகித்துள்ளார்கள் என்பதை உய்த்தறியலாம். கைத்தொழில் புரட்சியால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொழில்நுட்பப் புரட்சியால் அழிக்கப்பட்டனர். ஆனால் இவற்றில் உச்ச விளைவை வன்னியில் ஏற்பட்ட அழிவுகள் எமக்கு உணர்த்தியுள்ளன.

### தொழில் நுட்பப் புரட்சி பாதிக்காது பார்த்துக்கொள்ள வேண்டும்


தற்போது உலகில் மின்னணுத் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட்டுள்ளது. இதன் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் உலகின் பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் மிகவும் வேகமாகவும் திசைமாறியும் பலமடைந்து வருகின்றன. சீனா, ரஷ்யா என்பன அமெரிக்காவை விடத் தகவல் தொழில் நுட்பத்தில் மேன்னிலையை அடைந்து உள்ளன. இதனால் உலகின் பாதுகாப்பு, பொருளாதாரம் என்பன சிக்கல் தன்மை மிக்கதாக மாறியுள்ளன. இத்தகைய நவீன புரட்சிச் சூழல் தமிழினத்தை மேன்மேலும் கீழ்நிலைக்குத் தள்ளாது இருப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். சீன அதிபர் இந்தியத் தலைமை அமைச்சர் ஆகியோரின் சந்திப்பு அண்மையில் தமிழகத்தில் நிகழ்ந்தது. சீனாவின் முதலீடுகள் இலங்கையில் பரிணமிக்கத் தொடங்கிவிட்டன. இந்தியாவிலும், இலங்கையிலும் சீனா மேற்கொள்ளும் தொழில்நுட்ப முதலீடு, பொருளாதார முதலீடு என்பனவும், பூகோள வெப்பமடைதலால் ஏற்படும் காலநிலை மாற்றத் தாக்கத்தின் பாதிப்பு ஆகியனவும் தமிழரின் ஏழ்மையை மேலும் அதிகரிக்கச் செய்யும். இதனால் தமிழகத்தில் இருந்தும், இலங்கையில் இருந்தும் தமிழர்கள் சீனாவின் பட்டுப்பாதையில் கூலிகளாக மீண்டும் செல்லும் சூழல் ஏற்படும். அன்று ஆங்கிலம் படித்த தமிழர்கள் எவ்வாறு கங்காணிகளாக மாறினார்களோ அவ்வாறே எதிர்காலத்தில் சீனமொழி படித்த தமிழர்கள் கண்காணிகளாக மாறுவர்.

### எதிர்வு கூறப்பட்ட சீன ஆக்கிரமிப்பு

கைத்தொழிற்புரட்சியின்போது ஐரோப்பியர் தமிழரின் சமூகவாழ்வை அழித்தனர். தொழில்நுட்பப் புரட்சியின்போது எமது அயலவர்களே எமது சமூக வாழ்வை அழித்தனர். தற்போது உருவாகியுள்ள மின்னணுத் தொழில்நுட்பப் புரட்சியில் சீனர்களால் எமது சமூக வாழ்வு சிதைவடையும். இதைத் திருகோணமலைக் கோட்டைக் கல்வெட்டிலுள்ள பாடலின் பொருளில் இருந்து அறியலாம்.

*'முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப்*
*பின்னே பறங்கி பிரிக்கவே........*
*செங்கண்ணனும்......'*

எனச் சீன ஆக்கிரமிப்பு முன்பே எதிர்வு கூறப்பட்டுள்ளது. அது தற்போது நிஜமாகின்றது. எனவே தமிழர்களாகிய நாம் எவ்வாறு அழிந்தோம் என்ற விழிப்புணர்வைப் பெற்று அதிலிருந்து பாடம் கற்பது உலகில் எம்மினம் தப்பி வாழ்வதற்கு மிகவும் அவசியமானது. கைத்தொழில் புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி, மின்னணுத் தொழில்நுட்பப் புரட்சி என்பன தமிழினத்தைக் காவு கொள்வது குறித்துக் கரிசனை கொள்வோம்.



# அர்த்தமிழக்கும் ஜனநாயகம்

சந்திரசேகர ஆசாத்

பிரிட்டனின் லண்டன் நகரில் புலம்பெயர் தமிழர்கள் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் நான்காம் நாள் மேற்கொண்ட ஓர் ஆர்ப்பாட்டப் பேரணியின்போது பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, ஆர்ப்பாட்டக்காரர்களின் கழுத்தை வெட்டப் போவதாகச் சைகை மூலம் மிரட்டியிருந்தார். இப்படியான கொலை மிரட்டல் நடவடிக்கைகள் பிரித்தானியச் சட்டங்களின் படி சட்ட விரோத நடவடிக்கை என்ற அடிப்படையில் அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு 2ஆயிரத்து 400பவுண்கள் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது. இது தொடர்பாக இலங்கையின் வெளியுறவு அமைச்சுக் கருத்து வெளியிடும்போது, பிரியங்க பெர்னாண்டோவுக்கு ராஜதந்திரிக்குரிய உரிமைகள் உண்டெனத் தெரிவித்தது. அந்தக் கருத்து என்ன அர்த்தத்தில் எதற்காக வெளியிடப்பட்டது என்றோ, இந்தத் தீர்ப்புத் தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன என்பது பற்றியோ தெளிவுபடுத்தப்படவில்லை. எனினும் இந்தத் தீர்ப்பை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லையென்பது இந்தக் கருத்தின் மூலம் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**உதய கம்மன்பில கருத்து**

இவ்விடயம் தொடர்பாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில வெளியிட்டுள்ள கருத்தைச் சாதாரணமாக எடுத்துவிட முடியாது. கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியைக் கொண்டு வருவதற்கு முழுமூச்சாகப் பாடுபட்டவர் அவர். அது மட்டுமன்றி அரசின் உத்தியோகப்பற்றற்ற பேச்சாளராகக் கருத்துக்களை வெளியிடுபவரும் அவரே. ராஜபக்ஷ குடும்பத்தின் அசைக்க முடியாத விசுவாசி என்பதும் அவருக்கு அமைச்சுப் பதவி எதுவும் இல்லாதபோதும் அரசுக்குள் இவர் மிகவும் வலிமை படைத்த சக்தியாக விளங்கி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே அவரது கருத்துக்கு அரச மட்டத்தில் ஒரு வலிமை உண்டு என்பதை எவரும் மறந்துவிட முடியாது. லண்டன் வெஸ்ற் மினிஸ்ரர் நீதிமன்றம் பிரியங்க பெர்னாண்டோ தொடர்பாகத் தீர்ப்பை வெளியிட்டவுடன் உதய கம்மன்பில, பிரியங்க பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை அரசே கட்ட வேண்டுமெனவும் அப்படிக் கட்டத் தவறினால் **பொதுமக்களிடம் பணத்தைச் சேர்ந்து அந்த அபராதத் தொகையைத் தாமே** கட்டத்தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்திருந்தார். பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை அரசு கட்டுகிறதென்றால் அதன் அர்த்தம் அரசு அந்தக் குற்றத்தைத் தானே பொறுப்பேற்றுக் கொள்கிறது என்பதாகும். பொதுமக்களிடம் பணம் சேர்த்து அபராதம் கட்டுவதை அரசு அனுமதிக்குமானால் அதுவும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதற்குச் சமனாகும். அதேவேளையில் புலம் பெயர் தமிழர்களின் அழுத்தம் காரணமாகப் பிரிட்டன் அரசு பக்கச் சார்பாக நடப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்படச் சிங்களக் கடும் போக்குவாத அமைப்புகள் சில பிரிட்டன்மீது குற்றம்சாட்டிவருகின்றன.



**இலங்கை அரசின் நிலைப்பாடு**

இலங்கை அரசோ வெளியுறவு அமைச்சோ உதய கம்மன்பிலவின் கருத்துக்கள் தொடர்பாக எவ்வித மறுப்பறிக்கையும் வெளியிடவில்லை. அப்படியானால் அவரது கருத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொள்கிறது எனத்தான் கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு எனக் கூறப்படுகிறது. கடைசியாக இடம்பெற்ற அரச தலைவர் தேர்தல் மிகவும் சிறப்பாக இடம்பெற்றதாகவும் அதன் மூலம் இலங்கையின் ஜனநாயகத்தின் மாண்பு நிலைநாட்டப்பட்டதாகவும் வெளிநாடுகள் பாராட்டியிருந்தன. ஜனநாயக நாட்டில் நீதித்துறை எப்போதுமே சுதந்திரமாக இயங்க வேண்டுமென்பது முக்கிய கோட்பாடுகளில் ஒன்று. எனவே இலங்கையிலும் நீதித்துறையில் எவரும் தலையிட முடியாது என்பது சட்டப்படி மட்டுமன்றி நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கவும் முடியாது. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்தபோது அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பளிக்கத் தவறிய உயர்நீதிமன்ற நீதியரசர் பதவி விலக்கப்பட்டார்.

**நீதி நிலைநாட்டப்பட்ட இரண்டு தருணங்கள்**

2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து ஜனநாயகத்தைக் காப்பாற்றினர். 2018ஆம் ஆண்டு நவம்பரின் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் அரசைக் கலைத்து மஹிந்த அரசை உருவாக்கியபோது நீதிமன்றம் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றியது. இலங்கையில் நீதிமன்றத்தின் சுயாதீனம் பாதிக்கப்படும் வகையியலான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் மஹிந்த தரப்பினரின் பங்களிப்பு முக்கியமாக அமைந்திருந்தது. ஆனால் அந்த முயற்சிகள் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் வலுவிழப்புச் செய்யப்பட்டன. ராஜபக்ஷ சகோதரர்களின் அரசியல் அதிகாரமே தற்சமயம் நிலவுகின்ற நிலமையிலேயே சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'வெஸ்ற் மினிஸ்ரஸ்' நீதிமன்றத்தின் தீர்ப்பைச் சவாலுக்கு உட்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பாதுகாப்புச் செயலரின் கருத்து**

இந்த விடயம் தொடர்பாகப் பாதுகாப்புச் செயலர் கமால் குணவர்த்தன, தெரிவிக்கையில், இந்தத் தீர்ப்புத் தொடர்பாக பிரிட்டன் இதுவரை அரசுக்கு அறிவிக்கவில்லை எனவும் இந்தத் தீர்ப்புக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாகவும் பிரியங்க பெர்னாண்டோவின் அபராதத் தொகையைக் கட்டுவதற்குப் பொதுமக்களிடம் நிதி சேகரிக்க வேண்டியதில்லை எனவும் அந்த விடயத்தை வெளியுறவு அமைச்சும் இராணுவமுமே பார்த்துக் கொள்ளுமென்றுள்ளார். இராணுவத் தளபதி சவேந்திரசில்வாவும் இந்த விடயம் தொடர்பாக



இதுவரை தங்களுக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் இது தொடர்பாக இராணுவமும் வெளியுறவு அமைச்சும் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக முக்கியமான கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். எவ்வளவுதான் இலங்கை **அரசின் சார்பில் பல்வேறு தரப்பினரும் சிங்கள மக்களை உசுப்பேற்றும்**



வகையிலான வசனமாரி பொழிந்தாலும் இவர்களிடம் உள்ள ஒரே ஆயுதம் பிரிக்கேடியர் ஒரு தூதரகப் பணியாளர் என்ற வகையில் அவருக்கு ராஜதந்திர மதிப்பு உண்டு என்பதும் அதனால் அவர் தண்டிக்கப்பட முடியாது என்பதுமாகவே இருக்கிறது.

**நீதிமன்றத்தின் தீர்க்கமான தீர்ப்பு**

இது தொடர்பாக நீதிமன்றம் தெளிவாகவே தனது முடிவை வெளியிட்டுவிட்டது. அதாவது பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியேயொழிய அவர் ஒரு ராஜதந்திரப் பணியாளர் அல்லவென அது தெரிவித்துவிட்டது. எப்படியிருந்த போதிலும் ஜனநாயகத்தின் தூண் எனக் கூறப்படும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை அர்த்தமிழக்க வைக்கும் முயற்சிகள் தொடரத்தான் செய்கின்றன. லசந்த விக்கிரமதுங்க கொலை வழக்கு, விளையாட்டு வீரர் தாஜுதீன் கொலைவழக்கு, அவன்காட் ஊழல் மோசடி வழக்கு, ராஜபக்ஷ அருங்காட்சியம் அமைக்க அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பான வழக்கு என்பன மீளப்பெறப்பட்டுவிட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை நீதிமன்றம் விசாரிக்க முடியாதென்பதால் இந்த வழக்குகள் செயலிழந்துவிட்டன.

இலங்கை அரசமைப்பு சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமை காரணமாக இப்படியொரு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் நீதியைத் தேடித் தொடுக்கப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களின் மூலம் நியாயங்களை எட்டும் ஜனநாயக நடைமுறையுடன் இணைந்து இறந்துவிட்டன. ஆனால் விடயம் இத்துடன் முடியவில்லை. இந்த வழக்குகளைப் புலனாய்வு செய்து கொண்டு நடத்திய புலனாய்வு அதிகாரிகளில் ஒருவர் பதவி இறக்கப்பட்டு வேறு பதவிக்கு அனுப்பப்பட்டு விட்டார். இன்னொரு அதிகாரி நிசாந்த டி சில்வா நாட்டை விட்டு வெளியேறிச் சுவிஸ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளார். நாட்டின் அதிகாரத்தில் போர்க் குற்றம் சுமத்தப்பட்டவர்களும், மனித உரிமை மீறல்கள், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்களும் இருக்கும்போது **ஜனநாயகம் அர்த்தமிழந்து போவது தவிர்க்க முடியாததாகும்.**

ரவுண்ட் தவேல்ட்

பிரகாஸ்



# இனப்படுகொலை செய்யவில்லை என்கிறார் சூகி!

மியன்மார் அரசு இனப்படுகொலை செய்யவில்லை - என்று தி ஹேக் நகரத்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் விவாதித்துள்ளார் ஆங் சான் சூகி.

மியன்மாரின் ரக்கினே மாகாணத்தில் ரொஹிங்கிய முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு எதிராக மியன்மார் அரசு நீண்டகாலமாக இனச் சுத்திகரிப்பில் ஈடுபட்டு வருகின்றது என்று ஐ.நா குற்றம் சாட்டியது. 2016ஆம் ஆண்டு ரொஹிங்யர்களுக்கு எதிராக மியன்மார் அரசு முன்னெடுத்த நடவடிக்கைகள் இனச் சுத்திகரிப்பு மேற்கொள்வதற்கான பாடப்புத்தகம் போன்று இருந்தது என்று ஐ.நா பொதுச் செயலர் குத்தேரஸ் தெரிவித்திருந்தார். சர்வதேசச் சமூகம் முன்னெடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மியன்மார் அரசு சர்வதேச நீதிமன்றில் தற்போது ஏற்றப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை சர்வதேச நீதிமன்றில் முற்பட்ட சூகி, 'மியன்மார் அரசோ, இராணுவமோ இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையிலோ அல்லது இனப் படுகொலையிலோ ஈடுபடவில்லை' என்று தெரிவித்தார்.

**'கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையா..'**



# மீண்டும் போரிஸ்

பிரிட்டனின் பிரதமராக மீண்டும் தெரிவாகியுள்ளார் போரிஸ் ஜோன்சன்.

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. 650 தொகுதிகளில் 368 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியமைத்தது கென்சர்வேடிவ் கட்சி. இதையடுத்து போரிஸ் ஜோன்சன் மீண்டும் பிரத்மராவது உறுதியானது.

பிரிட்டனில் தொங்கு நாடாளுமன்றமே அமையும் என்று பல்வேறு கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்திருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்டமைக்கும் அதிகமான தொகுதிகளில் வென்றார் போரிஸ் ஜோன்சன்.

**'ட்ரம்ப் 2.0...'**

## சாவடைந்த ஸ்டார்லிங்குகள்



பிரிட்டனின் ஆங்லெசே தீவின் சாலையில் 200க்கும் மேற்பட்ட ஸ்டார்லிங் பறவைகள் மர்மமான முறையில் இறந்து கிடந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

பிரிட்டனின் வேல்ஸ் நாட்டில் உள்ளது ஆங்லெசே தீவு. இத்தீவில் உள்ள பாடெர்டென் கிராமத்தின் லின் லில்வென் குளப்பகுதியில் உள்ள சாலையில் நூற்றுக்கணக்கான ஸ்டார்லிங் பறவைகள் மர்மமான முறையில் இறந்து கிடந்தன. பறவைகளின் உடல்களை ஆய்வு செய்ய அரசு, விலங்கு மற்றும் தாவர சுகாதார அமைப்பின் நிபுணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

**'அழியனவற்றின் அநியாயச் சாவு...'**




# டைம்ஸின் சிறந்த நபராக தன்பேர்க்

உலகப் புகழ்பெற்ற டைம்ஸ் வார இதழின் இந்த ஆண்டுக்கான சிறந்த நபராக பருவநிலை மாற்ற ஆர்வலர் கிரேட்டாதன்பேர்க்தெரிவுசெய்யப்பட்டார். அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் உலக புகழ்பெற்ற டைம்ஸ் வார இதழ் ஆண்டுதோறும் சிறந்த நபர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறது. இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான சிறந்த நபரின் பெயரை டைம்ஸ் வார இதழ் தற்போது வெளியிட்டுள்ளது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த 16 வயதேயான சிறுமி தன்பேர்க் சிறந்த நபராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தன்பேர்க் கடந்த செப்ரெம்பர் 23ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் பங்கேற்றார். அந்த மாநாட்டில் பேசிய அந்தச் சிறுமி உலக நாட்டு தலைவர்களை நோக்கி 'பருவநிலை மாற்றத்தால் நாம் அனைவரும் பேரழிவின் தொடக்கத்தில் இருக்கிறோம். ஆனால் நீங்கள் பணம், பொருளாதார வளர்ச்சி போன்ற கற்பனை உலகத்தைப் பற்றி பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். உங்களுக்கு எவ்வளவு தைரியம் இருக்கும்?' என ஆக்ரோஷமாக முழங்கினார்.

**'நல்லதொரு தெரிவு...'**

## பழைமை வாய்ந்த இன்தோனேசிய ஓவியங்கள்



இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் உள்ள ஒரு குகையை அகழ்வாராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்ததில் 44 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆடு, மாடு, காட்டுப்பன்றி, மான் மற்றும் குதிரை போன்ற விலங்குகளின் ஓவியங்கள் அந்தக் குகையில் வரையப்பட்டிருந்தன. சில ஓவியங்கள் விலங்குகளை வேட்டையாடுகின்றமை போல் வரையப்பட்டிருந்தன. அதில் வேட்டையாடும் நபர்கள் கைகளில் ஈட்டி மற்றும் கயிறுகளை வைத்திருப்பது தத்ரூபமாக வரையப்பட்டு உள்ளது. மேலும் அந்த ஓவியங்களில் மனிதர்களின் உருவம் சிறியதாகவும், விலங்குகளின் உருவம் பெரியதாகவும் இருக்கின்றன. இதன் மூலம் அந்தக் காலத்தில் வாழ்ந்த உயிரினங்கள் ராட்சத அளவில் வளர்ந்திருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

**'மற்றுமொரு மர்மம்...'**

சுப்பிரமணிய பாரதியாருடைய பிறந்த தினம் 1882ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி. 'மகாகவி பாரதியார் வசனங்கள்' என்ற அவரது நூலில் இருக்கின்ற ஒரு பகுதி இது.




# பாரதி எனும் பத்திரிகையாளன்

இங்ஙனம், இல்லற பந்தமே தீராத துக்கத்துக்குக் காரணமென்றும், துறவறம் ஒன்றே மோட்சத்துக்கு சாதனமென்றும் கூறும் வேறுசில துறவிகளைப்போலவே சொல்லாமல், இரண்டும் ஒருங்கே மோட்சத்துக்கு சமமான சாதனங்கள் என்று சொல்லியதே எமக்குப் பெரிய ஆறுதலாயிற்று. சம்சார சுகங்கள்கூட துன்பங்களுக்கே வழிகாட்டுகின்றனவென்றும், ஆகவே எல்லா வகையிலும் இகலோக வாழ்க்கை துன்பத்தைத் தவிர வேறில்லையென்றும் சொல்லிச் சில பிற்காலத்துத் துறவிகள் "வீட்டையும் பெண்டு பிள்ளைகளையும் துறந்துவிட்ட மாத்திரத்திலேயே ஒருவன் இகலோக வாழ்வைத் துறந்து விட்டானாகிறான்" என்ற பிழைக் கருத்துக் கொண்டவர்களாய், ஊர்தோறும் சுற்றிக்கொண்டு, வீடு வாயில் சுற்றம் துணை இனம் ஏதும் இல்லாதவர்களாய்ப் பிச்சையெடுத்து வயிறு வளர்க்கிறார்கள். இக்கூட்டத்தாரின் வாழ்க்கை மகா பரிதாபகரமானது. இந்தக் கூட்டத்தாரில் இடையிடையே சிற்சில இடங்களில் சிற்சில மகான்கள் அளவற்ற கல்வியுடையோராகவும், அளவற்ற தெய்வ பக்தியுடையோராகவும், வரம்பற்ற ஜீவகாருண்யமுடையோராகவும் தோன்றுகிறார்கள். மற்றும், அவர்களில் பெரும்பான்மையோருக்கு ஒருவிதமான முக்தித் தோட்டம் இருக்கத்தான் செய்கிறது. எனிலும், இவர்களில் மிகப் பெரிய மகான்கள்கூட, உலகத்தில் மானுடர் எய்தற்குரியதாகிய பரிபூர்ண வாழ்க்கை வாழ்ந்தனர் என்று கூறத்தகாது. வேதகாலத்தில் இந்தத் துறவி வழி இந்துக்களுக்குள்ளே கிடையாது. வேதகாலத்தில், சந்யாஸம் நமக்குள்ளே இருந்திருப்பதாகச் சுவாமி விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். வசிஷ்டர், வாமதேவர் முதலிய வேதரிஷிகள் அத்தனை பேரும் மணம் புரிந்து கொண்டு மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர். புலன்களை அடக்கியாளும் பொருட்டாக அக்காலத்து ரிஷிகள் பிரம்மசாரிகளாக இருந்து நெடுங்காலம் பலவகைக் கொடிய தவங்கள் செய்ததுண்டு. ஆனால் குறிப்பிட்ட காலம் வரை தவங்கள் செய்து முடித்துப் பின்பு இல்வாழ்க்கையுட் புகுதலே மகரிஷிகளுக்குள் வழக்கமாக நடைபெற்று வந்தது. மகாபாரதத்திலும் மற்றைப் பூர்வ புராணங்களிலும் வேத ரிஷிகளைப் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என் வார்த்தையை நிலை நிறுத்துகின்றன'

'ஸாயண பாஷ்யமில்லா விட்டால், வேதம் இந்து ஜாதிக்குப் பயன்படாமலே போயிருக்கும். சரியான சமயத்தில் ஸாயணர் வேதங்களுக்கு பாஷ்யம் எழுதி வைத்தார். எனிலும், ஸாயணாசார்யர் கூடத் தம்முடைய குருக்களைப்போலவே வேதம் கர்ம நூலென்று கருதிவிட்டார். அதனால், அது இந்து மதத்துக்கு ஆதி வேர் என்பதை இந்த ஆசார்யர்களால் மறுக்க முடியாலிடினும், அதற்கு ஞான நெறியில் எவ்வித பிரமாணமுமில்லையென்று அவர்கள் தவறாக எண்ணும்படி நேர்ந்துவிட்டது. ஏனென்றால், வேதத்தைக் கர்மங்களைப் போற்றுகிற நூலாகக் கருதிய இவர்கள் கர்மங்களென்ற இடத்தே யாகங்களைக் கருதிக் கூறினர். அதாவது, யாகங்களுக்கு மாத்திரம் உபயோகப்படும் நூலாக எண்ணி, கர்மங்கள் என்றால் யாகங்களெனப் பொருள் கொண்டு இவர்கள் வேதத்தைக் கர்ம காண்டம் என்றார்கள்.

மேற்படி யாகங்களே பெரும்பாலும் பசு வதைகளும், குதிரைக் கொலைகளும், ஆட்டுக் கொலைகளும் முக்கியமாகப் பாராட்டிய கொலைச் சடங்குகள். இவ்விதமான கொலைகளைச் செய்தல் மோட்சத்துக்கு வழியென்ற போலி வைதிகரைப் பழி சூட்டி, அந்தக் கொலைச் சடங்குகளால் மனிதன் நரகத்துக்குத்தான் போவானென்பதை நிலைநாட்டிய புத்த பகவானும் இவருடைய மதத்தைத் தழுவிய அரசர்களும் இந்தியாவில் யாகத்தொழிலுக்கு மிகவும் இகழ்ச்சியேற்படுத்திவிட்டார்கள். அந்தத் தருணத்தில், புத்த மதத்தை வென்று இந்து தர்மத்தை நிலைநாட்ட, சங்கராசார்யர் அவதரித்தார். அவர் புத்த மதக் கருத்துக்களைப் பெரும்பாலும் ருசி கண்டு சுவைத்துத் தம்முடைய வேதாந்தத்துக்கு ஆதாரங்களாகச் செய்து கொண்டனர், ஷண்மத ஸ்தாபகாசார்யாராய், சைவம் வைஷ்ணவம் முதலிய ஆறு கிளைகளையும் வேதாந்தமாகிய வேரையுமுடைய இந்து மதம் என்ற அற்புத விருட்சத்தை ஸ்ரீசங்கராசார்யர் தமது அபாரமான ஞானத்திறமையாலும் கல்வி வலிமையாலும் மீள உயர்ப்பிதது அதற்கு அழியாத சக்தி ஏற்படுத்தி வைத்துவிட்டுப் போனார். தாம்மாலே வெட்டுண்ட புத்த மதம் என்ற விருட்சத்தின் கிளைகள் பலவற்றை இந்து தர்மமாகிய மரத்துக்கு நல்ல வளர்ச்சியுண்டாகும்படி எருவாகச் செய்துபோட்டார். இங்ஙனம் புத்த மதக் கொள்கைகள் பலவற்றை இந்து தர்மத்துக்கு ஆதாரமாகச் சேர்த்துக் கொண்டது பற்றியே, சங்கராசார்யரை அவருடைய எதிர்க்கட்சியார் பலர் "ப்லச்சன்ன பௌத்தர்" (மறைவுபட்ட பௌத்தர்) என்று சொன்னார்கள். எனிலும் அவர் இந்து தர்மத்துக்குச் செய்த பேருபகாரத்துக்காக இந்துக்களிலே பெரும்பாலோர் அவரைப் பரமசிவனுடைய அவதாரமாகக் கருதிப் போற்றினார்கள்.

பாரததேசத்தில் புத்த மதம் ஜீவகாருண்யம் ஸர்வஜன ஸமத்வம் என்ற இரண்டு தர்மங்களையும் நெடுந்தூரம் ஊன்றும்படி செய்தது. ஆனால், உலக வாழ்க்கையாகிய ஜகத்தின் ஒளி போன்றவளாகிய பத்தினியைத் துறந்தவர்களே மேலோர் என்று வைத்து, அவர்களுக்குக் கீழே மற்ற உலகத்தை அடக்கி வைத்து, உலகமெல்லாம் பொய்மயம் என்றும் துக்கமயம் என்றும் பிதற்றிக் கொண்டு வாழ் நாள் கழிப்பதே ஞானநெறியாக ஏற்படுத்தி, மனு நாகரிகத்தை நாசஞ் செய்ய முயன்றதாகிய குற்றம் புத்த மதத்துக்குண்டு.



பௌத்த மதமே துறவு நெறியை உலகத்தில் புகுத்திற்று. அதற்கு முன் அங்கங்கே சில சில மனிதர் துறவிகளாகவும் சில சில இடங்களில் சிலர் துறவிக் கூட்டத்தாராகவும் இருந்தனர்.

துறவிகளின் மடங்களை இத்தனை தாராளமாகவும் இத்தனை வலிமையுடையனவாகவும் செய்ய வழிகாட்டியது பௌத்த மதம். எங்கு பார்த்தாலும் இந்தியாவை அம்மதம் ஒரே சன்யாசி வெள்ளமாகச் சமைத்துவிட்டது. பாரத தேசத்தை அந்த மதம் ஒரு பெரிய மடமாக்கி வைத்து விட்டது. ராஜா, மந்திரி, குடி, படை- எல்லாம் மடத்துக்குச் சார்பிடங்கள். துறவிகளுக்கு சரியான போஜனம் முதலிய உபசாரங்கள் நடத்துவதே மனுஷ நாகரிகத்தின் உயர் நோக்கமாகக் கருதப்பட்டது. துறவிகள் தான் முக்கியமான ஜனங்கள்! மற்ற ஜனங்களெல்லாரும் அவர்களுக்குப் பரிவாரம்! மடந் தான் பிரதானம்: ராஜ்யம் அதற்கு ஸாதனம்.

பாரத தேசத்தில் புத்த மதம் ஜீவகாருண்யம் ஸர்வ ஜன ஸமத்வம் என்ற இரண்டு தர்மங்களையும் நெடுந்தூரம் ஊன்றும்படி செய்தது. ஆனால், உலக வாழ்க்கையாகிய ஜகத்தின் ஒளி போன்றவளாகிய பத்தினியைத் துறந்தவர்களே மேலோர் என்று வைத்து, அவர்களுக்குக் கீழே மற்ற உலகத்தை அடக்கி வைத்து, உலகமெல்லாம் பொய்மயம் என்றும் துக்கமயம் என்றும் பிதற்றிக் கொண்டு வாழ்நாள் கழிப்பதே ஞானநெறியாக ஏற்படுத்தி, மனுஷ நாகரிகத்தை நாசஞ் செய்ய முயன்றதாகிய குற்றம் புத்த மதத்துக்குண்டு. அதை நல்ல வேளையாக இந்தியா உதறித் தள்ளிவிட்டது. பின்னிட்டு புத்த தர்மத்தின் வாயப்பட்ட பர்மா முதலிய தேசங்களிலும் புத்த மதம் இங்ஙனமே மடத்தை வரம்பு மீறி உயர்த்தி மனித நாகரிகத்தை அழித்துக்கொண்டு தான் வந்திருக்கிறது. பிற்காலத்தில் பௌத்த வழியைத் தழுவி பலமான மடஸ்தாபனங்கள் செய்த ரோமன் கத்தோலிக்க மதத்திலும் குருக்களுடைய சக்தி மிஞ்சிப்போய் மனித நாகரிகத்துக்குப் பேராபத்து விளையும் போலிருந்தது. அதை ஐரோப்பிய தேசத்தார்கள் படைபுரட்சிகளாலும் பெருங் கலகங்களாலும் யுத்தங்களாலும் எதிர்த்து வென்றனர்.

(மறுபக்கம் பார்க்க)



# பாரதி எனும்...

(தொடர்ச்சி)

அதுமுதல் ஐரோப்பாவில் மடாதிபதிகளுக்கு ராஜ்யத்தின் மீதிருந்த செல்வாக்கும் அதிகாரமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகின்றன. இது நிற்க.

இந்து தர்மம் புத்த மதத்தை ஜெயிக்கவேயில்லையென்றும், பௌத்த மதமே இந்து மதத்தை ஜெயித்து விட்டதாகவும் சில மாதங்களின் முன்பு காரைக்குடியில் ஒரு நண்பர் என்னிடம் தர்ப்பித்தார். சரித்திரத்திலும், ப்ரத்யக்ஷத்திலும் ஐயமற புத்த மதமழிந்து இந்து மதம் வெற்றி பெற்று நிற்கும் செய்தி விளங்குகையில், பட்டப்பகலையிரவென்று கூறுதல் போல் மேற்படி காரைக்குடி நண்பர் சொல்லிய பச்சைப் பொய்யை இங்கெடுத்துச் சொல்ல வந்த முகாந்தரம் யாதெனில்:-

அவர் சொல்லியது பச்சைப் பொய்யன்று. அதில் சிறிதளவு உண்மையும் கலந்திருக்கிறது. எங்ஙனமேனில், பௌத்த மார்க்கங்களைக் களைந்தெறிந்து மிஞ்சி நின்ற இந்து மதம் பல அம்சங்களில் பௌத்த மதக்கருத்துக்களை முழுமையாகவும் பல அம்சங்களிற் சற்றே மாற்றியும் தன்னுள்ளே சேர்த்துக் கொண்டு விட்டது. ஆகவே, பௌத்த மதம் இந்நாட்டில் இருந்த இடம் தடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாய் மடிந்து போகவில்லை. அதன் கொள்கைகளில் பல இந்து மதக் கொள்கைகளுடன் கலந்து இந்நாட்டில் வழங்கி வருகின்றன.

இந்தச் செய்தியையே அந்தக் காரைக்குடி நண்பர் மிகவும் அதிசயோக்தியாக மேற்கண்டவாறு பச்சைப் பொய் வடிவத்தில் கூறினார். புனர்ஜன்மக் கொள்கை, புலால்- இவையிரண்டுமே பௌத்த மதத்திலிருந்து இந்து மதத்துக்குள் நுழைந்த கொள்கைகளில் முக்கியமானவையென்று கருதப்படுகின்றன. ஆனால், இக்கொள்கைகள் பௌத்த மதத்திலிருந்து தான் இந்து மதத்தில் புகுந்தனவென்று கூறுவதற்கு பலமான ஆதாரங்களில்லை. புனர்ஜன்மக் கொள்கை பூர்வ புராணங்களிலேயே இருந்தது. பௌத்த மதம் அக்கொள்கையை, அறிஞர் கண்டு நகைக்கத் தக்கபடியாக வரம்பு மீறி வற்புறுத்திற்று. பிற்கால இந்து மதத்தில் அக்கொள்கை அளவுக்கு மிஞ்சி, நிரார்த்தகமாக ஏறிப்போய் இப்போது இந்து நம்பிக்கையிலுள்ள குறைகளிலொன்றாக இயல்கிறத. சாதாரணமாக ஒருவனுக்குத் தலை நோவு வந்தாலுங் கூட, அதற்குக் காரணம் முதல் நாள் பசியில்லாமல் உண்டதோ, அளவு மீறித் தூக்கம் விழித்ததோ, மிகக் குளிர்ந்த அல்லது மிக அசுத்தமான நீரில் ஸ்நானம் செய்ததோ என்பதை ஆராயு முன்பாகவே, அது பூர்வ ஜன்மத்தின் கர்மப் பயனென்று இந்துக்களிலே பாமரர் கருதக்கூடிய நிலைமை வந்துவிட்டது. உலகத்து வியாபார நிலைமையையும் பொருள் வழங்கும் முறைகளையும் மனித தந்திரத்தால் மாற்றி விடலாம் என்பதும், அங்ஙனம் மாற்றுமிடத்தே செல்வ மிகுதியாலும் செல்வக் குறைவாலும் மனிதர்களுக்குள்ளே ஏற்படும் கஷ்டங்களையும் அவமானங்களையும் பசிகளையும் மரணங்களையும் நீக்கிவிடக் கூடும் என்பதும் தற்காலத்து இந்துக்களிலே பலருக்குத் தோன்றவே இடமில்லை. பிறர் சொல்லிய போதிலும் அது அவர்களுக்கு அர்த்தமாவது சிரமம். ஏனென்றால், பண விஷயத்தில் ஏற்பட்ட பயங்கரமான பேதங்களையும் தாரதம்மியங்களையும் பாரபட்சங்களையும் கண்டு, அதற்கு நிவாரணம் தேட வழி தெரியாத இடத்திலே தான், பெரும்பாலும் இந்தப் பூர்வ ஜன்ம கர்ம விஷயம் விசேஷமாக ப்ரஸ்தாபத்துக்கு வருகிறது. அற்பாயுள், நீண்ட ஆயுள், நோய், நோயின்மை, அழகு, அழகின்மை, பாடத் தெரிதல், அது தெரியாமை, படிப்புத் தெரிதல், அது தெரியாமை- முதலிய எல்லா பேதங்களுக்கும் பூர்வ ஜன்மத்தின் புண்ய பாவச் செயல்களையே முகாந்தரமாகக் காட்டினார்களெனினும், பண விஷயமான வேறுபாடுகளே இவையெல்லாவற்றைக் காட்டிலும் மனிதர்களுக்கு உள்ளக் கொதிப்பையும் நம்பிக்கைக் கேட்டையும் விளைத்து, அவர்களை இந்த ஜன்மத்தின் துக்கங்களுக்குப் பூர்வ ஜன்மத்திலே காரணந் தேடுவதும் அடுத்த ஜன்மத்தில் பரிகாரந் தேடுவதுமாகிய விநோதத் தொழிலிலே தூண்டின.

பௌத்த மதத்தால் நாம் அடைந்த நன்மைகளிலே உண்மையான நன்மை ஒன்று தான். அதாவது விக்ரஹாராதனையை பௌத்த மதம் ஊர்ஜிதப்படுத்திற்று. புதிதாக உண்டாக்கவில்லை. ஏற்கனவேயிருந்த வழக்கத்தை மிகவும் விஸ்தாரமாக்கி ஊர்ஜிதப்படுத்திற்று. பௌத்தர்கள் மனிதருக்கேற்படுத்திய சிலைகளை நம்மவர் தம்முடைய அற்புத ஞான சக்தியின் விரிவாலும் கற்பனா சக்தியின் தெளிவாலும் தேவர்களுக்குந் சமைத்துக் கொண்டனர். தேவர்களைச் சிலைகளில் வைத்து வணங்குதல் முக்திக்கு மகத்தான சாதனங்களிலொன்றாம், ஆனால், உண்மையான பக்தியுடன் வணங்க வேண்டும்.

இனி, புத்த மதம் இழைத்த பெரும் தீங்கு யாதெனிலோ, இடைக்காலத்து மாயாவாதத்தை நம்முள்ளே எழுப்பிவிட்டது. உபநிஷத்துக்களிலும் வேதத்திலும் "மாயா" என்ற சொல் பராசக்தியைக் குறிப்பது. இடைக்காலத்தில் மாயை பொய்யென்றதொரு வாதம் உண்டாயிற்று. இதனால், ஜகத் பொய்; தேவர்கள் பொய்; சூரிய நட்சத்திராதிகள் பொய்; பஞ்ச பூதம் பொய்; பஞ்சேந்திரியம் பொய்; மனம் பொய்; சைதந்யம் மாத்திரம் மெய்; ஆதலால், இந்த உலகத்துக் கடமைகளெல்லாம் எறிந்துவிடத் தக்கன என்றதொரு வாதம் எழுந்தது. இவ்வுலக இன்பங்களெல்லாம் அசாசுவதம்; துன்பங்கள் சாசுவதம். இத்தகைய உலகத்தில் நாம் எந்த இன்பங்களையுந் தேடப் புகுதல் மடமையாகும். எனவே, எந்தக் கடமைகளையுஞ் செய்யப் புகுதல் வீண் சிரமமாகும் என்ற கட்சி ஏற்பட்டது.

ஆனால், இவர்கள் எல்லா இன்பங்களையும் துறந்துவிட்டதாக நடிக்கிறார்களேயன்றி, இவர்கள் அங்ஙனம் உண்மையிலே துறக்கவில்லை. இவ்வுலகத்தில் ஜீவர்கள் எல்லா இன்பங்களையும் துறப்பது சாத்தியமுமில்லை. கடமைகளைத் துறந்துவிட்டுச் சோம்பேறிகளாகத் திரிதல் சாத்தியம் அது மிக சுலபமுங் கூட. இந்தச் சோம்பேறித்தனத்தை ஒரு பெரிய சுகமாகக் கருதியே அநேகர் துறவு பூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. ■



# காணாமல் போயின...

காணாமல் போயின...
என் அம்மா பொன் அம்மா
என் அம்மா அன்று பாடிய தாலாட்டுப் பாடல்
என் அம்மா நிலாக்காட்டி ஊட்டிய வெந்நிலாச் சோறு
என் அம்மா நான் ஆடுவதற்கு வாங்கித்தந்த மரக்குதிரை
என் அம்மா நான் நடை பழக வாங்கித் தந்த முச்சக்கர மரவண்டி

என் அம்மா நான் முழுகும்போது
தலைக்கு வைத்த சியக்காய் அரப்பு வெந்தயம்
என் அம்மா நான் சாப்பிட உரலிலே
துவைத்து தந்த பனங்கிழங்கு துவையல்
என் அம்மா ஆட்டுக் கல்லில் உழுந்தரைச்சு சுட்ட சுவையான தோசை
என் அம்மா நான் சாப்பிடத் தரும் கஞ்சியும் பனாட்டும்
என் அம்மா எனக்குத் தந்த ஒடியல் புட்டு
என் அம்மா எனக்கு பேதி மருந்து தரும்போது
அம்மியிலே அரைச்சுத் தந்த பத்தியக்கறி

ஆனாலும் இன்றைய மம்மிகளுக்கு
அம்மியும் தெரியாது குழவியும் தெரியாது
உரலையும் தெரியாது ஆட்டுக்கல்லும் தெரியாது
மம்மிகளுக்கு தாலாட்டுப் பாடவும் தெரியாது
பனங்கிழங்கு துவையலும் தெரியாது
கஞ்சியுடன் பனாட்டின் சுவையும் தெரியாது
ஒடியல் புட்டின் மணமும் புரியாது
அம்மியிலே அரைச்ச கறியின் சுவையும் தெரியாது
அவையெல்லாம் இன்று
காணாமல் போயின....

● வேலணையூர் பொன். நகுலன்

# யார் அழகு.....!

சவரம் செய்த
ஆண்மகன் அழகா?
மஞ்சள் பூசிய
மங்கையவள் அழகா?
மண்ணை ஆண்ட
மன்னனவன் அழகா?
பொன்னைக் கொண்ட
மனிதனவள் அழகா?

குறும்பு செய்யும்
குழந்தையைக் கூட
கேட்டுப் பாருங்கள்
நாளைய தலைவன்
மாணவன் அவனை
வினவிப் பாருங்கள்

ஈர்ப்பு விதி சொன்ன
நியூட்டன் அழகு
E mc ² சொன்ன
ஐன்ஸ்டீன் அழகு
தேற்றம் தந்த
பைதகரஸும் அழகு

அன்பைப் பொழிந்த
அன்னை திரேசா அழகு
அறிவியல் மேதை
அப்துல்கலாம் அழகு
இலகு கவி தந்த
பாரதியும் அழகு

இவர்களைப் போல பாரிலே
உள்ளனர்
ஏராளம் அழகர்கள்
இவர்களை எம்
கண்முன்னே கண்ட பின்னரா?
அழகென்றோம்
இல்லை இல்லை!

இவர்கள் மனதில்
இருந்தவை அழகு
இவர்கள் உலகுக்கு
கொடுத்தவை அழகு
இவர்களால் ஆன
அகிலமிது அழகு

அகத்தில் உள்ளது
அழகு என்பது
அதைப் போய்
தேடாதீர்கள் முகத்திலே...

● ஆர்த்திகா சுவேந்திரன்

# சத்தியமூர்த்தி என்கிற சாதனையாளர்

■ நியூட்டன்



மருத்துவர் சத்தியமூர்த்தி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையைப் பொறுப்பேற்கவிருந்தபோது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவரது நண்பர் ஒருவர் அவருக்கு இவ்வாறு ஆலோசனை கூறியிருக்கிறார். "கிளிநொச்சியைப்போல யாழ்ப்பாண மருத்துவமனையை நினைக்காதே. இங்கு உன்னால் சாமாளிக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் பிறந்த ஒருவரால்தான் இதைக் கொண்டு நடத்த முடியும். நீ வேறு இடங்களைத் தெரிவு செய்வதுதான் நல்லது. அப்படிப் பொறுப்பேற்றால் மூக்குடைபட வேண்டி ஏற்படும். யாரும் ஒத்துழைக்க மாட்டார்கள்" என்று.

இதை ஒரு சவாலாக எடுத்ததன் மூலம் மருத்துவர் சத்தியமூர்த்தி மிகச் சிறந்த நேர்மையான ஒருவராக மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அவருக்கு ஆரம்பத்தில் ஆலோசனை கூறியவருக்குச் சத்தியமூர்த்தி ஏற்கனவே மலையைச் சுமந்தது தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

⊙ ⊙ ⊙ ⊙

2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் வன்னிக்குள் அகப்பட்ட ஒருவர் மருத்துவர் சத்தியமூர்த்தியைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டார், "சுதந்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் இருந்த யு.என். ஸ்ரோருக்கு ஏதாவது சாமான்கள் வாங்கவேனச் சென்றிருந்தவேளை அங்கு சரமாரியான ஷெல் வீச்சு இடம்பெற்றது. நான் ஒரு இடத்தில் பதுங்கிக் கிடந்தேன். அந்தச் சம்பவத்தில் பலர் இறந்தார்கள், காயப்பட்டார்கள். நண்பகலுக்குச் சற்று முன்னதாக இடம்பெற்ற அந்தத் தாக்குதலின்போது சத்தியமூர்த்தி டொக்டர் ஒரு சுப்பர்கப் மோட்டார் சைக்கிளில் எந்தவித பதற்றமும் இன்றிச் செல்வதைக் கண்டேன். இந்த மனிதனுக்கு ஏதாவது நடந்துவிட்டால், காயப்பட்டு ஐ.சி.ஆர்.சி. கப்பலின் மூலம் போகிறவர்களுக்கு மருத்துவம் செய்ய ஆளில்லை. அவர்கள் சாக வேண்டிய நிலை ஏற்படும் எனப் பயந்தேன்" என்று கூறினார்.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

'ட்றான்ஸ்பெரன்சிசிறிலங்கா' என்ற அமைப்பு 'இன்ரெர் கிறிற்றி ஐகொன் 2019' (நேர்மையின் அபிசேகம் 2019) என்ற ஒரு வேலைத் திட்டத்தின் ஊடர்க மக்களுக்கும் நாட்டுக்கும் நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படுகின்ற அரச அதிகாரிகளை வெளிப்படுத்தவும் மதிப்பளிக்கவும் மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கியது. இதன் மூலம் இலங்கை முழுவதிலும் இருந்து சிறந்த சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்குக் குறுந்தகவல்கள் மூலம் மக்கள் வாக்களித்தனர். இதில் இரண்டாவது இடம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்திக்குக் கிடைத்தது. தமிழரில் முதலாவது இடம் அது. மருத்துவர் சத்தியமூர்த்தியின் பணியில் நன்மையடைந்தவர்களே அவருக்கு வாக்களித்திருப்பர். உங்களால் சமாளிக்க முடியாது என்று குறி சொன்னவர்கள் நிச்சயமாக வாக்களித்திருக்க மாட்டார்கள். இந்தத் தரப்படுத்தலில் முதலாவது இடத்தை மத்துகம புனித மரியாள் கல்லூரி அதிபர் பிரியதர்சினியும் மூன்றாம் இடத்தைத் திருகோண மலை வெருகல் பிரதேச செயலர் குணநாதனும் நான்காவது இடத்தைக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களப் பணிப்பாளர் பிரபாத் சந்திர கீர்த்தியும் ஐந்தாம் இடத்தை சுங்கப் பிரிவின் மத்திய புலனாய்வுப்பிரிவு உதவி அத்தியட்சகர் ஏ.எம்.ஏ.எஸ். அமரசிங்க ஆகியோரும் பெற்றனர். இறுதியாகத் தெரிவான ஐந்துபேரில் இரண்டு பேர் தமிழர்கள் என்பது பெருமைக்குரியது.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

பாடசாலை அதிபர்கள் இலஞ்சம் வாங்கி மாணவர்களைச் சேர்ப்பது மருத்துவர்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து நிறுவனங்களில் இலஞ்சம் பெறுவதுடன் தனியார் மருத்துவமனைகளில் பணம் பறிப்பது, பிரதேச செயலர்கள் மணல் வியாபாரம் தொடக்கம் தமது அதிகாரத்துக்குட்பட்ட விடயங்களில் இலஞ்சம் பெறுவது, கரையோரப் பாதுகாப்பு விடயத்தில் சட்டத்துக்குப் புறம்பான அனுமதிகளுக்குப் பணம் பெறுவது, இலஞ்சம் பெறுவதற்கான அதிக வாய்ப்புள்ள ஒரு திணைக்களமாகச் சுங்கத்திணைக்களம் கருதப்படுவது என இருக்க, இத்தகைய துறைகளில் மிக நேர்மையாக மக்களுக்குச் சேவையாற்றுவது என்பது பெருமைக்குரியதே. இந்தச் சிறந்த மனிதர்களைத் தெரிவு செய்வதற்குப் பல்வேறு சுட்டிகளை 'ட்றன்ஸ்பெரன்சி சிறிலங்கா' பயன்படுத்தியிருந்தது. இதற்காகாகத் தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பின்புலம் யாது, அவர்கள் ஆற்றிய பணிகள் யாவை, அதற்காக எதிர்கொண்ட தடைகள், செய்த பணியின் தாக்கம் அல்லது அடைவு, அவர்களின் கனவுகள் எனப் பல விடயங்கள் கையாளப்பட்டன. இதில் ஓர் ஏழைக் குடும்பப் பின்னணியைக் கொண்ட போரால் அதிகம் பாதிக்கப்பட்ட சூழலில் இருந்து வெளிவந்தவர்தான் சத்தியமூர்த்தி.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு மருத்துவராக மட்டுமல்லாது கிளிநொச்சி வாழ் மக்களின் முன்னுதாரண புருஷராகவும், தனது பணியின் மூலம் தடம் பதித்திருக்கிறார். கிளிநொச்சியின் சிந்தனையாளர் வட்டத்திலும் பாடசாலை மாணவர்கள் ஏனைய மக்களின் விடயங்களில் மருத்துவத்துறை கடந்த ஒரு சமூகசேவை அவரிடமுண்டு.

அர்ப்பணிப்பாண சேவையை எங்கு செய்தாலும் முதன்மை பெற முடியும் என்பதை நிரூபித்திருக்கிறார் அவர். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களைக் கவனத்தில் எடுத்து அவர்களுக்கான பிரத்தியேக வசதிகளை எவ்வாறு செய்து கொடுக்க முடியும் என்பதில் அதிக கவனம் செலுத்தியதன் மூலம் யாழ்ப்பாணம் மருத்துவமனை நிர்வாகத்தைச் சிறப்பான ஓர் இடத்துக்குச் சத்தியமூர்த்தி என்கிற தனிமனிதனால் கொண்டுவர முடிந்திருக்கிறது. ஒவ்வொரு திணைக்களத் தலைவர்களும் தமது திணைக்களம் ஊழியர்களின் விடயம், மக்களின் தேவைகளை நிறைவு செய்வது என்பவற்றில் அதிக அக்கறை எடுத்தால் பணி ரீதியாக முன்னுக்கு வர முடியும். ஆனால் பல திணைக்களத் தலைவர்களது பெயர்கள் கிரகிக்க முடியாதபடி ஏற்கனவே இலஞ்சம், ஊழல் ஆகிய விடயங்களிலும் மற்றும் தனிநபர் ஒழுக்கங்களையும் இழந்துவிட்டனர். அவ்வாறான அதிகாரிகளுக்கு மக்கள் ஒருபோதும் வக்களிக்கார்.


மருத்துவர் சத்தியமூர்த்தி ஓர் அரச திணைக்களத்தைச் செம்மைப்படுத்திய பெருமைக்குரியவர், முன்னுதாரணமானவர். 'அவரது சேவை மேலும் விரிவடைந்து செல்வதன் மூலம் நோயாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் அதிக நன்மை அடைய முடியும். இதைவிட சத்தியமூர்த்தி என்கிற 'பந்தா' இல்லாத மருத்துவரை சாத்ரண பொதுமக்கள் அணுகித் தமது பிரச்சினைகளைக் கூறக்கூடிய வாய்ப்பை அவர் வழங்கியது என்பது அவருக்கு மக்கள் கொடுத்த உயர் மதிப்பாகும். மருத்துவர் என்றால் சாதாரண மக்களால் அணுகப்பட முடியாதவர் என்ற மாயையும் மருத்துவர் சத்தியமூர்த்தி உடைத்திருந்தார்.

உன்னால் சமாளிக்க முடியாது என்று மற்றவர்கள் கூறும் அளவுக்கு மருத்துவமனையில் அதிகப் பிரச்சினைகள் இருந்தவேளையில் அவற்றைக் கையாண்டு, ஒரு சிறந்த மனிதராக மேலெழுந்ததற்கு அவரது தனிப்பட்ட ஆளுமையும் அர்ப்பணிப்பும் ஒழுக்கமும் எளிமையும்தான் காரணமாகியது. இதனால் அவர் தமிழ்ச் சமூகத்தால் பாராட்டப்படவும் மதிப்புறுத்தப்படவும் வேண்டியவரே. ■

எமக்கான கல்வி - 13

ஜனனீ சிவஞானசுந்தரம்

# 'குடும்ப ஊடக ஒப்பந்தம்' ஒன்றை உருவாக்க வேண்டும்



டிஜிற்றல் உலகிலிருந்து நாம் தப்பித்து வாழ்ந்து விடலாம் என்று எண்ணுவது எந்த வகையிலும் சாத்தியமில்லாத ஒன்று. எதற்கெடுத்தாலும் டிஜிற்றல் அறிவு அவசியமென்றாகி விட்டது. டிஜிற்றல் உலகைத் தொட்டுவிடாமல் வாழ்ந்து விடமுடியாது. ஒரு வீட்டில் இரண்டு பிரிவினர் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஒன்று டிஜிற்றல் உலகில் தவழ்ந்து புரள்பவர்கள் மற்றது டிஜிற்றல் உலகைத் தொட்டும் தொடாமலும் இருப்பவர்கள். டிஜிற்றல் உலகைத் தொடாதவர்கள் யாரும் இன்று இல்லையென்று சொல்லலாம். இதில் சிறுவர்கள் வேகமாக டிஜிற்றல் உலகுக்குள் நுழைந்து நீந்துகிறார்கள். அவர்களை எப்படிப் பாதுகாப்பது என்பது தான் பிரச்சினையாக உள்ளது. இதற்குக் குறிப்பாகச் சிறுவர்களின் பெற்றோர்களும் டிஜிற்றல் உலகில் குதித்து நீந்த வேண்டும். அது ஒன்று தான் சிறுவர்களை இந்தப் புதிய யுகத்தின் பாதகமான நிலைமைகளி லிருந்து பாதுகாக்க ஒரே வழியாகவுள்ளது. அதற்குச் சில வழிகளைக் கல்வியியலாளர்கள், இணையத்தள நிபுணர்களும் முன்வைக்கிறார்கள்.

**1. பெற்றோர்கள் ஒன்லைனில் தங்களை இணைத்துக் கொள்ளுதல்;**


பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் எந்தெந்த இணையத் தளங்களுக்குப் போகிறார்கள் என்பதை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். அந்தந்தத் தளங்கள் எப்படிப்பட்டன என்பதை இணையம் மூலம் தெரிந்து கொள்ளலாம். அல்லது அதனைத் தெரிந்தவர்களிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும். அந்தத் தளங்களில் தாமும் இணைந்து சுறுசுறுப்பாக இயங்குவது சிறுவர்களைப் புரிந்து கொள்ள உதவும் மற்றும் அவர்களின் செயற்பாட்டைக் கண்காணிக்கலாம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கான கடவுச்சொற்களை(பாஸ்வேட்) எப்போதும் அறிந்திருப்பது அவசியம். அதைச் சிறுவர்கள் இரகசியமாக வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது. தங்கள் கைபேசிகளுக்கும் அவர்கள் சிறுவர்கள் இருக்கும் எந்தச் சமூக ஊடக வலைத்தளங்களுக்கும் உரிய கடவுச்சொல்லை எப்போதும் தெரிந்து கொள்ள வேண்டும். இதனால் சிறுவர்கள்; இணையத் தளத்தில், ஒன்லைனில் இருக்கும்போது, என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். பெற்றோர்கள் சிறுவர்களுடன் இணைந்து அவர்கள் விளையாடும் விளையாட்டை அவர்களிடம் கேட்டே கற்றுக்கொள்ளுங்கள். சேர்ந்து விளையாடலாம். இது சிறுவர்களைக் கட்டுப்படுத்தச் சிறந்த வழி.;

**கண்காணிப்பதற்கு இலகு வழி**

பிள்ளைகளைக் கண்காணிப்பதற்கு நேரமில்லாத பெற்றோர்கள், சிறுவர்களின் இணையவழிச் செயற்பாட்டைக் கண்காணிக்கும் இணையச் சேவைகள் உள்ளன. அவை வெவ்வேறு சமூக வலைப்பின்னல்களை முன்கூட்டியே கண்காணிக்கின்றன. எனவே நேரமில்லாத பெற்றோர்கள் அவ்வாறான தளங்களை நாடினால் அவர்கள் பிள்ளைகளின் செயற்பாட்டைக் கண்காணித்து 24 மணிநேர மின்னஞ்சல் தொடர்பு மூலம் அறிக்கை தருவார்கள். இதனால் பெற்றோர்கள் நேரத்தை மிச்சப்படுத்தலாம். ஆனால் அதற்குச் செலவு ஏற்படும்.

**2. சிறுவர்களின் இணையத்தளப் பாவனையை மட்டுப்படுத்துதல்**

இணையப்பாவனையில் இருந்து முற்றாகச் சிறுவர்களைத் தடுப்பது அவர்களின் வளர்ச்சியைப் பாதிக்கும். இதனால் அவர்களை இணையத்தைப் பாவிக்க ஊக்கப்படுத்தலாம் அதேவேளை அது ஒரு கட்டுப்பாட்டில் நடப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு வீட்டில் உள்ள வை பை கடவுச்சொற்களைப் பெற்றோர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். அதைப் பிள்ளைகள் அணுகும் போது பெற்றோர்கள் உதவலாம். வை பை அதை எப்போது அணுகலாம் என்பதற்கான வரம்புகளைப் பிள்ளைகளோடு சேர்ந்து தீர்மானித்துப் பெற்றோரும் பிள்ளைகளும் ஓர் ஒப்பந்தத்தைப் போட்டுக் கொள்ளலாம். அதைக் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருப்பது சிறுவர்களின் இணையத்தளப்பாவனையைக் கட்டுப்படுத்த உகந்த வழியாகும்.



**3. கைபேசிகளைப் பொது இடத்தில் வைத்துக் கொள்ளுதல்**

இணையவசதியுள்ள கைபேசிகள் இல்லாத வீடுகளே இல்லை எனும் நிலை தான் இன்று உள்ளது. வீட்டின் பொதுவான பகுதியில் கைபேசிகளை வைத்துக்கொள்வது சிறந்த கட்டுப்பாட்டுவழியாகும். குறிப்பாகக் கைபேசிகளைச் சிறுவர்கள் இரவில் படுக்கையறைகளில் வைக்க முயற்சிப்பார்கள். அவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் படுக்கையறையில் தொலைக்காட்சிகள் அல்லது கேமிங் அமைப்புகளை அனுமதிக்க வேண்டாம். பொது இடத்தில் வைக்கும்போது பெற்றோருக்கு கண்காணிப்பதை இலகுவாகிறது. மேலும் குழந்தை உறங்கப் போகும் போது அவற்றைப் பயன்படுத்துவதால் உறக்கம் கெடுகிறது. மன அழுத்தம் உண்டாகிறது.

**4. குடும்ப ஊடக ஒப்பந்தம்;**

பல வகையான டிஜிற்றல் சாதனங்களைத் தினமும் சிறுவர்கள் பயன்படுத்துகிறார்கள். இதனால் எவற்றை எப்போது பயன்படுத்தலாம் என்பதைச் சிறுவர்களுடன் சேர்ந்து பெற்றோர்கள் தீர்மானிக்க வேண்டும். இதைக் குடும்ப ஊடக ஒப்பந்தம் என்கிறார்கள். அதனால் ஒவ்வொருவருக்கும் தாம் கையாளும் டிஜிற்றல் உபகரணத்தின் நேர எல்லைகள் என்ன என்பது வீட்டில் உள்ள எல்லோருக்கும் தெரியும். இது ஒரு வகைக் கட்டுப்பாட்டை உருவாக்கிவிடும். இதில் முக்கியமானது பெற்றோர்களும் இந்தக் குடும்ப ஊடக ஒப்பந்தத்துக்குக் கட்டுப்படுவதாகும். பெரியவர்கள் நல்ல முன்மாதிரிகளை அமைப்பதைச் சிறுவர்கள் கண்டால், குழந்தைகள் அந்த வழியைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள். வீடுகளில் இன்றுள்ள பெரும் குறைபாடு சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் உரையாட முயற்சிக்கும்போது பெற்றோர்கள் கைபேசிகளில் சதாகாலமும் பேசிக்கொண்டிருப்பது, இயங்கிக்கொண்டிருப்பதாகும். இதனால் பிள்ளை பெற்றோர் உறவு இடையீடு செய்யப்பட்டுத் திசைதிருப்பப்படுவதை அடிக்கடி காணலாம். இதனால் குடும்ப ஊடக ஒப்பந்தம் மிக அவசியமாகிறது.

**5. வீட்டில் டிஜிற்றல் 'தொழில்நுட்பம் இல்லாத' மண்டலங்களை அல்லது நேரங்களை உருவாக்குதல்.**

டிஜிற்றல் தொழில்நுட்பம் இல்லாத சூழல்களை நிறையவே உருவாக்குவது சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும். பிள்ளைகளைக் கூடி விளையாட அனுமதிப்பது. வீட்டில் உள்ள வீட்டுத் தோட்டத்தில் குடும்பமாக ஈடுபடுவது. இன்றைய குடும்பங்கள் நாகரீகம் என்ற போர்வையில் இயற்கையுடனான தொடர்பை அறுத்துக் கொண்டிருக்கிறார்கள். மண்ணில் விளையாடுவதும் மண்ணைக்கிண்டிப் பயிர் வளர்ப்பதும் அநாகரிகம் என்ற உணர்வைப் பெற்றோர்கள் தான் சிறுவர்களுக்கு ஊட்டுகிறார்கள். சிறுவர்களைத் தங்களிடமிருந்து பிரித்து டிஜிற்றல் சாதனத்திடம் கொடுப்பது பெற்றோர்கள் தான் என்பதை வெளிப்படையாகக் காணமுடிகிறது. 'மண்விளையாடாதே' என்பதைச் சொல்லிச் சொல்லியே பிள்ளைகளை வளர்க்கிறோம். இப்போது டிஜிற்றல் உலகில் இருந்து பிள்ளையைப் பாதுகாக்க 'மண்விளையாடு' என்று சொல்ல வேண்டும். ஒரு பூந்தோட்டத்தையோ பழத்தோட்டத்தையோ, காய்கறித்தோட்டத்தையோ வீட்டில் உருவாக்கி அதைப் பராமரிப்பதற்கு நேரத்தை ஒதுக்கி அதில் வீட்டின் அங்கத்தவர்கள் எல்லோரும் ஈடுபடலாம். அதில் பூக்கும் பூக்களைத் தினமும் பார்த்;து இரசிக்கலாம். அதே போன்று இயற்கை நடைப் பயணங்களை ஏற்படுத்தலாம். நிலவில் நடத்தல், கடற்கரையில் நடத்தல், கடலில் குளித்தல் என்று பல செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் டிஜிற்றல் இல்லாத மண்டலங்களை குடும்பத்தில் உருவாக்கலாம். இது உடலுக்கும் உள்ளத்துக்கும் தென்பாக இருக்கும். இன்று வடக்கைப் பொறுத்தமட்டில் மேல் மத்தியதர, மத்தியதர வகுப்புக் குடும்பங்கள் அதிகரித்திருக்கின்றன. இவர்கள் இயற்கையில் இருந்து விலகுதல் நாகரிகம் என்று நினைக்கிறார்கள். இந்த எண்ணம் சிறுவர்களை டிஜிற்றல் யுகத்துக்குள் தள்ளுகிறது என்பதையும் அவதானிக்க முடியும். இயற்கையுடன் இருத்தல் நாட்டுப்புற எண்ணம் சார்ந்ததாகப் பெற்றோர்கள் நினைக்கி றார்கள். மண்ணோடு வாழ்வது நாகரிகமற்றது என்று எண்கிறார்கள். நுட்பியல் அவத்தையில் வாழ்வது நாகரீகம் என்று எண்ணுகிறார்கள். இது தவிர்க்கப்பட்டு இயற்கையுடன் ஒன்றித்தல் நல்லது என்ற எண்ணத்தைக் குடும்பத்தில் உருவாக்க வேண்டும். இதனால் டிஜிற்றல் தொழில்நுட்பம் இல்லாத பகுதிகளை வீட்டில், குடும்பத்தில் உருவாக்க முடியும். அது அனைவருக்கும் நன்மை பயக்கும். பெற்றோர்கள் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பற்றி குழந்தைகளிடம் பேசுங்கள். அதன் சாதக பாதகங்களைக் கூறுங்கள். அதன் தேவை பற்றியும் அதனைத் தவிர்ப்பதன் தேவைபற்றியும் உணர்த்துவது அவசியம். வீட்டில் ஒரு வெளிப்படைத்தன்மையை உருவாக்க வேண்டும். முக்கியமாக ஒன்லைனில் பொருத்த மற்ற உள்ளடக்கத்தைக் கண்டால் பெற்றோர்களுடன் பேச அவர்களை ஊக்குவிக்க வேண்டும். சிறுவர்கள் அவர்கள் எந்தெந்த இணையத்தளங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றிப் பேசுங்கள். அவற்றைப் பெற்றோர்களும் அணுகி அதில் உள்ள சாதக பாத கங்களை அறிந்து சிறுவர்களுடன் உரையாடலாம்.

# இந்தியக் குடியுரிமை திருத்தம் ஏன் எதிர்க்கப்படுகிறது?



■ தமிழில்: ஷங்கர்

யார் குடிமக்கள் ஆக முடியும் என்று ஒரு நாடு எப்படி வரையறுக்கிறதோ அதுதான் அந்த நாட்டின் பண்பையும் வரையறுக்கிறது. ஏனெனில், குடியுரிமைதான் உரிமைகளைப் பெறுவதற்கான உரிமையை வழங்குகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, 1950ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டபோது, குடியுரிமை பற்றிய அரசமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பாகத்தின்படி இந்திய நிலப்பரப்புக்குள் தங்கள் இருப்பிடத்தைக் கொண்டவருக்குக் குடியுரிமை வழங்கப்பட்டது. அரசமைப்புச் சட்டக் கூறு 6இன்படி, பாகிஸ்தான் பகுதியிலிருந்து இந்தியப் பகுதிக்குப் புலம்பெயர்ந்தோருக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது. இப்படியான அரசமைப்பு முறையில் மதத்துக்குத் திட்டவட்டமாக இடமில்லாத நிலை இருந்தது. 'குடியுரிமையைக் கையகப்படுத்தல் மற்றும் துண்டித்தல்' தொடர்பிலான வழிமுறைகளை உருவாக்குவதற்கான நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும் இந்திய அரசமைப்புச் சட்டம் அங்கீகரிக்கிறது. இந்த ரீதியில்தான், நாடாளுமன்றம் குடியுரிமைச் சட்டம், 1955ஐ இயற்றியது. இந்தச் சட்டத்தின் அடிப்படையிலும் மதம் என்பது தேவைப்படும் அம்சமாக இல்லை. 1955இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்தின் குறிப்பிட்ட அம்சங்களைத் திருத்துவதற்காகத் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள குடியுரிமைச் சட்டத் திருத்தத் தீர்மானம் மதம் சார்ந்த அம்சத்தில் மாற்றம் செய்ய முனைந்துள்ளது.

மதச்சார்பற்ற அரசமைப்புச் சட்டத்தைக் கொண்ட இந்தியா போன்ற நாட்டில் குறிப்பிட்ட மதப்பிரிவினரின் குடியுரிமையைக் கையகப்படுத்த முடியுமா? என்ற வெளிப்படையான புள்ளியில்தான் பெரும்பாலான விவாதங்கள் மையம் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சம் மதச்சார்பின்மை என்று அடுக்கடுக்காக நீதிமன்றத் தீர்ப்புகள் அறிவித்திருக்கும் வேளை இது. ஆனால், இந்த அடிப்படைக் கேள்வியுடன், இந்திய அரசு பரிந்துரைத்திருக்கும் குடியுரிமைச் சட்டத்திருத்தத் தீர்மானத்தைப் பார்க்கும்போது, அரசமைப்புக்கு விரோதமான அம்சங்கள் அதில் தூவப்பட்டிருக்கின்றன. இந்த பி ரேரணையில் நாடுகள், சமூகங்களை வகைப்படுத்திருக்கும் பட்டியல் அரசமைப்புரீதியாக சந்தேகத்துக்குரியது.

### நாடுரீதியான வகைப்பாடு

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷை ஒன்றாகச் சேர்த்து இதர அண்டை நாடுகளைச் சேர்க்காமல் இருப்பது ஏன்? என்று தெரியவில்லை. பொதுவான வரலாறு என்பது காரணமாக இருக்க முடியாது. ஏனெனில், ஆப்கானிஸ்தான் எப்போதும் பிரிட்டிஷ் இந்தியாவின் அங்கமாக இருந்ததே இல்லை. இந்தியாவின் எல்லையில் இல்லாததால், நிலவியல் ரீதியாகவும் அண்டை நாடென ஆப்கானிஸ்தானைக் கோருவதற்கும் வாய்ப்புக் கிடையாது. முக்கியமாக, இந்தியாவுடன் எல்லைப் பகுதியைப் பகிரும் நேபாளம், பூட்டான், மியன்மார் போன்ற தேசங்கள் ஏன் இந்தப் பட்டியலிலிருந்து விடுபட்டன?

குடியுரிமைச் சட்டத்திருத்தத்தில் 'நோக்கங்கள் மற்றும் காரணங்களுக்கான அறிக்கையிடுதல்' பகுதியில் இதற்கான காரணம் சொல்லப்பட்டுள்ளது. இந்த மூன்று நாடுகளும் அரசமைப்பு ரீதியாக தங்கள் அரசு சார்ந்துள்ள மதம் என்னவென்பதை அறிவிக்கின்றன. அதனால், சமயச் சார்பான ஆட்சி நடக்கும் நாடுகளில் 'மதச் சிறுபான்மையின'ரைப் பாதுகாப்பதற்குத்தான் இந்த விடுபடுதல் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் காரணம் வலுவானதல்ல. இந்தியாவின் அண்டை நாடும், சமயச்சார்பான அரசுமான பூட்டானின் அதிகாரபூர்வ மதமாக வஜ்ராயன பௌத்தம் ஏன் இந்தப் பட்டியலிலிருந்து விடுபட்டது? பூட்டானைப் பொறுத்தவரை கிறிஸ்தவர்கள் வீட்டுக்குள் தனிப்பட்ட அளவிலேயே பிரார்த்தனை செய்ய முடியும். எல்லைப் பிராந்தியங்களில் உள்ள பல பூட்டானியக் கிறிஸ்தவர்கள் தேவாலயங்களில் வழிபடுவதற்காக இந்தியாவுக்குப் பயணிக்கும் நிலை உள்ளது. ஆனால், குடியுரிமைச் சட்டத்திருத்தத்தில் அவர்கள் பலனாளிகளாக இல்லை. அண்டை நாடுகளில் 'மதச் சிறுபான்மையின'ருக்கு அச்சுறுத்தல் நிலவுவதைத் தடுப்பதுதான் நோக்கம் என்றால், பெரும்பான்மை பௌத்தர்களால் தமிழ் இந்துக்கள் மோசமாக நடத்தப்பட்ட வரலாறுள்ள நிலையில் அவர்கள் ஏன் இந்தப் பட்டியலிலிருந்து விடுபட்டனர்? மியன்மாரில் ரொஹிங்கியா முஸ்லிம் மக்கள் மீது இனப்படுகொலை ஏவப்பட்டு, நிறையப் பேர் இந்தியாவுக்கு அகதிகளாக வந்த நிலையில் அவர்கள் ஏன் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை? இந்த மூன்று நாடுகளை மட்டுமே சேர்த்திருக்கும் குடியுரிமைச் சட்டத்திருத்தத்தின் தேர்வு சிலருக்கு மட்டும் சலுகை காட்டுவதாக உள்ளது.

### குறிப்பிட்ட குழுக்களின் மீதான கவனம்

தனிப்பட்ட நபர்களை வகைப்படுத்துவதில், மதரீதியான கொடுமைக்கு உட்பட்டவர் என்ற ஓர் அம்சத்துக்கு மட்டுமே இந்தச் சலுகைகளை அளிக்கிறது. இதுவே சந்தேகத்துக்குரிய வகைமைதான். மதரீதியாகத் துன்புறுத்தல் இந்த உலகில் அதிகமுள்ளதைப் போன்றே அரசியல்ரீதியான துன்புறுத்தல்களும் இருக்கவே செய்கின்றன. துன்புறுத்தலுக்கு உள்ளான பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதுதான் நோக்கம் எனில், மதரீதியான துன்புறுத்தலோடு மட்டுறுத்துவதில் எந்த விதமான தர்க்கமும் இல்லை. மதரீதியான துன்புறுத்தல் என்பது சக மதத்தவரைப் பாதிக்காது என்ற ஊகமும் தவறானதே. பங்களாதேஷில் தஸ்லிமா நஸ்ரினுக்கு நடந்தது ஓர் உதாரணம். அவரோ, அவரைப் போன்று அச்சுறுத்தப்படும் நபர்களோ இந்தத் தீர்மானத்தால் பயனடைய முடியாது. பங்களாதேஷத்து இந்துக்களை விடக் கூடுதலாக மதரீதியான கொடுமைகளை தஸ்லிமா அனுபவித்திருக்கக்கூடும். அதைப் போலவே பாகிஸ்தானில் ஷியா பிரிவினர் கடும் கொடுமைகளுக்கு உள்ளாகியுள்ளனர். பயனாளிகள் பட்டியலில் நாத்திகர்கள் விடுபட்டிருப்பது அதிர்ச்சி தருவது.

'மதரீதியான சிறுபான்மையினர்' என்ற சலுகையில் ஆறு மதக் குழுக்களை (இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள்) மட்டுமே மட்டுறுத்தியிருப்பதும் கேள்விக்குரியதே. பாகிஸ்தானில் அகமதியாக்கள் முஸ்லிம்களாக அங்கீகரிக்கப்படாமல் வேற்று மதத்தினராகவே நடத்தப்படுகின்றனர். இஸ்லாமின் அர்த்தத்தை மாற்ற நினைத்த மதத்தவர்களாக அவர்கள் கருதப்படுகின்றமையால், கிறிஸ்தவர்கள் அல்லது இந்துக்களை விடவும் மோசமாகத் தண்டிக்கப்படும் மக்கள் குழுவினராக உள்ளனர். தாங்கள் பிறந்த நாட்டில் மதரீதியாக அச்சுறுத்தப்பட்ட நிலையில் புலம்பெயரும் மக்களுக்குக் குடியுரிமை வழங்குவதுதான் குடியுரிமைச் சட்டத்திருத்தத்தின் நோக்கம் என்றால், அதன் பட்டியலில் அகமதியாக்கள் இல்லாதமை அதன் நோக்கத்தை மேலும் தெளிவாக்குகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 14ஆவது பிரிவு சொல்வதுபோல், இந்திய நிலப்பரப்புக்குள் எந்த நபருக்கும், எந்தக் குடிமகனுக்கும் 'சட்டரீதியான சமத்துவம்', 'அனைவருக்கும் சட்டரீதியான பாதுகாப்பு' ஆகிய அம்சங்களை அரசு மறுக்க முடியாது. குடியுரிமைச் சட்டத்திருத்தத்தில் இருக்கும் பொருந்தாத அம்சங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, ஒரே மாதிரியாகப் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியாவுக்கு 'சட்டவிரோத'மாகப் புலம்பெயர்ந்து வந்தவர்கள் எனில், அவர்களுக்கு சட்டரீதியான சமமான பாதுகாப்பை இந்தத் திருத்தத்தால் கொடுக்க முடியாமல்போவது மட்டுமல்ல கூடுதலாகத் தகுதி கொண்டவரைப் புறக்கணித்து, குறைவான தகுதி கொண்டவருக்கே குடியுரிமை அளிக்கும் அம்சத்தையும் இந்தத் திருத்தம் கொண்டுள்ளது.

### எதன் தொடக்கம் இது?

மியன்மாரில் தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக இந்தியாவுக்குள் நுழையும் ஒரு ரொஹிங்கியா முஸ்லிம் இந்தியக் குடியுரிமைக்குப் பரிசீலிக்கப்பட முடியாத நிலையில், மதரீதியாக உயிருக்கு அச்சுறுத்தப்படாத நிலையில் பங்களாதேஷிலிருந்து பொருள் தேடலுக்காக வரும் ஓர் இந்துவை மதரீதியான அச்சுறுத்தல் என்று எந்த அடிப்படையில் குடியுரிமைக்குப் பரிசீலிப்பதை ஒருவர் விளக்க முடியும்? கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு படகில் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் தமிழர் 'சட்டவிரோதக் குடியேறியாகவா இருக்க முடியும்? தொடர்ந்து இங்கே வாழ்வதன் இயல்பில் அவர் ஏன் குடியுரிமைக்கு விண்ணப்பிக்க இயலாது? இதைப் போன்ற பல்வேறு உதாரணங்களை வைத்து குடியுரிமைச் சட்டத்திருத்தத்தின் வலுக்கட்டாய இயல்பை வெளிப்படுத்துவது அத்தனை சிரமமான காரியமல்ல. குடியுரிமையைப் பெறுவதற்கு இந்தியாவில் வசிக்க வேண்டிய காலம் 11 ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்திருத்தச் சட்ட விதிகளின்படி அனைவருக்கும் பொதுவானதாக அன்றி சிலருக்கு மட்டுமே சலுகை காட்டுவதாக அமைந்துள்ளது. மேலே சொல்லப்பட்டதுபோல, அரசமைப்புரீதியான எந்தத் தர்க்கத்துக்குள்ளும் குடியுரிமைச் சட்டத்திருத்தத் தீர்மானம் வரவில்லை. ஆனால், குதர்க்கமான அரசியல் தர்க்கம் அதில் இருக்கவே செய்கிறது. சட்டத்தின்படி இந்தியாவை இந்து ராஷ்டிரமாக்குவதற்கான முதல் முயற்சி இது. இது அரசமைப்புக்கு ஒவ்வாத சட்டம் என்று இந்திய நீதித்துறை வலியுறுத்திக்கூற வேண்டும். அப்படிச் செய்யாமல்போனால், இது முடிவாக அல்ல. இதுபோன்ற சட்டரீதியான நகர்வுகளுக்கு இது தொடக்கமாகவே அமையும்.




நன்றி : தி இந்து.

# க்னிவிஸ் அவுட் Knives Out




**கதை**

ஹர்லான் த்ராம்பே (கிரிஸ்டோவ்பர் ப்ளம்மர்) ஒரு புகழ் பெற்ற க்ரைம் நாவலாசிரியர். தன்னுடைய 85ஆவது பிறந்த நாளன்று தனது குடும்பத்தினர் அனைவரையும் தனது மாளிகைக்கு வரவைக்கிறார். தனது மகன், மகள், பேரன் என எல்லோர் மீதும் அவருக்கு அதிருப்தி இருக்கிறது. விருந்து முடிந்த இரவில், தனது கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு இறந்து போயிருக்கிறார் ஹர்லான்.

இது உயிர்மாய்ப்பு எனப் பலரும் முடிவுகட்டிவிட்ட நிலையில், இந்த விவகாரத்தை விசாரிக்கச் சொல்லி துப்பறிவாளரான போனி ப்ளாங்குக்கு (டேனியல் க்ரெய்க்) யாரோ பணம் அனுப்பி வைக்கிறார்கள்.

அந்த வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஹர்லானைக் கொலை செய்வதற்குக் காரணம் இருக்கிறது. ஹர்லானின் தாதி மார்ட்டாவை (ஆனா தர்மாஸ்) விசாரித்தால், அவள் ஒரு புதுக் கதை சொல்கிறாள். ஹர்லான் சாவதற்கு முன்பாகத் தனது சொத்து முழுவதையும் மார்ட்டாவுக்கே எழுதி வைத்திருக்கிறார். ஆகவே, அவள் கொலை செய்திருக்கலாமோ? இந்தக் கொலையைச் செய்தவர் யார் என்று பல கோணங்களில் நகர்கிறது மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

போனி ப்ளாங்காக வரும் டானியல் க்ரெய்க் மற்றும் ஹர்லானாக வரும் கிரிஸ்டோவ்பர் ப்ளமர் ஆகியோரின் நடிப்பு அட்டகாசம்.

மர்மக் கதைகளுக்கே உரிய தனித்திருக்கும் மாளிகை, சுருட்டுப் புகைக்கும் துப்பறிவாளன், அற்புதமான பின்னணி இசை, தேர்ந்த நடிகர்கள் என ஒரு சிறப்பான அனுபவத்தைக் கொடுக்கிறது இந்தப் படம்.

**பலம் - பலவீனம்**

ஹொலிவூட்டிலிருந்து நீண்ட காலத்துக்குப் பிறகு வெளியாகியிருக்கும் ஓர் அட்டகாசமான விறு விறுப்புப் படம். அகதா கிரிஸ்ரியின் கதையில் வருவதைப் போல, சந்தேகத்துக்குள்ளாகும் எல்லோருக்குமே கொலை செய்வதற்கான காரணம் இருக்கிறது. பார்வையாளர்கள் ஒருவரை, குற்றவாளி என முடிவுசெய்ய, துப்பறிவாளர் வேறொருவரை அடையாளம் காட்டுகிறார். இந்த மர்மத்தில் இருக்கும் புதிர்களைக் கிரிஸ்ரியின் பொய்ரோவைப் போலவே அட்டகாசமாக அவிழ்க்கிறார் போனி ப்ளாங்க். கொலை செய்தவர் யார் எனப் படம் பார்ப்பவர்களுக்கு முன்பே காட்டிவிட்டு, அவர்கள் எப்படி அந்தக் கொலையைச் செய்யவில்லை என முடிவில் சொல்கிறார் இயக்குநர், இறுதியில் பெரும் திருப்பம். ஏற்கனவே ஹொலிவூட்டில் வெளியாகிய பல படங்களின் தாக்கம் இந்தப் படத்தில் தென்படுகிறது. இருந்தாலும் மர்மக் கதை விரும்பிகள் தவறவிடக்கூடாத படம்.

# மை ஸ்பை

**கதை**


வெட்டுக்குத்து, சண்டை அழித்தொழிப்பு என உளவாளியாக வலம் வருபவர் ஜேஜே. ஒன்பது வயதுக் குழந்தைக்கு உரிய துடினம், எதையும் துழாவும் ஆர்வம் எனப் பட்டாம் பூச்சியாகச் சிறகடிக்கும் சிறுமி ஷோவ்பி. உளவு பார்ப்பதற்குச் சென்ற இடத்தில் ஷோவ்பியுடன் ஓர் உடன்படிக்கையில் சிக்குகிறார் உளவாளி. அதன்படி தனது உளவு உலாவில் சிறுமியையும் சேர்த்துக்கொள்கிறார்.

ஆரம்பத்தில் சுலபமாகத் தோன்றினாலும், ஒரு கட்டத்தில் எதிரிகளிடம் மோதுவதைவிடச் சிறுமியைச் சமாளிப்பதே பெரும் சவாலாகி விடுகிறது உளவாளிக்கு.


இதனால் தடுமாறுகிறார் உளவாளி. ஒரு பக்கம் எதிரிகளிடம் அதிரடி செய்தாலும், மறுபக்கம் சிறுமியிடம் நயந்து போக வேண்டியதாகிறது. முரட்டு மனிதனின் புரட்டு உலகமும், வளரும் சிறுமியின் மலர்ச்சியான உலகமும் ஒன்றோடொன்று ஊடறுக்கையில், இருவருக்கும் இடையில் புதிய சவால்கள் எழுகின்றன. சண்டையும், நகைச்சுவையும் கலந்த காட்சிகளில் வழியே இருவருக்குமான சவால்களை எதிர்கொள்வதே 'மை ஸ்பை' திரைப்படத்தின் மீதி.

**பாத்திரங்கள்**

முன்னாள் மல்யுத்த வீரரான டேவ் பட்டிஸ்டா, கன்னக் கதுப்பில் கொடூர வடு உடன் உளவாளியாக வருகிறார். இயக்குநர் பீட்டர் சேகலுடன் படத்தயாரிப்பிலும் இணைந்துள்ளார் டேவ். சிறுமி ஷோவ்பியாக க்ளோ கோல்மன் நடித்துள்ளார். இந்தத் திரைப்படம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.




● வ.துசாந்தன்



## தடை நீங்கியது

தடையெல்லாம் நீங்கியது
தரையெல்லாம் மடு
தண்ணீர் ஓடையெல்லாம்
அகழ்வு
தடமெல்லாம் படம்
தலைக்கெல்லாம் பணம்
தத்தளிக்கிறான் விவசாயி
தடுக்கவும் யாருமில்லை
தங்கு தடையின்றி ஓட்டம்
தவிக்கப்போவது இளம்
தலைமுறை

# சந்தோசங்கள்...

மிருசுவில் தமிழ்தாசன்



கணேசனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஏன் அவனுடைய மனைவி மகேசுக்கு மட்டும் என்னவாம்? கணவனை விட இரட்டிப்பு மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்துக் குச்சுப்புடி ஆடிக் கொண்டிருந்தாள். இத்தனைக்கும் காரணம், மில் முதலாளி அன்னலிங்கத்திடமிருந்து கிடைத்த அந்த மகிழ்ச்சியான தகவலே.

ஒன்றல்ல இரண்டல்ல தொடர்ச்சியாகப் பதினைந்து ஆண்டுகள் அந்த அரிசி ஆலையில் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்தவர் தான் கணேசன். மூடை தூக்குவது, இயந்திரத்தில் நின்று நெல் குற்றுவது, மிளகாய் அரைப்பது அத்துடன் தேவையறிந்து சமயோசிதமாகவும் விசுவாசமாகவும் முதலாளிக்கு உழகை;கின்ற ஒரு மனிதன். சேவைக்கேற்ற ஊதியம் கிடைத்தாலும் அவரின் தேவைக்கேற்ப கிடைக்காதது தான் துர் அதிர்ஷ்டம். அது மட்டுமல்ல அரிசி ஆலைப் பணியென்பது கடுமையான உடல் அசதியையும் ஆரோக்கியக் குறைவுகளையும் கொடுத்து அதன் விளைவாக நோயாளி போன்ற நிலைக்கும் ஆளாகி விட்டார் கணேசன். அன்னலிங்கமும் தான் என்ன



செய்வார்! பயனற்ற ஒருவரை வைத்திருந்து மாதாந்தம் சம்பளத்தை எண்ணிக் கொடுக்க அவரொன்றும் விவரம் தெரியாத மனிதரல்ல. கறியிலிருந்து கறிவேப்பிலையை எடுத்து மெல்ல வெளியே வீசிவிடுவது போல் நோகாது கணேசனை அகற்றிவிட்டார். விலக்கும்போது சேமலாப நிதிபோல ஏதாவது சிறப்பாகக் கொடுப்பனவுகள் தனக்குக் கிட்டுமோ எனக் கணேசர் நப்பாசைப்பட்டது உண்மை தான். ஆனால் அது வெறும் நிராசையே என்பதை அவர் உணர்ந்து கொள்வதற்கு நேரம் எடுக்கவில்லை.

⊙ ⊙ ⊙ ⊙

மகேந்திரனும், தில்லைநாதனும் கணேசர் வீட்டுக்குச் சென்ற தருணம் கணேசர் வீட்டிலிருக்கவில்லை.

"அக்காள்! எங்கடை அன்னலிங்கம் முதலாளி, அண்ணையை இண்டைக்குப் பின்னேரம் நாலுமணிக்கு ஒருக்கால் வந்திட்டுப் போகட்டாம். இவ்வளவு காலமும் தனக்கு உழைச்சுத்தந்த மனிசனாம், அவருக்கு ஏதேனும் சந்தோஷமாகச் செய்ய வேணுமெண்டு தான் விரும்புறார் எண்டு வரச்சொன்னவர்"

தகவலை வழங்கியவர்கள் தகரப்படலையைத் திறந்து சாத்திவிட்டுச் சைக்கிளில் தொற்றிக்கொண்டனர்.

"ஏனப்பா நிண்டு மினக்கடுறியள்...? நாலு மணிக்கெல்லே முதலாளி வரச் சொன்னவர் கெதியாய் வெளிக்கிடுங்கோவன்"

மெதுவாக ஆடிக்கொண்டிருந்த பொம்மைக்கு 'வைன்' கொடுத்துச் சற்று வேகமாக ஆடவைத்தாள் மகேசு.

"முதலாளி ஏதோ காசோ, களஞ்சோ குடுக்கப் போறார் போலை! பின்னையென்ன அவ்வளவுக்கு மனச் சாட்சியில்லாதவரே! எப்பிடியும் ஒரு பத்தாயிரமெண்டாலும் குடாமல் விடார்! அந்தப் பெரிய பணக்கார மனிசனுக்குப் பத்தாயிரம் ஒரு தூசு எல்லோ! சில வேளை கூடவும் குடுப்பர். பிள்ளையாரே குடுத்தாரெண்டால்..."

மகேசு கற்பனை வலைகளைப் பின்னி இனம் புரியாத பரபரப்பு நிலைக்காளானாள்.

கிணற்றடியில் துவைத்துக் காயப்போட்டிருந்த வேட்டியை எடுத்து மெல்ல உதறிய கணேசனுக்கு அது சற்று ஈரமானதாகவிருப்பது புரிந்தது. உதையெல்லாம் பாத்துக்கொண்டிருக்க நேரம் காணாது. அது உடம்புச் சூட்டுக்குக் காய்ஞ்சிடும். மனதைத் தேற்றியபடி வேட்டியை இறுக்கமாகக் கட்டியாயிற்று. சேர்ட்டும் அவ்வளவு நல்லதல்ல. எனினும் அதை அணிந்து போனால் தான் தன்னுடைய ஏழ்மை நிலையை முதலாளிக்குத் துல்லியமாகக் காட்ட முடியும். அவருடைய மனமிரங்கினால் தரவிருக்கும் பணத்தின் தொகையும் சற்று அதிகமாகலாம் என்பது கணேசனின் கணிப்பு. இது ஒரு புறமிருக்க இப்போது அன்னலிங்கம் முதலாளியின் வீட்டுக்குப் போகவிருக்கும் விடயம் காட்டுத் தீயாகப் பரவிவிட்டது.

"அப்பா! முதலாளியிட்டைக் காசு வாங்கி எனக்கொரு புதுச்சட்டை வாங்கி வாருங்கோ! ரேவதி அன்ரியின்ரை ரேஷ்மா போட்டிருக்கிற சட்டை மாதிரித் தோள் மூட்டிலை வெட்டுவைச்சு இடுப்பிலை பூப்போட்டுத் தைச்சிருக்கும். கண்டனிங்களோ ரெஷ்மாவின்ரை சட்டையை? என்ரை அப்பாக்குட்டியெல்லே கட்டாயம் வாங்கிவரவேணும், என்னப்பா! என்ரை ஆசை அப்பா எல்லே!"

ஐந்து வயதுப் பிறேமினி ஓடிவந்து கணேசனின் நாடியைத் தடவிக் கொஞ்சிக் கொண்டிருந்தாள் இதனைக் கண்ட மூன்று வயது ஷர்மிலா சும்மா இருப்பாளா!

"அப்பா எனக்குக் கேக்கும் அண்டைக்கு பூமணி அன்ரியவை கலியாண வீட்டிலை தந்தினம் லட்டு... பூந்தி லட்டு அதுவும் வாங்கிவரவேணும் என்னப்பா"

தன்னுடைய பங்குக்கு ஷர்மிலாவும் கோரிக்கை விடுத்துவிட்டாள். ஏழுவயது திலகா மட்டும் எதையும் கேட்காது மௌனமாகவே நின்று வேடிக்கை பார்த்தாள். மூத்த பிள்ளையென்னும் பொறுப்புணர்வு இந்தப் பராயத்திலே அவளுக்கு வந்து விட்டதோ என்னவோ!

⊙ ⊙ ⊙ ⊙

கணேசன் திருமணம் முடிக்கும் போது வயது நாற்பதை நெருங்கியிருந்தது. பிந்திய திருமண மென்பதால் பெண்பிள்ளைகள் மூன்றுமே குஞ்சும் குருமனுகளுமாகவே இருந்தனர். ஏழ்மை நிலை குடும்பத்தை வாட்டி வதைத்தாலும் பிள்ளைகள் மூவர் மீதும் கணேசன் உயிரையே வைத்திருந்தார். முதலாளியிடமிருந்து பணம் கிடைக்கும் பட்சத்தில் பிள்ளைகளின் வேண்டுதல்கள் யாவும் நேர்த்தியாக நிறைவேற்றப்படும். இது அந்தக் குடும்பத்தில் நன்றாகத் தெரிந்த புரிந்த விடயம்தான். வேலியில் சாத்தியிருந்த சைக்கிளைப் பின்பக்கமிழுத்து றிவேர்ஸ் போட்டு ஒரு சுற்றுச் சுற்றி தெருப்படலையைத் திறந்து தொற்றுவதற்கு தயாரானார்.

"இஞ்சை சொல்லிப்போட்டன். முதலாளியிட்டைக் காசு வாங்கிச் சும்மா கண்டது கடியதுகளை வாங்கிச் செலவழிக்காமல் அப்படியே கொண்டுவந்திடவேணும். கனகண்ணையின்ரை கடைக்கு நாலாயிரத்துக்குக் கிட்டக் குடுக்கவேணும். மனிசன் பாவம் பாத்து நெருக்காமலிருக்குது. தேவி அக்காவிட்டை ஐயாயிரம் வாங்கி வருஷம் ஒண்டாகப் போகுது. என்ன நினைக்குங்கள். உழைப்புப் பிழைப்பில்லாமல் மூண்டு மாதமாய்ச் சும்மாயிருந்தால் கடன் தானே வரும். சொல்லிப் போட்டன். அப்பிடியே காசைக் கொண்டாருங்கோ என்ன!"

மனைவியின் இத்தனை தொணதொணப்புகளையும் கேட்டுக்கொண்டு சைக்கிளில் பெடல் மிதித்து ஏறிக் கொண்டார் கணேசர்.

காலம் சென்று கல்யாணம் முடித்திருந்;தாலும் கட்டிய மனைவி அவரைப் பொறுத்தவரைக்கும் கட்டித் தங்கமே. கணவன் மீது கொண்ட பாசம், பிள்ளை வளர்ப்பு, குடும்ப நிர்வாகம், சிக்கன வாழ்க்கை என்று எல்லா இலட்சணங்களையும் ஒருங்கே கொண்டிருக்கும் மகேசுவைத் திருமணம் செய்ய அவர் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கணேசரின் மனம் இவ்வாறு அவ்வப்போது சொல்லி ஆறுதற்படத் தவறுவதில்லை.

⊙ ⊙ ⊙ ⊙

"என்னப்பா இந்த மனிசன் என்ன செய்யுதாக்கும் பின்னேரம் நாலுமணிக்கு வெளிக்கிட்ட மனிசன்!இரவு எட்டுமணியுமாகப் போகுது. இனி இந்த மழை இருட்டுக்கிளாலை'சே! ஏன் மினைக்கடுறார்"

மகேசுவின் இதயத்தில் ஆத்திரமும் அங்கலாய்ப்பும் நின்று அலைத்துக் கொண்டிருந்தன. அவளும் பாவம் என்ன செய்வாள் பிள்ளைகளும் அப்பாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து ஏமாந்த நிலையில் தூங்கி வழிந்து கொண்டிருக்கின்றார்கள். கடைக்குட்டி ஷர்மிலா தெருப்படலையைப் பார்த்துப் பார்த்து ஏமாந்த நிலையில் வெறுந்தரையிலே படுத்து உறங்கிவிட்டாள். இருந்தும் விம்மல் மட்டும் நின்றபாடில்லை. அவளுக்குக் கேக்கும் பூந்திலட்டும் வேண்டுமல்லவா! இரண்டாவது மகள் பிறேமினியும் பார்த்த வழி பார்த்து கண்கள் பூத்துப்போய் உறங்கிவிட்டாள். நேரம் ஒன்பது மணியையும் தொட்டுவிட்டது.

(21ஆம் பக்கம் பார்க்க)

## சந்தோசங்கள்...



(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

மகேசு அனலிடைப் பட்ட புழுவாகத்துடித்தாள். எதிர்மறையான எண்ணங்கள் வந்து பயம் காட்டிக் கொண்டிருந்தன. என்னவோ! ஏதோ எனப் பதறியபடியிருக்கையில் படலையில் ஓட்டோ ஒன்று வந்து வில்லாசமாகத் தரித்தது.

எட இந்த மனிசன் உவடத்துச் சாமானுகளெல்லாம் வாங்கிக் கொண்டு சைக்கிளிலை வர ஏலாமல் ஓட்டோ பிடிச்சு வந்திருக்குது ஆக்கும். இண்டைக்கு வரட்டும். நினைத்தபடி படலையை நோக்கி ஓடினாள். மூத்தவள் திலகாவும் பரிதாபமாகத் தாயைப் பின்தொடர்ந்தாள்.

"கணேசண்ணை எழும்பண்ணை வீடு வந்திட்டுது. சைக்கிளை இறக்கடா இதிலை. அக்காள் எங்கடை அன்ன லிங்கம் முதலாளி கணேசண் ணைக்கு நல்ல சந்தோஷமெல்லாம் செய்து தான் அனுப்பினவர் குடிவகை கள் என்ன? கோழிப்பொரியல் என்ன? எல்லாம் சட்டப்படி தான் செய்திருக்கிறார். பதினைஞ்சு வரியமா அவரோடை நிண்டு உழைச் சுத் தீந்தவரெண்டு சும்மா ஊத்தி ஊத்திக்குடுத்தார். இப்பிடி எந்த முதலாளியும் செய்வரே! சந்தோஷ மெண்டால் சந்தோஷம் தான். மகேந்திரனும் தில்லைநாதனும் ஒரே குரலில் கூறியபடி மதுமயக்கத்தில் தன்னை மறந்து கிடந்த கணேச னைத் தூக்கி வீட்டு விறாந்தையில் போட்டு விட்டு நைசாக ஆட்டோவில் ஏறிப்பறந்தனர்.

கொண்டுபோயிருந்த சைக்கிள் மட்டும் உருப்படியாக வந்திருந்தது. ஷேர்ட்டுப் பையைப் பார்த்தாள் மகேசு எதுவுமேயில்லை ஏதாவது அன்பளிப்புகள்!

காசுபணம் என்ற கதைக்கே இட மில்லை. மதுவைக்கொடுத்து மதியைக் கெடுத்த சந்தோஷம் தான் பதினைந்து வருடங்களாக உழைத்த ஊழியத்துக்குப் பெற்றுக்கொண்ட சந்தோஷம்.

மகேசுவுக்கு தலை சுற்றிக்கொண்டு வந்தது அடக்க முடியாத ஏம்பலிப்பு டன் தரையில் வீழ்ந்து மூர்ச்சையானாள்.

■

## சொற்சிலம்பம் போட்டி இல: 599

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | 3 | ■ | 4 | |
| 5 | 6 | | ■ | 7 | 8 | | ■ |
| 9 | | ■ | 10 | | | ■ | 11 |
| | ■ | 12 | | | ■ | 13 | |
| | ■ | 14 | | ■ | 15 | | |
| ■ | 16 | | ■ | 17 | ■ | 18 | |
| 19 | | ■ | 20 | | | ■ | ■ |
| | ■ | 21 | | | ■ | 22 | |

அனுப்புபவர் பெயர்:.........................................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

...................................................................................

கையொப்பம்:.....................................................................

### இடமிருந்து வலம்

2. பகுபதத்தின் இறுதி உறுப்பு
4. நதி
5. பேரவை
6. தேசம்
7. வேள்வி
9. மாதா
10. ஓர் நேர அளவு சூரியன் உதித்து மறையும் வரையானது.
12. அலங்கார வடிவம்
13. வனம்
14. உறவுக்கு எதிர்
15. போதுமான அளவு
16 தன்மைப் பன்மைச் சொல்
18. சிறையில் இருப்பவன்
19. உற்சவ மூர்த்தியை இழுத்துச் செல்லும் கோயில் வாகனம்
20. எளிதில் புரிந்து கொள்ளாதவன்
21. இரத்தம்
22. பாதை

### மேலிருந்து கீழ்

1. சண்டைக்கு எதிர்
2. பிடித்திருப்பதை நழுவச் செய்தல்
3. அர்ப்பணம்
4. இல்லை என்பதற்கு எதிர்
6. ஓர் பிராணி
7. வேள்வி
8. ஒரு பருப்பொருள்
10. நீள சதுர வடிவங்களிலான மரத்துண்டு
11. விரைவு வண்டி
12. சினம்
13. ஓர் கருநிறப் பறவை
16. வாழை முதலியவற்றின் இழை
17. இறைவன் மீதான பற்று
19. பூக்களிலிருந்து தேனீக்கள் சேர்ப்பது
20. மணமகனுக்குப் பெண் வீட்டார் அளிக்கும் விருந்து

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப் போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வரு கின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 597 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) திருவாசகம் (6)திகில் (7) சதி (9) கவடு (10) யாத்திரை (11) தருணம்' (12)புல் (13)மது (15)மரு (17)முகம் (18)காவலாளி (20) அரபு (21)மாயம்

**மேலிருந்து கீழ்**

(1)தியாகம் (2)வாதிடுதல் (3) சதி (4)கல்யாணம் (5) கதிரை (8) திரை (12) புருவம் (13) மகரம் (14) தும்பு (15) மகான் (16) எளிய

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனை களும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.599**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன் கள் நியூ உதயன் பப்ளிக்கே ஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பா ணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (25.12.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.599 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 29.12.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட் டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிர சுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு. இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி, தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள இயலும். போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 597 இற் கான சரியான விடைகளை எழுதி அனுப்பிய வர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக் கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

செ.உதயகுமார்,
இல.140 புன்னை நீராவி, விடுவமடு,
முல்லைத்தீவு.

**2 ஆம் பரிசு**

நா.மோகனேஸ்வரன்,
இல.8/1 தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**

பி.டிலக்சன்,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

**4 ஆம் பரிசு**

திருமதி ப.சிவன்நேசன்,
'நிம்மதி' தேவாலய வீதி,
சங்கானை.

**5 ஆம் பரிசு**

தா.ஸ்ரீதரன்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

### பாராட்டுப் பெறுவோர்


மு.செல்வராணி,
இல.6/6 பெருமாள் கோவில்,
வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

ச.வசந்தராணி,
நெடுங்காடு,
காரைநகர்.

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**சொற்சிலம்பம் போட்டி 597 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

தாஸ் மாஸ்ரர்




# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

கொழும்பிலுள்ள சில மேல் நீதிமன்றங்களிலும் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மேல்நீதிமன்றங்களிலும் காலவரையறையற்ற தடுப்புக் காவல் உத்தரவை மேல் நீதிமன்ற நீதிபதியே நீக்கம் செய்து வழக்கு முடிந்த ஒருவரை உடனே விடுதலை செய்யும் நடைமுறை இருந்தது. இதில் நீதியரசரான இராமச்சந்திரன் முன்னோடியாகச் செயற்பட்டார்.

இவ்வாறு நீக்கம் செய்யும் முறை வேறு நீதிமன்றங்களில் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. பொலிஸார் பெற்றுக்கொள்ளுகின்ற அல்லது தயாரிக்கின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்துச் சட்டமா அதிபர் திணைக்களம் சந்தேக நபருக்கு எதிரான வழக்குகளை வழங்குகிறது. இந்த வழக்குகள் பல தரப்பட்டவை. இதில் பெரிய வழக்குகள் இரண்டாம் பிரி வுக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

உதாரணமாக,

2(1) எச் ர் - ஆயுதப் பயிற்சி, தாக்குதல்கள்

2(1) ஏ யு - முக்கிய உறுப்பினர், புலனாய்வு

3 பிரிவு - கொலை, பொதுச் சொத்துக்களை அழித்தல்

5(1) பிரிவு

5(1) டீ இயக்க உறுப்பினர்களின் நடமாட்டம் பற்றி தெரிந்திருந்தும் காட்டிக் கொடுக்கவில்லை என்பது.

அநேகமாக எல்லோருக்கும் 2ஆம் பிரிவு வழக்கு ஒன்றும், 5ஆம் பிரிவு வழக்கு ஒன்றும் வழங்கப்படுவது சாதாரணமாக இருந்தது. என் மீது 2(1) யு பிரிவில் இரண்டு வழக்குகளும் 5 டீ பிரிவில் ஒரு வழக்கும் போடப்பட்டன. சந்தேக நபர் மீது சுமத்தப்படும் வழக்குகள் பற்றிய விவரங்கள் அடங்கிய கோவைப்படுத்தப்பட்ட காகிதத்தைக் குற்றப்பத்திரிகை என்று சொல்கிறார்கள். குற்றப்பத்திரிகையின் முதற் பக்கத்தில் இலங்கை அரசின் இலட்சினை இருக்கும் அதன் கீழ் குற்றப்பத்தி ரம் கண்டி நீதி நிர்வாகத்தின் மேல் நீதிமன்றம் சட்டமா அதிபதியின் இலக்கம், மேல் நீதிமன்றத்தின் குற்ற வழக்கு இலக்கம், அதன் கீழ் இலங்கை ஜனநாயகச் சோசலிச குடியரசு எதிர் குற்றம் சுமத்தப்பட்டவரின் பெயர், அதன் கீழ் : இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டமா அதிபதியின் கட்டளைப்படி உமக்கு எதிராகக் குற்றப்பகர்வு செய்யப்பட்டுள்ளது. உமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பின்வருமாறு என அவை குறிப்பிடப்பட்டிருக்கும். இந்தக் குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்டவர் எதிர் இலங்கை அரசு என்பதே கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம்.

⁂ ⁂ ⁂ ⁂ ⁂

ஆனால், தீங்கியல் குற்றவாளியின் வழக்கு மேற்குறிப்பிட்டவாறு அமையா கொலை உண்டவரின் சார்பாக யாராவது இருப்பார். குற்றம் சாட்டப்பட்டவர் எதிரி என்றே சொல்லப்படுகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகளில் ஒரு குற்றத்தை இருவர் சேர்ந்து செய்திருந்தால் கூட ஒருவர் மற்றவருக்குச் சாட்சி சொல்ல முடியாத நிலை இருப்பதால் முற்றுமுழுதாக விசாரணையாளர்களே சாட்சிக்காரராக இருக்க ஏற்பாடு உள்ளது. இதை விட ஒருவர் மீது சாட்டப்பட்ட குற்றம் குறித்துக் குற்றப்பத்திரம் இவ்வாறு கூறுகின்றது.

(உதாரணம்)

1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் திகதிக்கும் 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்கும் இடைப்பட்ட கால எல்லைக்குள் இந்த நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட கொழும்பில் நீர் 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1988ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான ஏதேனும் ஒன்றை அதாவது எல். ரி.ரி.இ. பயங்கரவாத இயக்கத்துக்குக் கொழும்புப் பகுதி பாதுகாப்பு நிலவரம் பற்றிய தகவல்களைக் கொடுத்து உதவியதோடு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையைக் கொலை செய்வதற்கும் கொலை தாக்குதல் மேற்கொள்ளக்கூடிய 3 வழிமுறைகள் பற்றிய விவரங்களைக் கொடுத்து உதவியோடு அந்தப் பிரமுகரின் போக்குவரத்துக்கள் பற்றிய விவரங்களையும் பெற்றுக் கொடுத்து வேறு வகையான வன்செயல்கள் இடம் பெறச் செய்யக் கருதியதன் மூலம் 1988ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்பு ( தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் 2 (1) யு பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(2) (11) பிரிவின் கீழ் தண்டனை விதிக்க கூடிய குற்றத்தை புரிந்துள்ளீர்.

(ஒப்பம்)
திகதி அரச சட்டவாதி

அடுத்த பக்கத்தில்
வழக்குத் தொடுக்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்ட பொருள்கள்

1. எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம்
2. ஆயுதங்கள்
3. ஏனையவை

வழக்கு தொடுக்குநரின் பக்க சாட்சிக்காரர்கள்

1. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்
2. புலனாய்வுப் பணியக தலைமையகம்
3. தட்டச்சுச் செய்தவர்

என அமையும். சிலருக்கு 10க்கு மேற்பட்ட சாட்சிகளும் மத்திய வங்கி விவகாரம், அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்காவை குண்டு வைத்துக் கொலை செய்ய முயற்சித்தவை போன்ற 100க்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)



வ.துசாந்தன்

## இந்திரனே காப்பாய்!!

இறைஞ்சினோம் மழை வேண்டி
இரங்கிய் ஆண்டவனும்
இடி இடித்து சொரிகின்றான்.

இலைகள் அசையாதிருக்க
இல்லிடம் ஒழுக
இரவு பகல் கண்விழிப்பு.

இருப்பிடத்தில் நீர்
இக்கணமே அகதி
இருள் சூழ்ந்த வாழ்க்கை.

இக்காலமும் விவசாயம்
இட்ட முதலும் மண்ணோடு
இதயமும் வலுவிழக்க

இப்போது வேண்டாம்
இம்மழை போதும்
இந்திரனே காப்பாய்.

சிவரம்யா





கண்ணின் ஒளியாய்
கலங்கரை விளக்காய்
பெண்ணிற்கு இலக்கணமாய்
ஒளிரும் பைங்கிளி

மலரும் செந்தாமரையாய்
மயக்கும் எழில் தேவதையாய்
பொறுமையின் சிகரமாய்
அமைந்த பசுங்கொடி

துணையென நீ அமைவாய்
துன்பங்கள் தனை களைவாய்
கனிமொழி நன்கு பகர்வாய்
மாறாது நின் சொந்தம்

## வெளியேற வழிதேடு...



கனக்கும் கனவுகளில்
மெல்ல நகர்கின்ற காலம்
வீழும் மழைத்துளிகளில்
களவாடப்படுகின்ற காலடிச்சுவடுகள்

நாளையென்ற வினாக்குறிக்காய்
மறக்கப்படுகிற இன்றையபொழுதுகள்
இல்லாதவற்றின் தேடலில்
தொலைகின்ற இருப்புக்கள்


பாராமுகங்களுக்கான ஏக்கத்தில்
அந்நியப்படுகின்ற உறவுகள்
மனதிருக்கும் காதல்படிமங்களால்
மறுக்கப்படுகின்ற மணவறைகள்

நவநாகரிகப் போக்கில்
மறையமறுக்கும் உடல்கள்
ஆடம்பர ஆன்மீகத்தீயில்
எரிக்கப்படுகின்ற நன்நெறிகள்
இருள் கவ்வும் இரவிற்கு பயந்து
பகலில் பதுங்கும் பாவப்பிறவிகள்
நிலவொளியை வெறுத்து
நட்சத்திரங்களைத் தேடும் கண்கள்

இவற்றிற்குள் அகப்பட்டதே
சராசரி வாழ்வின்பயணம்
வெளியேறும் வழிதேடி
வாழ்ந்திடு இன்பவெளியில்.

● கந்தர்மடம் அ. அஜந்தன்

# புலிகளின் குரல் சிங்கள ஒலிபரப்பு



## கொட்டி ஹண்ட சிங்கள விக்காசிய

■ இ.தே.தே.

போர்க் களத்தில் எதிரியை வீழ்த்துவதற்கான முக்கியமான தந்திரோபாயமாக உளவியல் போர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த உளவியல் போருக்கு வானொலி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை வரலாறு எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. இரண்டாம் உலகப்போரில் எதிரியைத் தோற்கடிப்பதற்காகக் ஹிட்லர் வானொலியை நன்கு பயன்படுத்தினான் என வரலாறு உள்ளது. போரில் எதிரியின் மனோபலத்தை தகர்ப்பதற்கு வானொலியைப் பயன்படுத்தினார்கள். இதற்காக எதிரியின் மொழியில் வானொலி ஒலிபரப்பை நடத்துவது வழமை. அந்த அடிப்படையில் இலங்கையின் உள்நாட்டுப் போர்க் களத்தில் எதிரியை வீழ்த்துவதற்காக வானொலி கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தது. வானொலி எதிரியின் மனோபலத்தை சிதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த நோக்கம் கருதி விடுதலைப்புலிகள் சிங்கள மொழி ஒலிபரப்பை ஆரம்பிக்கிறார்கள்.

#### சிங்களச் சேவையின் ஆரம்பம்


விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களையும் போர்க்கள உண்மைத் தகவல்களையும் தெரியப்படுத்துவதற்காகப் புலிகளின் குரல் வானொலி சிங்கள மொழிச் சேவையை 1999ஆம் ஆண்டு ஆரம்பிக்கிறது. இது தினமும் இரவு புலிகளின் குரல் தமிழ் ஒளிபரப்பு முடிவடைந்த பின்னர் அரை மணிநேரம் வரையில் அதே அலைவரிசையில் ஒலிபரப்பாகியிருந்தது. 'கொட்டி ஹண்ட சிங்கள விக்காசிய' எனும் பெயரில் இந்த ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்பத்தின் போது இதன் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் இருந்தவர் பிரபலமான நாடக நடிகர் வி.ரி. விஷ்வா அவர்கள். அவர் சிங்களத்தை நன்கு பேசத்தெரிந்தவர் என்ற அடிப்படையில் அவரை வைத்து அந்தச் சேவையை ஆரம்பித்தார்கள். இதன் பின்னர் இலக்கண சுத்தியோடு சிங்களச் சேவையை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காகச் சிங்க ளத்தில் பாண்டித்தியம் பெற்ற வன்னியில் வாழ்ந்த இரண்டு பேரை புலிகளின் குரல் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் நியமிக்கிறார். அந்த இருவரும் இலங்கையின் மலையகத்தைப்பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள். சிங்களத்தில் நன்கு பாண்டித்தியம் பெற்றவர்கள்.

#### வன்னியில் மலையகக் குடியேற்றம்

1983ஆம் ஆண்டு இனக்கலவரம் நடைபெற்ற போது இலங்கையின் தென்பகுதியில் இருந்து தமிழர்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டார்கள். அந்தக்காலகட்டத்தில் மலையப்பகுதிகளிலிருந்தும் தமிழர்கள் வன்னிக்கு வந்து குடியேறினார்கள். அவர்களில் சிங்கள மொழி கற்றவர்களும், சிங்கள மொழியை நன்கு பேசத்தெரிந்தவர்களும் இருந்தார்கள். அவ்வாறாகச் சிங்களமொழியை நன்கு கற்றுத்தேர்ந்து பேசத்தெரிந்த இருவர் புலிகளின் குரலில் பணிக்கமர்த்தப்பட்டார்கள். அவர்களுக்குச் சிங்கள புனைபெயர் வழங்கப்பட்டது ஒருவர் பிரியந்த(அசோக்குமார்) மற்றவர் சரத் (ராஜ்குமார்) இந்த இருவரின் முயற்சியால் புலிகளின் குரல் வானொலி சிங்களச் சேவை சிறப்பாக ஒலிபரப்பானது.

#### சிங்களச் சேவையின் நோக்கம்

இந்தச் சிங்களச் சேவையின் முக்கியமான நோக்கம் இராணுவத்தினருக்கு உண்மையான கள நிலைமைகளைத் தெரிவிப்பதாகவே இருந்தது எனலாம். களமுனையில் இருக்கின்ற இராணுவத்தினருக்கு உண்மையான களநிலவரங்கள் உடனுக்குடன் தெரிய வாய்ப்பில்லாத சூழலில் புலிகளின்குரலின் சிங்கள ஒலிபரப்பு அவர்களுக்கான தகவல் தெரிவிக்கும் முக்கிய மூலமாக இருந்திருக்கிறது. இந்தச் சிங்கள சேவை நிகழ்ச்சிகளில் செய்தியறிக்கை முக்கியமானது. புலிகளின் குரல் தமிழ்ச் சேவையின் செய்தியறிக்கை சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டது. அதனோடு தினப்பத்திரிகைச் செய்திகள் வாசிக்கப்பட்டன. இதனைவிட பத்திரிகைகளில் வருகின்ற பத்தி எழுத்துக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்புரைகளும் வழங்கப்பட்டன. இதனோடு தமிழ்ப்பத்திரிகைகளின் ஆசிரியர் தலையங்கங்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சியும் சிங்கள ஒலிபரப்பில் ஒலிபரப்பானது.



#### சிங்களத்தில் மாவீரர் தின உரை

வருடாந்தம் நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று நடைபெறும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை புலிகளின் குரல் சிங்கள சேவையில் ஒலிபரப்பப்படுவது வழமை. தமிழில் உள்ள அவரது உரையை விடுதலைப்புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனின் மனைவி சிங்களத்தில் மொழிபெயர்த்து கொடுப்பார். அது பின்னர் சிங்களச் சேவையில் ஒலிபரப்பாகும்.

புலிகளின் குரல் வானொலியில் சிங்களப்பாடல்களும் ஒலிபரப்பாகியிருக்கின்றன. இதைப் போர்முனையில் இருந்த இராணுவத்தினர் கேட்டு மகிழ்ந்தனர் எனவும் அறியமுடிகிறது.

புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2002ஆம் ஆண்டில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர்; கொழும்பு சென்று சிங்கள மெல்லிசைப்பாடல்களை வாங்கிவந்து இந்தச் சிங்கள ஒலிபரப்பில் ஒலிபரப்பியதாகவும் அறியமுடிகிறது. புலிகளின்குரல் சிங்களச் சேவையில் சரத் மற்றும் பிரியங்க இருவரோடும் பின்னர் நிஷஞ்சலா என்ற பெண் ஒருவரும் இணைந்து அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித்தயாரிப்பாள ராகவும் பணியாற்றினார். புலிகளின் குரல் வானொலி கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளாக சிங்களமொழி ஒலிபரப்பை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றது.

(தொடரும்) ■

# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி

## புதுமுகங்கள்

திகாமடுள்ள தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பல புதுமுகங்கள் களமிறங்கும் முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தத் தேர்தல் மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்தே பல புதுமுகங்கள் வேட்பாளர்களாகக் குதிக்கவுள்ளனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆட்சியிலுள்ள நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பொதுத்தேர்தலில் போட்டியிடப் போகிறார் என தமது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளதுடன் இதனை வெளிப்படுத்தும் ஆலோசனைக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றார். அதேபோல் தொலைக்காட்சி ஊடகவியலாளராகவிருந்த இளைஞர் ஒருவரும் தேர்தல் களத்தில் குதிப்பதற்கான முன்தயாரப்படுத்தல்களைச் செய்து வருகின்றார்.

இந்த மாவட்டத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அரசியல் புரட்சிகர முன்னணி எனும் கட்சியின் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான முன்னாள் பிரபல கணித ஆசிரியர் ஒருவரும் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளார். செயலில் முன்மாதிரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களை விழிப்பூட்டப் போவதாக அவர் கூளுரைக்கின்றார்.

மாதர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை இவர் அண்மையில் நடத்தி தமது மாதிரி எம்.பி கனவை வெளிப்படுத்தியுள்ளார். இன்னும் சிலரும் புதுமுகங்களாகத் தேர்தலில் குதிக்கத் தயாராகும் தகவல்களும் கிடைக்கின்றன.

**இப்படி முஸ்லிம்களின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டமையால் இங்கு பெரும்பான்மை இனத்தவர் நால்வர் எம்.பியான பழைய சம்பவம் இன்னும் மறக்கவில்லை.**





## சேனைப்பயிர் செய்கை

அம்பாறை மாவட்டத்தின் மேட்டு நிலப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சேனைப் பயிர்ச் செய்கைகளின் அறுவடை தற்சமயம் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக சோளம், நிலக்கடலை போன்ற மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளின் அறுவடை அடை மழையை அடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கிராமங்கள் தோறும் அதிக வியாபாரிகள் சோளம், நிலக்கடலை விற்பனையிலும் ஈடுபட்டு நாளாந்த வருமானமும் பெற்று வருகின்றனர். இந்த மாவட்டத்தில் இம்முறை ஐயாயிரம் ஏக்கரில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**படைப்புழுத் தாக்கம் கட்டுப்பாட்டில்**

## நிவாரணம்! நிவாரணம்!!

வடக்கு கிழக்கு உட்பட்ட நாட்டின் பல மாவட்டங்களில் பெய்துவரும் அடைமழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்கள், குறிப்பாக ஓய்வூதியர்களுக்கு வெள்ள நிவாரணங்களுடன் ஐந்து வருட கால எல்லை கொண்ட வட்டியில்லாக் கடன் வழங்கவும் அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் எஸ். லோகநாதன் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் மேற்படி கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார். வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறியுள்ள இக்காலகட்டத்தில் இனிப்பான செய்தி இது. காரியம் தான் நடக்குமா?



## திடீர் உயர்வு!

இலங்கையின் நெல் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் அம்பாறை மாவட்டத்தில் தற்சமயம் நெல்விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது. தற்போதைய காலநிலை சீரின்மைக்கு மத்தியில் இத்திடீர் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதுடன் அரிசிக்குத் தட்டுப்பாடும் நிலவிவருகின்றது.

அண்மையில் பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்ற காலகட்டத்தில் 66 கிலோ கொண்ட ஒரு மூடை நெல் 2ஆயிரத்து 500 ரூபா முதல் மூவாயிரம் ரூபாவுக்கு உட்பட்ட விலையில் விற்பனையாகிய போதிலும் தற்சமயம் ஒரு மூடை நெல் 4ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் விற்பனையாகின்றது.

**ஏழை! எளிய மக்களுக்குத்தான் திண்டாட்டம்.**



## கடலரிப்பு உக்கிரம்

ஒலுவில் மீன்பிடித்துறைமுக நிர்மாணத்தை அடுத்து அயல் பிரதேசங்களில் ஏற்பட்டுவரும் கடலரிப்பு தற்சமயம் உக்கிரமடைந்துள்ளது.

குறிப்பாக இக்கடலரிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிந்தவூர் பிரதேசம் தற்போதைய தொடர் மழை கொண்ட கால நிலை சீரின்மைக்கு மத்தியில் கடல் பெருக்குடன் கூடிய உக்கிர கடலரிப்புக்குள்ளாகியுள்ளதால் நிந்தவூரின் கடற்கரையை அண்டிய தென்னந்தோட்டங்கள் கடலால் காவு கொள்ளப்படும் அபாயமேற்பட்டுள்ளதுடன் மீன்பிடியாளர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

**காத்திரமான தடுப்பு நடவடிக்கைகள் அவசியமெனினும் அரசியல்வாதிகள் கவனம் கொள்வார்களா? - மக்கள் கேட்கின்றனர்.**



# இந்த வாரம்

**15.12.2019 முதல் 21.12.2019 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

புதன், குரு, சுக்கிரன், ராகு தாராள நன்மைகளை வழங்குவர். பழகுபவர்களின் மனம் அறிந்து பேசுவீர்கள். நீதி, நேர்மை தவறாமல் செயல்படுவீர்கள். பணிகள் சிறப்பாக நிறைவேறும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரரின் எதிர் கால நலனில் அக்கறை கொள்வீர்கள். பூர்வ சொத்தில் அளவான பண வரவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் அன்பு, பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். பணியாளர்கள் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பணம் சேமிப்பதில் ஆர்வம் கொள்வர்.

## இடபம்

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் அனுகூல பலன் தருவர். மனதில் தைரியம் வளரும். தம்பி, தங்கை அதிக அன்பு பாராட்டுவர். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர் தமது கடமையை உணர்ந்து செயல்படுவர். உறவினர் வீட்டு விருந்து, விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்வீர்கள். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். பண கடன் தொந்தரவு குறையும். குடும்ப தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டியை சம யோசிதமாக சரி செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

## மிதுனம்

சனீஸ்வரர், கேது, சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். அக்கம் பக்கத்தவருடன் நிதானித்து பழகவும். பணிகளில்உத்வேகமுடன்செயல்படுவீர்கள். வீட்டில் ஒற்றுமை நிலைத்திருக்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்க பெற்றோரிடம் பிடிவாதம் செய்வர். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் சீராகும். மனைவியின்செயல்கள்மேம்படஉதவுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் வேண்டும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர்.

## கடகம்

சனீஸ்வரர், கேது, சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். அக்கம் பக்கத்தவருடன் நிதானித்து பழகவும். பணிகளில் உத்வேகமுடன்செயல்படுவீர்கள்.வீட்டில்ஒற்றுமை நிலைத்திருக்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்விரும்பியபொருள்வாங்கபெற்றோரிடம் பிடிவாதம் செய்வர். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் சீராகும். மனைவியின் செயல்கள் மேம்பட உதவுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் வேண்டும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் பயிற்சி பெற வேண்டும்.

## சிங்கம்

பெரும்பான்மை கிரகங்களால் ராஜ யோக பலன் கிடைக்கும். மனதில் உத்வேகம் பிறக்கும். செயல்களில் இருந்த தாமதம் விலகும். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பண வரவும் கூடும். புத்திரரின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நிலுவை பணம் எளிய முயற்சியால் வரவாகும். எதிரியால் உருவான தொந்தரவு விலகும். மனைவியின் அறிவார்ந்த செயல் குடும்ப நலன் சிறக்க உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் கடமை உணர்வுடன் பணி புரிவர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருட்கள் வாங்குவர்.

## கன்னி

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். நேர்மை வழியில் செயல்படுவீர்கள். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டுவர். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிறைந்திருக்கும். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் ஆடம்பர செயல்களில் ஆர்வம் கொள்வர். சொத்தின் பேரில் நிபந்தனையுடன் பணம் கடன் பெற கூடாது. உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் மனதில் உங்கள் மீதான நம்பிக்கை வளரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். நிலுவை பணம் வரவாகும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

## துலாம்

சுக்கிரன், சனீஸ்வரர், கேது, சந்திரன் அதிர்ஷ்டகரமான பலன் வழங்குவர். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். பணிகளில் முன்னேற்றம் உருவாகும். உடன் பிறந்தவர் உதவுவர். வெளியூர் பயணம் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும். புத்திரர் பெற்றோரிடம் அதிக அன்பு, பாசம் கொள்வர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் செயல் சிறப்பாக அமைந்து குடும்பத்தின் எதிர்காலத்திற்கு பயன் தரும். தொழில், வியாபாரம் செழித்து வளரும். நிலுவை பணம் வசூலாகும். பணியாளர்கள் மன நிறைவுடன் பணி புரிவர். சலுகை கிடைக்கும்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நற்பலன் வந்து சேரும். மனதில் இருந்த தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். சமூக நடப்பில் புதிய அனுபவம் கிடைக்கும். பேச்சு, செயலில் முரண்பாடு தவிர்ப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை இருக்கும். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்கள் அறிவு, செயல் திறனில் மேம்படுவர். உடல் ஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை பயன் தரும். பண கடன் தொந்தரவு தரலாம். மனைவியின் செயலை குறை சொல்ல வேண்டாம். பெண்கள் நகை இரவல் கொடுக்க கூடாது. மாணவர்கள் அக்கறையுடன் படிக்க வேண்டும்.

## தனுசு

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். முன்னேற்ற பாதையில் நடை போடுவீர்கள். உங்களை இகழ்ந்து பேசியவரும் அன்பு பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் விரும்பியபடி வாங்கலாம். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை சேர்ப்பர். குடும்பத்திற்கான பண செலவுகளில் தாராளம் இருக்கும். நோய் தொந்தரவு குறையும். மனைவி வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழிலில் புதிய உத்தியால் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோக பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்

## மகரம்

சூரியன், சுக்கிரன், புதன், ராகு அளப்பரிய நற்பலன் தருவர். உறவினர்களின் உதவி ஊக்கம் தரும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாகும். புத்திரர் சில விஷயங்களில் பிடிவாதம் கொள்வர். பூர்வ சொத்தில் பண வரவுகளை கவனமாக பெற வேண்டும். நோய் தொந்தரவு பெருமளவில் குறையும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் பெருந்தன்மை குணம் மகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் பண வரவு சீராகும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்று கொள்வர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் சிறப்பாக படித்து அதிக தேர்ச்சி பெறுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். உங்கள் தகுதி, திறமையில் முன்னேற்றம் ஏற்படும். பலரும் வியந்திடும் வகையில் செயல்படுவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு மங்கல நிகழ்ச்சி நடத்தலாம். தாய் வழி உறவினர் எதிர் பார்ப்புடன் பழகுவர். வாகனத்தில் உரிய பராமரிப்பு மேற்கொள்வதால் பயணம் எளிதாகும். புத்திரரின் முன்னேற்றத்திற்கு தேவையானதை செய்வீர்கள். விவகாரம் தீர்வு பெற சமரச பேச்சு வார்த்தை நல்ல பலன் தரும். மனைவியின் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரம் செழித்து பணம் சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

## மீனம்

சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் வழங்குவார். புதிய வாய்ப்புகளை பயன்படுத்துவதால் மட்டுமே பண வரவு சீராகும். உடன் பிறந்தவர் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகன பயன்பாடு அளவுடன் இருக்கும். புத்திரர் கவன குறைவான செயலால் சிரமம் எதிர் கொள்ள நேரிடலாம். நிபந்தனையுடன் பண கடன் பெற வேண்டாம். உடல் ஆரோக்கியத்திற்கு சீரான ஓய்வும், மருத்துவ சிகிச்சையும் அவசியம். மனைவியிடம் கருத்து பேதம் வராத அளவில் கனிவுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட, திட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

# உழைத்து வாழவேண்டும்



சந்திரவனக் காட்டுப் பகுதி மழையின்றி வறண்டு போனது. காடு வளம் பெறும் என்று காத்திருந்த முயலுக்கும் பச்சோந்திக்கும் நம்பிக்கை போய்விட்டது.

இரண்டும் உணவின்றித் தவித்தன. இனியும் இங்கே வாழ்க்கை நடத்த முடியாது என்று புரிந்து கொண்டன.

எனவே வேறு செழிப்பான பகுதிக்குப் போய் வசிக்கலாம் என்று தீர்மானித்து. இரண்டும் புறப்பட்டன. வெகுதூரம் பயணித்த பிறகு வழியில் ஒரு குரங்கைச் சந்தித்தன.

முயலும் பச்சோந்தியும் குரங்கிடம் "அண்ணா! நாங்கள் வசித்த பகுதி வறண்டு போய்விட்டது. செழிப்பான பகுதி ஏதேனும் அருகில் இருக்கிறதா?" என்று கேட்டன.

"சற்றுத் தொலைவில் செழிப்பான காடு இருக்கிறது. நான் அங்கேதான் வசிக்கிறேன். எங்கள் சிங்கராஜா நன்றாக ஆட்சி நடத்துகிறார். அங்கே போய் நீங்கள் வசிக்கலாம்" என்றது குரங்கு.

முயலும் பச்சோந்தியும் குரங்கு சொன்ன காட்டுக்கு வந்து சேர்ந்தன. காடு செழிப்பாகவே இருந்தது. அப்போது சூரியன் மறைந்து இருட்டிவிட்டதால் அவை இரண்டும் ஒரு மரப்பொந்தில் தங்கின.

"நாம் இன்றிரவு இங்கே தங்கிக்கொள்ளலாம். நாளை முதல் இந்தக் காட்டிலேயே ஒரு வேலை தேடிக்கொண்டு நிரந்தரமாக வாழலாம்" என்றது முயல்.

மறுநாள் முயலும் பச்சோந்தியும் ஆளுக்கொரு திசையில் வேலை தேடிச் சென்றன. மாலையானதும் இரண்டும் மரப்பொந்துக்கு வந்தன. "பச்சோந்தி, எனக்கு வேலை கிடைத்துவிட்டது. மண்ணைத் தோண்டி கிழங்கு, கடலை எடுக்கும் வேலை" என்றது முயல்.

"அப்படியா! எனக்கு அரசவையில் அதிகாரியாக வேலை கிடைத்திருக்கிறது" என்று பொய் சொன்னது பச்சோந்தி.

மறுநாளிலிருந்து முயல் வேலைக்குச் சென்றுவந்தது. பச்சோந்தி எங்கோ கிளம்பிச் சென்றது. அது எங்கே செல்கிறது என்று யாருக்கும் தெரியாது. இப்படியாக ஒரு மாதம் கழிந்தது.

ஒருநாள் கடலைக் காட்டில் முயல் வேலை செய்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த குரங்கு, "அன்று உன்னுடன் வந்த பச்சோந்தியை மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிங்க ராஜா தண்டனை கொடுக்கக் காத்திருக்கிறார்" என்று சொன்னது.

அதைக் கேட்டு முயலுக்கு அதிர்ச்சியாக இருந்தது. "என்ன, கட்டி வைத்திருக்கிறார்களா? அவன் என்ன தவறு செய்தான்?" என்று சொல்லிக் கொண்டே, பச்சோந்தியைக் கட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஓடியது முயல்.

பச்சோந்தி தலை குனிந்தபடி நின்றிருந்தது. முயல் நேராக சிங்க ராஜாவிடம் போய், "அரசே! இவன் என் நண்பன். இவன் என்ன தவறு செய்தான்?" என்று பணிவாகக் கேட்டது.

"ஓ… இவன் உன் நண்பன்தானா? இவன் கடந்த ஒரு மாதமாக நம் காட்டில் பலரும் உழைத்துச் சேகரித்து வைத்திருக்கும் உணவுகளைத் திருடித் தின்று வந்திருக்கிறான். யாராலும் இவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் இவன் இடத்துக்குத் தகுந்தாற்போல தன் நிறத்தை மாற்றிவிடுகிறான். இன்று காய்ந்த இலைச் சருகுகளோடு சருகாக மறைந்து உணவைத் திருடித் தின்றுகொண்டிருந்தான். ஆனால் திடீரென்று அடித்த காற்றில் சருகுகள் பறந்து போய்விட்டன. இவன் மாட்டிக்கொண்டான். இவனுக்குக் கசையடி கொடுக்கப் போகிறேன்" என்றது சிங்கம்.

முயல் பச்சோந்தியைத் திரும்பிப் பார்த்தது.


"நண்பா, என்னை மன்னித்துவிடு. நான் ஒரு மாதமாக வேலைக்குப் போகவில்லை. என் உடலின் நிறத்தை மாற்றும் திறமையை வைத்து நான் உணவைத் திருடித் தின்றேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதது பச்சோந்தி.

பச்சோந்தியின் மீது இரக்கம் கொண்ட முயல் சிங்கத்திடம், "அரசே! இவனை மன்னித்து விடுங்கள். இனி இவன் திருட மாட்டான். ஏதேனும் இவனுக்கு வேலை கொடுங்கள்" என்று கேட்டது.

"நீ இங்கு வந்த ஒரு மாதத்திலேயே நல்ல உழைப்பாளி என்று தெரிந்துகொண்டேன். உனக்காகப் பச்சோந்தியை மன்னிக்கிறேன். இவன் நம் உளவுத்துறையில் பணிபுரியட்டும். எதிரிகளின் கண்ணில் படாமல் மறைந்திருந்து உளவு பார்த்துவரட்டும். ஒருவன் தனக்கு இருக்கும் திறமையை நல்வழியில் பயன்படுத்தினால் எப்போதும் பேரும் புகழும் கிடைக்கும். தீய வழியில் பயன்படுத்தினால் தீமைதான் நடக்கும்" என்றது சிங்கம்.

பச்சோந்தியும் திருடுவதைவிட்டுவிட்டு, உழைத்து வாழ ஆரம்பித்தது.

## படத்தில் வட்டம், சதுரம், முக்கோணங்கள் எத்தனை உள்ளன என்பதை கண்டுபிடியுங்கள்!



# ஒட்டகம்



பாலைவனத்தில் வசிப்பதற்கு ஏற்றவாறு ஒட்டகத்துக்கு தகவமைப்பை வழங்கியிருக்கிறது இயற்கை. திமில், நீண்ட உறுதியான கால்கள், நீளமான முடி, சிறப்பு இமைகள் போன்றவை ஒட்டகம் பாலைவனத்தில் வாழ்வதற்கு உதவி செய்கின்றன.

உணவைக் கொழுப்பாக மாற்றி திமிலில் சேமித்து வைப்பதால், உணவு கிடைக்காத காலத்தில் திமிலில் இருந்து ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறது. இரவு நேரத்தில் பாலைவனக் குளிரைச் சமாளிக்க முடி உதவுகிறது. நீண்ட மெல்லிய கால்கள் பாலைவன மணலில் எளிதாகச் செல்வதற்கு ஏற்றாற்போல் அமைந்திருக்கின்றன.

பாலைவனப் புயலில் தூசிகள் நுழையாதபடி மூக்கில் இருக்கும் முடிகள் பாதுகாக்கின்றன. கண்களுக்குள் தூசியும் மணலும் செல்லாபடி மூன்று இமைகள் காக்கின்றன. மிக மெல்லிய இமைகள் வழியே ஒட்டகத்தால் பார்க்கவும் முடியும். எவ்வளவு மோசமான மணல் புயலாக இருந்தாலும் இமைகள் மணலைத் தடுத்துவிடுகின்றன.

ஒவ்வொரு காலிலும் இருக்கும் இரண்டு விரல்களில் உள்ள நகங்கள் பாதங்களைப் பாதுகாக்கின்றன. இத்தனை சிறப்புகள் இருப்பதால்தான் ஒட்டகத்தை, 'பாலைவனக் கப்பல்' என்று அழைக்கிறார்கள்.



## வெண்ணிலா...

பாலைப் போல வெண்ணிலா
பார்க்க நல்ல வெண்ணிலா
கோல் வானில் நின்றொளியைக்
கொட்டு கின்ற வெண்ணிலா


வெள்ளிக் கூட்டம் சுற்றி நிற்க
விளங்கு கின்ற வெண்ணிலா
அள்ளி அள்ளிச் சோற்றையூட்டி
அம்மா காட்டும் வெண்ணிலா

கரிய முகிலுள் ஒளித்துக்
கள்ளம் பழகும் வெண்ணிலா
தெரியவில்லை என்று தம்பி
தேடிச் சிணுங்கும் வெண்ணிலா

கலா தம்பி காந்தியோடு
கையைக் கோர்த்துக் கொண்டு
நிலா நிலா என்று கூவி
நின்று துள்ளும் வெண்ணிலா



யோ.தமிழ்,
தரம் - 7,
யா/நல்லூர் ஸ்தான கிராமம் சி.சி.த.க.பாடசாலை.



ச.தேனுசன்
தரம் - 8,
யா/நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்

# அருகம்புல்லின் மருத்துவ குணங்கள்



புல்வகையைச் சேர்ந்த சிறிய மூலிகையான அருகம்புல் சர்வரோக நிவாரணி யாக உள்ளது.

நீர்க்கசிவு உள்ள இடங்கள், வயல் வரப்புகள் போன்ற இடங்களில் தானாக வளரும். அருகு, பதம், தூர்வை, மோகாரி ஆகிய தமிழ் பெயர்களும் அருகம்புல்லுக்கு உண்டு. பசுமையான, அகலத்தில் குறுகிய, நீண்ட கூர்மையான இலைகள் கொண்டவை. தண்டு குட்டையானது. நேரானது, முழுத்தாவரமும் இனிப்பு சுவையுடையது. இந்த தாவரம் ஏராளமான நோய்களை போக்கும் அருமருந்தாக உள்ளது.

அருகம்புல் வேர், இலை உள்பட அனைத்து பாகமும் மருத்துவ குணம் உடையவை. இதில் இருந்து பெறப்படும் ஒருவித ஆல்கலாய்ட்ஸ், வாக்ஸீனியா வைரஸ் என்ற நுண்ணுயிரியை அழிக்க வல்லது.

சிறுநீர்ப்பை கல், நீர்க்கோவை என்ற உடல் வீக்கம், மூக்கில் குருதிக் கசிவு, குழந்தைகளுக்கான நாள்பட்ட சளித்தொல்லை, ஜலதோஷம், வயிற்று போக்கு, கண்பார்வை கோளாறுகள் மூளையில் ஏற்படும் குருதி கசிவு போன்ற நோய்களுக்கு இதுச் சால சிறந்தது.

உடல் எடை குறைய, கொலஸ்டிரால் குறைய, நரம்பு தளர்ச்சி நீங்க, குருதி புற்றுநோய் குணமடைய, இருமல், வயிற்று வலி, குருதிச் சோகை, மூட்டுவலி, இருதய கோளாறு, தோல் வியாதிகள் போன்ற எல்லா நோய்களுக்கும் சிறந்த மருந்து.

குருதியில் ஹீமோகுளோபின் அதிகரிக்கவும், குருதியில் உள்ள விஷத்தன்மை வெளியேற்றுவதிலும் திறமையானது. சுத்தம் செய்த அருகம் புல்லை இடித்து பிழிந்து சாற்றை ஒரு குவளை தினமும் காலையில் குடித்து வர சிறுநீர் நன்றாக கழியும். உடல் வீக்கம் குறையும். வயிற்றில் தங்கியுள்ள நஞ்சுகள் நீங்குகிறது. குருதி சுத்தமடைகிறது.

அருகம் புல் சாறு, தேங்காய் எண்ணெய் இவைகளை சம அளவு சேர்த்து தைலமாக காய்ச்சி ஆறாத ரணங்கள், வறட்டுத்தோல் போன்ற தோல் நோய்களுக்கு தொட்டு போட அவை விரைவில் குணமாகும்.

அருகம்புல் சாறு 20 மில்லி லீற்றர், தண்ணீர் 20 மில்லி லீற்றர், அரை தேக்கரண்டி சீனி சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் தொடர்ந்து ஒரு மாதம் சாப்பிட்டால் வயிற்றுப்புண் குணமாகும்.

இதன் சாறை கண்ணில் ஊற்றினால் கண்நோய் மற்றும் கண் புகைச்சல் மாறும்.

இரவில் ஒரு துளசி இலையுடன் அருகம்புல்லையும் கொதிநீரில் போட்டுவிட வேண்டும். பின்னர் மூடி வைத்து அந்த நீரை குழந்தைகளுக்கு தொடர்ந்து கொடுத்து வர சளித்தொல்லை மெதுவாக குறையும். மேலும் சீதள தொல்லையும் நீங்கும்.

### காலை உணவாக

அருகம்புல் சாற்றை காலையில் 9 மணிக்கு பசி ஆரம்பித்த உடன் வெறும் வயிற்றில் அருந்த வேண்டும். பசிப்பதற்கு முந்தியே சாப்பிடுவது தவறு. அருகம்புல் அருந்திய 2 மணி நேரத்திற்கு பின் ஒரு பழம் சாப்பிட்டால் போதும். உடலுக்குத் தேவையான அனைத்து சத்தும் அதில் கிடைத்துவிடும். அடுத்து மதிய சாப்பாடு தான்.

### புல்லின் தனிமங்கள்


அருகம்புல் ஈரப்பதம் நிறைந்த சாதாரண மண்ணில் தானாக வளருகிறது. இதற்கென எந்த தனி வளர்ப்பு முறைகளும் இல்லை. அருகம்புல்லை பறித்த உடனேயே பயன்படுத்துவதால் அதன் முழு மருத்துவ குணத்தையும் பெறமுடியும். காய்ந்த புல்லில் சத்துகள் குறைந்துவிடுகிறது. இதில் 'பொட்டாசியம், கல்சியம், சோடியம் போன்ற தனிமங்களின் ஒக்சைடுகள் மற்றும் சத்துகள் அடங்கியுள்ளன.

# தொப்பையை குறைக்க உதவும் சலபாசனம்

சலபாசனம் வயிற்றுக்கும் வயிற்றுக்கு உள்ளிருக்கும் குடல், இரைப்பை, பித்தப்பை முதலிய முக்கிய அங்கங்களுக்கும் உயிர் வீர்யத்தை தரும் அதியற்புதமானது. மானிட விரோதியாகிய மலச்சிக்கலை அடியோடு அகற்றும்.

வயிறு பெரிதாக இருக்கும் பெண்கள், ஆண்கள் இந்த ஆசனப் பயிற்சியை மேற்கொண்டால் அவர்கள் வயிறு சாதாரண நிலைக்கு வர ஆரம்பிக்கும்.

### செய்முறை




குப்புறப் படுத்து முகத்தை விரிப்பில் தாழ்த்தி வைத்துக் கொள்ளவும். இரு கைகளையும் குப்புற மூடிய நிலையில் அடி வயிற்றின் கீழ் வைத்துக் கொள்ளவும், மூச்சை உள்ளே இழுத்து அடக்கி வயிற்றை இறுக்கிக் கொள்ளவும். கைகளைத் தரையில் அழுத்தியவாறு கால்களை விறைப்பாக வைத்துக் கொண்டு படத்தில் காட்டியவாறு மேலே தூக்கவும். ஒரு முறைக்கு ஐந்து முதல் பத்து வினாடியாக மூன்று முறை செய்யவும் மிக மெதுவாக உயரே தூக்கி இறக்க வேண்டும். ஆரம்பத்தில் ஒவ்வொரு காலாக தூக்கி பழகலாம்.

### பயன்கள்

வயிற்றுப் பகுதி பலப்படும். பெருங்குடல், சிறு குடல் இழுக்கப்பட்டு நன்கு வேலை செய்யும். மலச்சிக்கல் தீரும், கல்லீரல், மண்ணீரல், கணையம் நன்கு வேலை செய்யும். ஜீரணம், வயிற்று வலி நீங்கும். முதுகு இடுப்பு வலி நீங்கும். அடிவயிறு இழுக்கப்பட்டு தொந்தி கரையும். முதுகெலும்பு நோய் குணமாக முக்கிய ஆசனம்.

# உருளைக்கிழங்கு வடை



### தேவையான பொருள்கள்

உருளைக்கிழங்கு -3 (வேக வைத்து தோலுரித்தது)
கடலை மாவு - 1/2 கோப்பை
அரிசி மாவு- 1 கோப்பை
பச்சை மிளகாய் - 5 (சிறு துண்டுகளாக நறுக்கியது)
இஞ்சி - 1 துண்டு (சிறு துண்டுகளாக நறுக்கியது)
பெருங்காயத் தூள் - 1 சிறங்கை
கொத்தமல்லி - சிறிது
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் பொரிப்பதற்கு - தேவையான அளவு

### செய்முறை

முதலில் வேக வைத்த உருளைக்கிழங்கை நன்கு கட்டியில்லாதவாறு மசித்துக் கொள்ள வேண்டும். பின் அதில் கடலை மாவு, அரிசி மாவு, உப்பு சேர்த்து பிசைந்து கொள்ள வேண்டும். பின்பு ஒரு சட்டியை அடுப்பில் வைத்து, அதில் 2 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பச்சை மிளகாய், இஞ்சி, பெருங்காயத் தூள் சேர்த்து வதக்கி இறக்கி, உருளைக்கிழங்குடன் சேர்த்து, கொத்தமல்லியை போட்டு, நன்கு பிசைய வேண்டும். பிறகு ஒரு அகன்ற சட்டியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பிசைந்து வைத்துள்ள மாவை வடைகளாகத் தட்டிப் போட்டு, பொன்னிறமாக பொரித்து எடுத்தால், மொறுமொறுப்பான உருளைக்கிழங்கு வடை தயார்.

# கீரையின் சத்துக்கள் உடலுக்கு முழுமையாக கிடைக்க செய்யவேண்டியவை

கீரைகள் சுண்ணாம்புச் சத்து, பீட்டா கரோடின், விற்றமின் சி போன்றவற்றை அதிகம் கொண்ட முக்கிய மூலப்பொருளாகும். கீரைகளை தினமும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் குருதிச்சோகை வருவதை தடுத்து, நல்ல உடல்நலனைப் பெறலாம்.

கீரைகளில் உள்ள கரோடின் என்னும் பொருளானது உடலில் விற்றமின் ஏ ஆக மாறுவதால் பார்வை இழக்கும் நிலை தடுக்கப்படுகிறது.

கீரைகளிலுள்ள கரோட்டின் சத்துப்பொருள் அப்படியே நம் உடலுக்கு கிடைக்க கீரைகளை நீண்ட நேரம் வேக வைப்பதை தவிர்க்க வேண்டும். அதிக நேரம் சமைப்பதினால் கேரட்டின் சிதைந்து விடுகிறது.

கீரைகள் 'பி காம்ப்ளக்ஸ்' விற்றமின்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் தினமும் சாப்பிட வேண்டிய கீரையின் அளவு பெண்களுக்கு 100 கிராம், ஆண்களுக்கு 40 கிராம்.

கீரைகளை நன்கு சமைத்து, மசித்து கீரையிலுள்ள நார் பொருள்களை நீக்கிய பின்னரே சிறு குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

கீரையில் உள்ள சத்துக்கள் முழுமையாக கிடைக்க முதலில் கீரைகளை நீண்ட நேரம் சமைப்பதை தவிர்க்க வேண்டும்.



# திருவருகை

## எதிர்நோக்கிக் காத்திருக்கும் காலம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

கத்தோலிக்க மக்கள் திருவருகைக் காலத்தில் தமது ஆலயங்களில் பசுமை இலைகளினால் வட்ட வடிவமாக அலங்கரிக்கப்பட்ட ஓர் அமைப்பிலே நான்கு மெழுகுதிரிகளை வைத்து திருவருகைக் காலத்தின் ஒவ்வொரு ஞாயிறும் ஒவ்வொரு திரியாக திருப்பலி வழிபாட்டு வேளைகளில் ஏற்றி வைப்பதுண்டு. அது பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

திருவருகை என்ற சொல் கிரேக்க பரூசியா என்ற மூலச் சொல்லிலிருந்து வருகிறது. இதன் இலத்தீன் வடிவமாக அற்வென்ருஸ் என்ற சொல் இருக்கிறது. இதிலிருந்து தான் ஆங்கில அட்வென்ட் என்ற தற்போதைய சொல் உருவாகியிருக்கிறது. பரூசியா என்பது ஆரம்ப கால கிரேக்க நம்பிக்கையில் மனிதர்களின் கூட்டத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட தெய்வத்தின் வருகையைக் குறித்தது. பின்னர் கிரேக்க உரோமையர்கள் காலத்தில் இது ஆட்சியாளர்களின் வருகையைக் குறிக்க பயன்பட்டது. சீசர்கள் அரசர்கள் ஆட்சியாளர்கள் தங்கள் மக்களை சந்திக்க அவர்கள் இடங்களுக்கு எப்போதாவது வருவது வழமை அவர்களின் வருகைக்காக மக்கள் காத்திருப்பர். இந்த நிகழ்வு அக்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு சாதாரண அரசியல் நிகழ்வு.

கிறிஸ்தவம் வளர்ந்ததன் பின்னர் இயேசுவின் இரண்டாம் வருகையை நினைவூட்டும் விதமாக இந்த பரூசியா என்ற சொல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக பயன்படுத்தப்பட தொடங்கியது. இது இரண்டு விதமான வருகையை கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டுகிறது. முதலாவது வருகை மெசியாவின் பிறப்பிற்காக காத்திருந்த வருகையாகவும் இரண்டாவது வருகை இந்த மெசியா இரண்டாவது தடவையாக வருவதற்கான காத்திருத்தலாகவும் இருக்கின்றன.

கிறிஸ்தவ சமூகமும் அன்றாடக் கவலைகளில் மூழ்கியிருந்து விட்டுத் தங்கள் வாழ்க்கையின் இறுதி நோக்கத்தை மறந்துவிடலாகாது. அவர்களுக்கு வழங்கப்படும் செய்திவிழிப்பாயிருங்கள்கிறிஸ்துவை அணிந்துகொண்டு கிறிஸ்துவின் வருகைக்காகக் காத்திருப்பதே உங்கள் வாழ்க்கைக் குறிக்கோளாகும் என்பதாகும். திருவருக்கைக் காலம் இரண்டு பண்புகளைக் கொண்டது ஒன்று இயேசு இவ்வுலகில் முதல் முறையாக வந்த நிகழ்வைக் கொண்டாட மக்களைத் தயாரிக்கிறது. இரண்டாவது வரவிருக்கும் இயேசுவின் இரண்டாம் வருகையையும் ஆவலுடன் எதிர்பார்க்க மக்களைத் தூண்டுகிறது. இவ்வாறு திருவருகைக் காலம் எதிர்பார்ப்புடன் கூடிய மகிழ்ச்சியின் காலமாக விளங்குகிறது.

இது நான்கு வாரங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த நிகழ்வை சிறப்பிக்கும் விதமாக ஒவ்வொரு வாரமும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வளையத்தினுள் நான்கு நிறம் கொண்ட மெழுகுவர்த்தியை ஏற்றலாம்.

### திருவருகைக் காலத்தின் நோக்கம்

திருவருகைக் காலம் கத்தோலிக்க திருவழிபாட்டு காலத்தின் ஆரம்பம். இது இறைமகன் மனிதரிடையே முதல் முறை வந்ததை நினைவுகூறும் கிறிஸ்துப்பிறப்புப் பெருவிழாக் கொண்டாட்டங்களின் தயாரிப்புக் காலம் ஆகும். அவ்வாறே காலத்தின் நிறைவில் நிகழும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருக்க உள்ளங்கள் தூண்டப்படும் காலமும் அதுவே. இவ்விரு காரணங்களால் திருவருகைக் காலம் இறைப்பற்றும் மகிழ்ச்சியும் நிறைந்த எதிர்பார்ப்பின் காலமாக விளங்குகின்றது.



### திருவருகைக் கால ஆலய அலங்கரிப்பு மற்றும் இசை

பீடத்தை அணி செய்வது மிதமான அளவோடு இருக்க வேண்டும். திருவருகைக் காலத்தில் அக்காலத்தின் தன்மைக்கேற்ப பீடத்தை மிதமான அளவில் மலர்களால் அணிசெய்தல் வேண்டும். அது ஆண்டவருடைய பிறப்பின் நிறை மகிழ்வை முன்னறிவிப்பதாய் அமைதல் கூடாது. மலர்களால் அணி செய்வது எப்பொழுதும் அளவுக்கு மிகாமல் இருத்தல் நல்லது. மலர்கள் பீடமேசையின் மீது வைக்கப்படுவதைவிட பீடத்தைச் சுற்றி வைக்கப்பட வேண்டும்.

திருவருகைக் காலத்தில் அதன் தன்மைக்கு ஏற்றவாறு, இசைப் பெட்டியையும் பிற இசைக் கருவிகளையும் மிதமாக, ஆண்டவருடைய பிறப்பின் நிறை மகிழ்வை முன்னறிவிக்காத அளவில் மீட்டுதல் வேண்டும். திருவருகைக் காலத்தில் உன்னதங்களிலே பாடுவதோ சொல்வதோ இரண்டுமே தவிர்க்கப்படவேண்டும்.

### காத்திருக்கும் காலம்

திருவருகைக் காலம் எதிர்நோக்கிக் காத்திருக்கும் காலம் ஆகும். எபிரேய மக்கள் மெசியாவின் வருகையை எதிர்பார்த்தனர் என்றும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கள் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறின. திருவருகைக் காலத்தில் இதை நாம் நினைவுகூர்கின்றோம். மெழுகுதிரிகள் ஏற்றப்படுதல் வெளிஅடையாள நிகழ்வாக இருப்பினும், அவை மனித இதயங்களில் இறை நம்பிக்கையை ஆழப்படுத்தி, கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் உண்மைத்தன்மையை இழந்து விடாதிருக்கவும் உதவுகின்றது.

பசுமை இலைகளினால் ஆக்கப்பட்ட திருவருகைக் கால வளையம் அழகான பசுமையான இலைகளினால் அமைக்கப்பட்டு வாழ்வின் தொடர்ச்சியையும் அதன் வளமையையும் குறிக்கின்றது. குறிப்பாக இவ்வளையம் உருவாக்கப் பயன்படும் பொருள்கள் ஒவ்வொன்றும் சிறப்பான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன.

இந்த வளையம் ஒரு வெற்றிச்சின்னம். துன்பத்தின் மீதும் துன்புறுத்தலின் மீதும் வெற்றி கொள்வதைக் குறிக்கின்ற கரும்பச்சை நிற ஊசியிலைகள் மரப்பட்டை என்பன அழியாமையையும் என்றும் உதிராமல் இருக்கும் மரத்தின் இலைகளது பலத்தையும் குணமளித்தலையும் குறிப்பிடுகின்றன.

இவை முடிவில்லாக் கடவுளின் பிரசன்னத்தையும், ஆன்மாவின்அழியாமையையும்கிறிஸ்துவிடம்முடிவில்லா வாழ்வைக் கண்டுகொள்ள முடியும் என்பதனையும் வாழ்வையும், உயிர்த்தெழுதலையும் குறித்து நிற்கின்றன.

திருவருகைக் காலத்தின் நான்கு ஞாயிறு வாரத்தையும் குறிப்பிடும் நான்கு மெழுகுதிரிகளுள் ஊதா நிறத்தில் மூன்றும் இன்னொன்று மெல்லிய சிவப்பு அல்லது றோஸ் நிறமுடையதாகவும் இருக்கின்றது. இம்மெழுகுதிரிகள் செபம், தியாகம், தூய்மை, ஆயத்தம் என்பனவற்றை நம்பிக்கை, அன்பு, அமைதி, மகிழ்ச்சி என இணைத்து வெளிப்படுத்துகின்றன.

றோஸ் நிற மெழுகுதிரி திருவருகைக்கால மூன்றாவது ஞாயிறில் ஏற்றி வைக்கப்பட்டு பேருவகை அல்லது பெருமகிழ்ச்சியின் அடையாளமாக கிறிஸ்துவின் வருகை மிக அருகில் வந்துவிட்டது என்பதனை நினைவு படுத்துகிறது. நடுவில் உள்ள வெள்ளை மெழுகுதிரி கிறிஸ்துவே உலகின் ஒளி என்பதைப் பிரசன்னப்படுத்தி நிற்கின்றது.

நம்பிக்கை, அன்பு, அமைதி, மகிழ்ச்சி எனப்படும் எதிர்பார்ப்புக்களுடன் திருவருகைக்கால ஞாயிறு வாரங்கள் கத்தோலிக்க திருஅவை வழிபாட்டில் ஒருபுதிய ஆண்டாக ஆரம்பிக்கப்படுவதால் ஒவ்வொரு புதிய ஆண்டும் இறைமகன் கிறிஸ்து இயேசுவின் மறுவருகையை ஆவலோடு எதிர்பார்க்கும் ஒரு புதிய வழிபாட்டு வருடத்தை ஆரம்பித்து வைக்க உதவுகிறது. குடும்பங்களிலே பெரும்பாலும் இரவு உணவின்போது இந்த மெழுகுதிரிகள் ஏற்றப்படுகின்றன. திருவருகைக் கால முதல் ஞாயிறு குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்தபின், திருவருகைக்கால அலங்கார வளையத்தை பின்வரும் செபத்தைச் சொல்லி ஆசீர்வதிப்பார். மாட்சி நிறைந்த கடவுளே உமது வார்த்தையினால் அனைத்தையும் தூய்மைப்படுத்தியவரே உமது ஆசீரை இவ் அலங்கார வளையத்தின் மீது பொழிவீராக. இதனைப் பயன்படுத்தும் நாங்கள் கிறிஸ்துவின் வருகைக்காக எம்மைத் தகுந்த முறையில் தயார்படுத்தவும் உமது அளவில்லா ஆசீரைப் பெறவும் அருள்வீராக என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம் ஆமென். இதனைத் தொடர்ந்து குடும்பத்தின் இளைய குழந்தை ஊதா நிற மெழுகுதிரியைப் பற்ற வைப்பார். இவ்வாரம் முழுவதும் பின்வரும் இறை வேண்டுதல் செய்யப்படும். மாட்சி நிறைந்த ஆண்டவரே எம்மிடையே எழுந்து வரும்படியாக உம்மை மன்றாடுகின்றோம். உமது பாதுகாவலினாலும் விடுதலையினாலும் எமது பாவத்தின் அச்சுறுத்தல் அபாயத்திலிருந்து மீட்கப்படுவோம் என்று நம்புகின்றோம். என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்.

திருவருகைக் கால இரண்டாம் ஞாயிறு குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்த பின் மாட்சி நிறைந்த கடவுளே உமது ஒரே திருமகனின் வருகைக்காக நாங்கள் எம்மைத் தகுந்த முறையில் ஆயத்தம் செய்யும்படி எங்கள் இதயங்களில் பேரார்வத்தை ஏற்படுத்தியருளும். இதனால் அவருடைய திருவருகையின் வழியாக நாங்கள் தூய இதயத்தோடு உமக்குப் பணிபுரியும் தகுதியைப் பெறுவோம். என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம். ஆமென். என்று செபித்தபின் திருவருகைக்கால அலங்கார வளையத்தை ஆசீர்வதிப்பார். இதனைத் தொடர்ந்து குடும்பத்தின் மூத்த குழந்தை இரண்டாவது ஊதா நிற மெழுகுதிரியை, முதல்வார மெழுகுதிரியின் ஒளியிலிருந்து ஒளியைப் பெற்று பற்றவைப்பார்.

திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறு குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்த பின் மாட்சி நிறைந்த கடவுளே எமது செபத்தை உமது செவிகள் ஆர்வத்துடன் கேட்பதாக. உமது சந்திப்பின் மூலம் வரும் அருளினால் எமது சிந்தையில் கவிந்துள்ள காரிருள் அகற்றப்பட்டு நாங்கள் தெளிவடையச் செய்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம். ஆமென். என்று செபித்தபின் திருவருகைக்கால அலங்கார வளையத்தை ஆசீர்வதிப்பார். இதனைத் தொடர்ந்து குடும்பத்தின் தாய் மூன்றாவது றோஸ் நிற மெழுகுதிரியையும் முதல்வார, இரண்டாம் வார மெழுகுதிரிகளையும் பற்றவைப்பார்.

இறுதியாக திருவருகைக் கால நான்காம் ஞாயிறு குடும்பத்தின் தலைவர் உணவை ஆசீர்வதித்தபின், மாட்சி நிறைந்த கடவுளே உமது மாட்சியோடும் வல்லமையோடும் எம்மிடையே எழுந்தருளுமாறு உம்மை மன்றாடுகின்றோம். ஏனெனில் உமது வல்லமையே எமக்கு உதவியளிக்கும். உமது அருளிரக்கத்தினதும், மன்னிப்பினதும் உதவியினால், எமது பாவத்தின் விளைவுகள் அனைத்தும்துடைத்தழிக்கப்படும். என்றென்றும்வாழ்ந்து ஆட்சி செய்கின்றவரே உம்மை மன்றாடுகின்றோம் என்று செபித்தபின் திருவருகைக்கால அலங்கார வளையத்தை ஆசீர்வதிப்பார். இதனைத் தொடர்ந்து குடும்பத்தின் தந்தை நான்காவது ஊதா நிற மெழுகுதிரியையும் ஏனைய மூன்று திரிகளையும் பற்றவைப்பார்.

இந்தநிகழ்வுகள் எமது இதயங்களில் இறைநம்பிக்கையை ஆழப்படுத்தி, குடும்பங்களில் எப்பொழுதும் விழிப்பாயிருந்து கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் உண்மைத்தன்மையை இழந்துவிடாதிருக்கவும் எமக்கு உதவுகின்றன.

எம் வாழ்வு சார்ந்த எதிர்பார்ப்பும் திருவருகைக் காலத்தில் தெரிகிறது. மனிதரிடையே போரும் சண்டை சச்சரவும் மறைந்து அமைதி நிலவும் புதியதொரு காலம் மலரும் என்பது நம் எதிர்பார்ப்பு. கிறிஸ்துவின் வருகையால் இது நிகழும் என்பது நம் நம்பிக்கை. மனித வாழ்விலிருந்து இருள் மறைந்து ஒளி தோன்றும் என்பதும் நம் எதிர்பார்ப்பு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்துவின் வருகை உலகில் நிகழ்ந்தது. ஆனால், அவர் வரலாற்றின் இறுதியில் மீண்டும் வருவார். அந்த வருகைக்கு முன்னால் கிறிஸ்து நம் வாழ்விலும் நாம் வாழ்கின்ற சமூகத்தின் வாழ்விலும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. குறிப்பாக, நாம் கிறிஸ்துவை அருளடையாளக் கொண்டாட்டத்தில் சந்திக்கிறோம். நம்மை அடுத்திருப்போர் வழியாகவும் கிறிஸ்து நம்மைச் சந்திக்க வருகிறார். இவ்வாறு திருவருகைக் காலம் நமக்கு இயேசுவின் வெவ்வேறு வருகைகளை நினைவுறுத்துகிறது. கிறிஸ்துவை நாம் சந்தித்து அச்சந்திப்பின் வழியாக நம் வாழ்க்கை வளம் பெறவும் நம் இறுதிச் சந்திப்புக்கு நாம் என்றுமே தயாராக இருக்கவும் இத்திருவருகைக் காலம் நமக்குத் தூண்டுதலாக அமைய வேண்டும்.

## மணப்பெண் தேவை

சீதாராம சர்மா என்பவர் தன்னுடைய மகனுக்கு. தன்னுடைய ஜாதியில் மணப்பெண் பார்க்கிறார். மகன் 1993 இல் பிறந்தவர். MBBS Doctor இற்கு படித்துக்கொண்டிருக்கிறார். 7 இல் செவ்வாய் உள்ளது.

**077 539 3728**

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் உதயநகர் கிழக்கில் அமைந்துள்ள ¼ ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (CS 29927)(14.17)

தொடர்பு: **077 648 2712**

## வேலையாள்கள் தேவை

01 கண்ணாடி வெட்டுபவர்கள் (Glass Cutting வேலையில் அனுபவம் உள்ளவர்கள்)

02 அலுமினியம் பொருள்கள் பற்றிய அனுபவம் உள்ள விற்பனையாளர் தேவை. (CS 29947) (14.17)

**076 665 5166**

## தச்சு வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு நிரந்தரமாக தச்சு வேலையாள்கள், பழக விரும்புபவர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்..

ஆர்க் தளபாடநிலையம்
1169. K.K.S றோட் நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்
T.P - 077 300 1763










ஆங்கில மொழியில் நிபுணத்துவம் பெற்றிட
நீங்களும் ஆங்கில மொழி வல்லுனருடன் சேர்ந்திடுங்கள்

உங்கள் வயதெல்லைக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியை தேர்ந்தெடுங்கள்

| வயது | 4 - 6 | 6 - 10 | 11 - 15 | 16 - 17 | 18க்கு மேல் |
|---|---|---|---|---|---|
| பாடநெறி | Timmy Time | Primary Plus | English for Secondary | English for Upper Secondary | Courses for adults |

பதிவுசெய்து கொள்ள எமது இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்
www.britishcouncil.lk/english/register
70, ரக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(புதன் - ஞாயிறு தினங்களில் 8.30 முதல் 5.30 வரை)

# மாபெரும் பண்டிகைக்கால சலுகை!!!


நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான **Everpure Hi-Tec (Pvt) Ltd.** இடமிருந்து **10% - 40 %** வரையிலான விலைக்கழிவும் மற்றும் பரிசுப் பொருட்களும்

☞ வீட்டிற்குரிய **RO Water System - 24,999/=** லிருந்து




☞ காரியாலயம், தொழிற்சாலைகளுக்கான

## RO Water Filters



மணிக்கு 25 - 30 Lits - **54,400/=**
மணிக்கு 50 - 60 Lits - **115,400/=**
மணிக்கு 125 - 150 Lits - **275,000/=**
மணிக்கு 250 - 300 Lits - **375,000/=**

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310 ☎ 021 222 6888

☞ **உங்கள் வீட்டில் கல்சியம், காவிபடிதல் பிரச்சனையா?!!!**




உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machine களை
கல்சியம், மக்னீசியம், மற்றும் காவிப் படிவு களிலிருந்து பாதுகாக்க
**EVRO WATER SOFTENER**ஐ பொருத்தி பயன்பெறுங்கள்

☞ **HYBRID கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம்**




அனுகூலங்கள்:
- குறைந்த செலவு
- சிறிய இட பரப்பு போதுமானது (6' X 4')
- நிலத்துக்கு அடியில் வைக்கக்கூடியது
- நிரம்பி வழியாதது
- துர்நாற்றம், கிருமிகள் அற்றது

உங்களின் வீடு மற்றும் தொழிற்சாலை (Toilet, Kitchen, Bathroom, Washing Machine) கழிவுகளை மீள்சுழற்சி முறையில் சுத்திகரித்து மீண்டும் பாவனைக்கு உகந்த நீராக மாற்றித்தரும்


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர்
## செல்வி தனநாயகி (புஸ்பா) சபாரத்தினம்

**திதி - ஸ்கந்த பஞ்சமி**



ஆண்டவன் படைப்பில் 28.09.1958 | அநியாய அழிப்பில் 01.11.2019

அம்மா இல்லாத குறையை உன் தங்கைகள்
இருவருக்கும் நிவர்த்தி செய்து
பெற்றதாயைப்போல் எம்மிருவரையும் உன்
கண்ணுக்குள் வைத்து கா[illegible] வந்தீர்.
உன் செல்ல மகள் மதுக்குட்டிக்கு
கேட்ட தெல்லாம் செய்து கொடுத்து
கண்ணை இமை காப்பதுபோல்
எந்நேரமும் காத்து வந்தீர்
கந்தனுக்கு பால் பழத்துடன் விரதமிருந்து
சித்தி விநாயகனுக்கு தேங்காய் எண்ணெய் வாங்க
கடைக்கு நீர் செல்லும்போது எண்ணியிருப்பீரா
திரும்பி நான் உயிருடன் வீடு வரமாட்டேன் என்று
சவூதியில் உன் பாச அண்ணனை பரிதவிக்க விட்டு
இங்கோ உன் தங்கைகளையும் மதுவையும்
துடிதுடிக்க விட்டு
பாச உறவுகள் எல்லோரையும் கதறி அழ வைத்துவிட்டு
அன்பு காட்டி வளர்த்த பெறாமக்களை கண்ணீர் சிந்த விட்டு
அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களை கதறி அழ
வைத்துவிட்டு
எங்குநீர் பாதியில் அவசரமாய் ஓடிச்சென்றீர்
இப்பாரினில் எம் எல்லோரையும் பரிதவிக்கவிட்டு
பட்டினியுடன் பாதி வழியில் - உன்
பாசப்பெறாமகன் ஹரிஸ்குட்டியிடம்
ஓடோடிச்சென்று விட்டீரே.
கனவில்கூட நாம் ஒருவரும் எண்ணவில்லை
உமக்கு இக்கதி நேரும் என்று
மூச்சு பேச்சின்றி அவசர சிகிச்சைபிரிவில் நீர்
இருந்த போதும் கூட நாம் எண்ணவில்லை
இவ்வளவு விரைவில் எம்மைவிட்டு பிரிவீர் என
பொல்லாத காலனவன் மோட்டார் சைக்கிள் உருவில் வந்து
உம்மை எம்மிடமிருந்து பிரித்துவிட்டான்
உம் இழப்பால் இருண்டு விட்டது எம் வாழ்க்கை
ஆணி வேரறுந்த மரம்போல் வாடுகின்றோம் நாமிங்கு
விண்ணிலிருந்து எம்மை எப்போதும் வழிநடத்துங்கள்

அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனைகள் இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மாசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி...**

உன் நினைவில் துடிதுடித்து வாடும் அண்ணாமார், தங்கைகள், மதுக்குட்டி, அக்கா, மச்சான்மார், மச்சாள்மார், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள், அயலவர்கள்


இல.203, சரஸ்வதி Lane,
கண்டி வீதி, அரியாலை.

**Nivithra**
**Beauty Parlour & Training Academy**
**(TVEC APPROVED CENTER)**

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெறுபேறுகள் வரும் வரையான காலப்பகுதியை சிறந்த முறையில் பயன்படுத்த எமது குறுங்கால பயிற்சி நெறிகளில் இணைந்துகொள்ளலாம்.

**1 நாள் பயிற்சிப்பட்டறை**

**FACIAL, SELF MAKEUP HAIRSTYLE & SAREE DRAPES**
திகதி : 18.12.2019
நேரம் : 9.30 Am



**Cake Workshop**
"கிறிஸ்மஸ், புதுவருடத்தை உங்கள் கை வண்ணத்தால் அலங்கரித்த Cake உடன் கொண்டாடுங்கள்"
- Butter Cake
- Soft Icing
- Hard Icing
- Royal Icing
- Glace Icing
- Cap Cake Deco

திகதி: 19.12.2019
நேரம்: 9.30 Am



கட்டணம்ரூபா 1500/= மட்டுமே
கட்டணம்ரூபா 2000/= மட்டுமே
முற்பதிவு செய்து ஆசனத்தை பதிவு செய்யவும்
இடம் : Nivithra Beauty Parlour
207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 771 2604 077 253 3507


**வாடகைக்கு**
யாழ்ப்பாண நகருக்கு அருகில் Rooms (அறைகள்) நாள்கள்/ மாத வாடகைக்குண்டு.
077 908 7128

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் உள்ள பான்சி கடைக்கு வேலையாள்கள் தேவை.
077 765 1590

**நிரந்தர வேலையாள்கள் தேவை**
அதிதீரன் நிறுவனத்துக்கு சிற்றூழியர், மேசன், வயறிங் வேலையாள்கள் தேவை.
077 717 9911

**விற்பனைக்கு**
NP QG XXXX
ஓட்டோ விற்பனைக்கு உண்டு.
077 207 2650

விருப்பமான ஆடையை மீண்டும் அணிய முடியவில்லையா?
இதோ இலகுவான வழி
Baraka
EASY SLIM Weight Loss
நேர்த்தியான இளம் தோற்றத்திற்கு



MRP: Rs. 1450/-
- கொழுப்பை ஒட்சியேற்றமடையச் செய்வதன் மூலம் கொழுப்பு தகணமடைதலைத் துரிதப்படுத்தி அதிக எடையைக் குறைக்கும்.
- உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது
- கருஞ்சீரகத்தின் பரிபூரண நற்குணங்களுடன் *Garcinia cambogia* (குடம்புளி), Green Tea இன் குணங்கள் நிறைந்த Easy slim, உணவுச் சமிபாட்டை இலகுவாக்கி உடல் நிறையைக் குறைக்கும்.

GMP, HACCP, ISO 22000, ISO 14001 CERTIFIED COMPANY
HOTLINE: 0117 77 22 77
www.barakanaturals.com
Baraka

HOTLINE 0777 17 35 17



IT மற்றும் ஆங்கிலம் இரட்டை டிப்ளோமா
TVEC APPROVED CENTRE
புதிய பிரிவுகள் ஆரம்பம்
18-12-2019 - (புதன்)
9 am or 3pm
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

**IT Courses**
- Dip.in Information Teachnology
- Office Automation
- PC Application
- Microsoft Office
- Web Designing
- Hardware,Mulitmedia,
- Auto CAD,Java,C++,PHP

DMI COMPUTER EDUCATION
TVEC Reg.No.:P25/0056
NVQ COURSES
ICT -Full Time (Level 4)
CAA -Full/Part Time
2/1/2020

- இலங்கை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
- NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Listening Speaking
ENGLISH | Diploma in Part-I | Diploma in Part-II

சர்வதேச ஆங்கிலப்பரீட்சைகள்
IELTS
# Unique Test Tips
# 40 hrs with free 4mock exam
# Latest course Material ( Book 12)
IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
* DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி 021 227 0775
No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் 021 224 1970
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665
A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி 021 228 5655

# Invitation for Bids
## Nallur Pradeshiya Sabha, Kokkuvil.

The Chairman Procurement Committee of Nallur Pradeshiya Sabha, Kokkuvil invites sealed bids from eligible and qualified bidders for following Works

| SN | Bid No | Name of Item/Work | Bid Security & Validity Period | Non Refundable Fees |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41/10/ Acc/Proc/IP Based CCTV Surveillance System -2019 | Supply, Delivery, Installation, Testing and commissioning of IP Based CCTV Surveillance System -2019 | 50,000.00<br>27.04.2020 | 2,000.00 |
| 02 | NP/14/41/(10)/Acc/ Proc/Tractor Trailer -2019 | Tractor Trailer (2 Nos) | 10,000.00<br>28.03.2020 | 2,000.00 |

01. Bidding will be conducted through National Competitive Bidding.
02. Interested eligible Suppliers may obtain applications from 17th December 2019 to 30th December 2019 between 9.30am and 2.30 p.m on working days from the Accounts Branch of Nallur Pradeshiya Sabha, Kokkuvil and payment of non – refundable fee should be made as given on the above (For further information Contact Telephone No - 021-2222700, Fax No – 021-222-0138)
03. Suppliers may submit their quotations by hand or registered post. The envelop shall bear the identification number on the left top corner (NP/14/41.....). The quotations to be addressed to Chairman, Pradeshiya Sabha of Nallur, 14/5, Karuvappulam Road, Kokuvil to reach before 10.00am on 31st December 2019 and will be opened immediately after closing of bids. Suppliers or their authorized representatives may be present. Late bids will be rejected.
04. All bids must be accompanied by a bid security and the validity period of Bid security is given in table above.
05. A Pre bid meeting will be held at , Pradeshiya Sabha of Nallur on 24th December 2019 at 10.00am. Interested bidders may participate in this meeting at their own expense.

**Chairman,**
**Procurement Committee,**
**Pradeshiya Sabha , Nallur**

16.12.2019

www.rocell.com | அழையுங்கள் 076 6 22 33 44 | காட்சியறைகள் வாரத்தின் 7 நாட்களும் திறந்திருக்கும்.

Rocell
என்றும் இனிமை
TILES | BATHWARE | KITCHENS



அழுத்தம் அதிகரிக்கிறது!
பண்டிகைக்கால சலுகைகளை தாமதமின்றி அனுபவித்திடுங்கள்

40%
வரை கழிவு
அழகிய டைல்ஸ், குளியலறை மற்றும் சமையலறை சாதனங்கள், உதிரிப்பாகங்கள்
ரொசெல் வழங்கும் இம்மகத்தான பண்டிகைக்கால சலுகையுடன் இணைந்து அலங்கார பண்டிகையை கொண்டாடுங்கள்


## விற்பனை முகவர்கள் தேவை
ஒரு தனியார் நிறுவனமொன்றின் பொருள்களை வடமாகாணத்திற்கு விநியோகிப்பதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அனுபவம் உள்ள விற்பனை முகவர்கள் தேவை.
**071 1768643/ 0770728643**

## சிறுநீரகம் தேவை
39 வயதுடைய ஆண் ஒருவருக்கு A+ அல்லது O+ இரத்த பிரிவைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. வயதெல்லை (25 - 40)
**தொடர்பு: 077 633 6947**

## மணமகள் தேவை
UK PR, உயர்குலம் மணமகனுக்கு 94 - 2001 வரை படித்த அழகான மெல்லிய இந்து கௌரவ மணமகளை சகோதரிகள் எதிர்பார்க்கிறார்கள். மணமகள் பெற்றோர் மட்டும் தொடர்புகொள்ளுங்கள்.
**00447944641045 - வைபர்**

## VACANCIES
பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சிக் கிளைகளுக்கு
**ENGLISH TEACHER.**
Sent Cv's within one week
**BRITISH COLLEGE OF EDUCATION**
email.- britishcollegekandy@gmail

## விற்பனைக்கு
சவுக்கு, தேக்கு, மருது, நாவல், மலைவேம்பு, இலுப்பை, புங்கை, சமண்டலை, கயூ, கறுவா, கராம்பு, அன்னமுன்னா, சீதாபழம், வேம்பு, சித்திர வேம்பு, முழுநெல்லி, அரிநெல்லி, விலும்பி, கோப்பி, பாலை, முதிரை, நல்லஇன தென்னங்கன்று, மாங்கன்றுவகை, தேசி, தோடை, பலா, கொய்யா, மாதுளை, செவிளை, தென்னை, கமுகு, வெற்றிலை, பெசன்புறுட், ஈரப்பலா, றெட்லேடிபப்பா, முருங்கை, யம்பு, கமுகு, கத்தாளை, முந்திரிகைக்கன்று, அம்பர் லாங்கன்று மேலும் பல இன பூங்கன்று வகை றோசா (ஒட்டு) சாடி வகைகளும் விற்பனைக்குண்டு.
**நியூ லங்கா பாம்**
பலாலி வீதி, ஊரெழு மேற்கு, கணேசா பாடசாலைக்கு அருகில்
077 612 9343
077 279 0431
கிளை: கே.கே.எஸ். வீதி, இணுவில்




முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு
சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD முறைப்படி வட்டியைச் செலுத்தல்
இன்றே தொடர்பு கொள்ளவும்
யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751
SINGER FINANCE
Web: www.singerfinance.com | Facebook: SingerFinance

விளம்பர தொடர்புகளுக்கு உதயன் advt@uthayan.com, 021 493 1111

## மணப்பெண் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற வெளிநாட்டில் வசிக்கும் மணமகனுக்கு (**PR** உடைய மணமகன்) மணப்பெண் தேவை. உள்நாடும், வெளிநாடும் விரும்பத்தக்கது. (CS/29934) (11,17)

**077 363 4525, 077 255 3220**

## House Keeping

பிரபல்யமான ஹோட்டல் ஒன்றுக்கு **House Keeping** இற்கு ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். (CS/29928) (11,17)

**076 131 3000, 077 263 8482**

## வீடு காணி விற்பனை

யாழ்ப்பாணம், கந்தர்மடம் ஆலடிச்சந்திக்கு அருகில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 3½ பரப்புக் காணியில் அமைந்த வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. (CS 29912/04-17)

**தொடர்பு: 076 007 4520**









# குருத்துவ அபிசேக வெள்ளிவிழா

**குருத்துவ அபிசேக ஆண்டின் 25ஆம் ஆண்டினை** கொண்டாடும் எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய

Best Wishes

## அருட்தந்தை J.பிரான்சிஸ் அடிகளாருக்கு

Best Wishes

எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், அவரை எமக்கருளிய இறைவனுக்கு நன்றியினையும் **கரித்தாஸ் கியூதெக் குடும்பத்தினர்** தெரிவித்துக் கொள்கின்றோம்



### பிறப்பும், இளமைப்பருவமும்

மாசித்திங்கள் 19ஆம் திகதி 1961 ஆண்டு ஆறுமுகம் யோசேப்புக்கும் யோசேப் இராயேஸ்வரிக்கும் மூத்த புதல்வனாக நீர்வேலி கிராமத்தில் பிறந்தார். இவருக்கு றொபின்சன், றொட்சன், றொயின் ஆகிய 3 சகோதரர் களும் உள்ளார்கள். சுவாமி ஞானப்பிரகாசரினால் நிர்மாணிக்கப்பட்ட பரலோக மாதா தேவாலயத்தில் இவருக்கு திருமுழுக்கு அருட்சாதனம் வழங்கப்பட்டது. உரும்பிராய் பங்கிற்கு சேர்ந்த பரலோக மாதா ஆலயம் உருவான போது நீர்வேலி கிராமத்தில் வேத கலாபனைகள் ஏற்பட்டன. அக்காலத்தில் கத்தோலிகர்களுக்கு எதிரான பல நெருக்கடிகள் அதிகரிக்க தொடங்கியபோது துன்பஙகளை தாங்க முடியாமல் அவ்வூரினை விட்டு பல கிறிஸ்தவர்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாண வேறுபகுதிகளில் குடியேறினார்கள் . விசுவாசத்தில் உறுதியாக இருந்தோர் ஊரில் தங்கி விட்டார்கள். கடவுள் அவர்கள் ஆசிர்வதிக்க எஞ்சியோர் அங்கேயே வாழத்தொடங்கினார்கள்.

இவர் தனது ஆரம்ப கல்வியை சுவாமி ஞானப்பிரகாச சுவாமியினால் ஆரம்பிக்கப்பட்ட நீர்வேலி றோ.க. பாடசாலையிலும், அத்தியார் இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பயின்றார். உதைப்பந்தாட்டத்திலும் மெய்வல்லுனர் விளையாட்டிலும் ஆர்வமான இவர் மிகவும் உற்சாகத்துடனும் துடிதுடிப்புடனும் எப்போதும் காணப்பட்டார்.

### குருமட வாழ்வு

அழைத்தலுக்கு அச்சாணியாக அமைவது விசுவாச வாழ்விற்கு வித்திட்ட விளைநிலம் தந்தையாரின் பிறப்பிடமான தோலகட்டி வசாவிளான். இவரின் தந்தை ஓர் இந்து - சுவாமி ஞானப்பிரகாசரின் உருவாக்கத்தினால் கிறிஸ்தவத்தை தழுவி நீர்வேலியில் கிறிஸ்தவ குடும்பத்தில் வாழ்ந்த இராஜேஸ்வரி என்பவரை திருமணம் செய்து விசுவாசத்தில் வாழ்ந்து தம்மகனாரின் அழைத்தல் வாழ்விற்கு வித்திட்டார்கள். "ஆரோன் வந்தது போன்று கடவுளிடமிருந்தே அழைப்பு வர வேண்டும்" அப்போது பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை R.M.G நேசநாயகம் இவரின் நிலையினை நன்கு தெரிந்து கொண்டு ஆண்டவர் இவரை அழைக்கின்றார் என புரிந்து கொண்டு இவரை நன்கு தயார் படுத்தி 1985 ஆம் ஆண்டு புனித மாடுத்தீனர் சிறிய குருமடத்தில் சேர்த்தார். ஆங்கில கல்வியினை முடித்து 1986 ஆம் ஆண்டு புனித சவேரியார் பெரிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் கற்கையினை கற்றார். 1989 ஆம் ஆண்டு கண்டி அம்பிட்டியா தேசிய குருமடத்தில் மெய்யியலின் B.Ph பரீட்சையினை சக மாணவர்களுடன் ஆயத்தப்படுத்தி அனுப் பப்பட்டார். 1990ஆம்-1993 ஆம் ஆண்டு வரை இறையியல் கற்கை யினை முடித்து B.Th பட்டத்தினையும் பெற்று, தியாக்கோன் நிலைக்கு உயர்த்தப்பட பாண்டியன் தாழ்வு, அன்னாள் கோவில் யாழ் மரியன்னை பேராலயம் , அடைக்கல அன்னை (OLR) ஆகிய பங்கு களில் பணியாற்றி, மேலதிக உருவாக்கம் பெற்று 02.03.1994 யாழ் பேராலயத்தில் தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டார். அப்போதைய ஆயரும் இளைப்பாறிய ஆண்டகை பேரருள் திரு - கலாநிதி. இ.தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகையினால் குருவாக 15.12.1994 அருட் பொழிவு செய்யப்பட்டார். இவரே நீர்வேலி பரலோக மாதா ஆலயத்தின் முதற்குருமணியாவார்

### பணியும், வாழ்வும்

குருத்துவ திருநிலைப்படுத்தலுக்கு பிற்பாடு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஒரு சில மாதங்கள் பணியாற்றினார். 1995 ஆம் ஆண்டு யாழ் மண்ணில் இடம்பெற்ற பெரும் இடப்பெயர்வுக்கு பிற்பாடு மக்களோடு மக்களாக ஒருசில மணித்தியாலங்களில் வன்னி பிரதேசத்தில் அமைந்துள்ள வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயத்திலும் அதனை தொடர்ந்து அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் 1997ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். மீண்டும் யாழ் மண்ணுடன் தொடர்பு துண்டிக்கப்பட்ட வன்னி நிலப்பரப்பிலிருந்து 1997ஆம் ஆண்டு கடல்மார்க்கமாக யாழ் மண்ணை வந்தடைந்து மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் உதவிப்பங்குத்தந்தையாக பணியாற்றினார். ஆதன் பிற்பாடு 1998 - 1999 வரை அதி உச்ச பாதுகாப்பில் இருந்த வடமராட்சி கிழக்கு தாளையடி பங்குத்தந்தையாக பணி யாற்ற ஆயர் அவர்களால் அனுப்பப்பட்டார். அக்காலத்தில் ஆனையிறவின் படை முகாம் தகர்ப்பின் போது தாளையடி பங்கு மக்களுடனும் புனித கார்மேல் அன்னை அருட் சோதரிகளுடனும் இடம்பெயர்ந்து சென்றார் . 2000 - 2002 வரை முல்லைத்தீவு புனித பேதுரு ஆயை பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார். மீண்டும் ஆயரின் பணிப்புக்கு இணங்க 2002 - 2004 வரை தாளையடி பங்குக்கு பங்குத்தந்தையாக மீண்டும் அனுப்பப்பட்டார். நீண்டு பரந்து விரிந்த வடமராட்சி கிழக்கு கரையோர பிரதேசத்தில் உதவிப்பங்குத்தந்தையாக அருட்தந்தை கான்ஸ்போர் அடிகளார். பங்குத்தந்தையாக யோ. பிரான்ஸ் அடிகளுடன் பணியாற்றிய வேளை 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலையின் அவலத்தை இவர்கள் சந்திக்க நேர்ந்தது. இந்த அனர்த்தத்தினால் மீண்டும் இடம் பெயர்ந்து 2005 ஆம் ஆண்டு இளவாலை மாரிசின்கூடல் பங்குத்தந்தையாக பணியாற்ற ஆயரால் பணிக்கப்பட்டார். ஒரு வருட பணிக்கு பிற்பாடு 2006 ஆம் ஆண்டு ஆயரின் பணிப்புக்கு அமைய மறைபரப்பு பணிக்காக (Mission Work)

2006 - 2011 அமெரிக்காவில் உள்ள கலிபோனியா மாகாணத்தில் Los Angeles என்ற நகரத்தில் வித்தியர் (Whiter) என்ற இடத்தில் அமைந்துள்ள புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆலயத்தில் 03 வருடங்கள் பணியாற்றி மீண்டும் 3 ஆண்டுகள் ஆண்டவரின் திருக்காட்சி ஆயைத்தில் பணியாற்றினார். தனது வெளிநாட்டு பணியினை முடித்து தாயகம் திரும்பிய அருட்தந்தை 2011 - 2016 சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் பணியாற்றினார். இவ்வாறு பணியாற்றிய போது யாழ் மறைமாவட்ட புதிய ஆயர் பேரருட்திரு .கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக் கரித்தாஸ் HUDEC - Caritas-Vanni ) இயக்குனராக 2017 - 2019 நியமிக்கப்பட்டார். மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வாழ்வினை கட்டியெழுப்ப கிளி - முல்லைத்தீவு மாவட்டங்களில் நலிவுற்ற மக்களுக்காக எமது தேசிய நிறுவனமான கரித்தாஸ் - இலங்கை செடக்குடனும், ஆயர், குருக்களுடனும் இணைந்த பல நிகழ்ச்சி திட்ட வரைபுகளை மேற்கொண்டு " வலக்கை செய்வதை இடக்கை அறியாது இருக்கட்டும் " என்ற ஆண்டவரின் வாக்குக்கு அமைய பல பணியாற்றிய வண்ணமுள்ளார். இன்று தனது குருத்துவ வாழ்வின் 25 ஆண்டு நிறைவில் வெள்ளி விழாக்காணும் அருட்தந்தை அவர்களை கியூடெக் கரித்தாஸ் பணியாளர்கள் இணைந்த குருத்தவ வெள்ளி விழாவை நினைவு கூறும் தந்தை வாழ்த்தி, நன்றி உணர்வோடு இறைவனுக்கு புகழ் பாடி தொடரும் ஆண்டில் இவரின் பணி சிறக்க இறைவனின் அருள் வேண்டிநிற்கின்றோம்.

கிளிநொச்சி, பரந்தனில்......

விசேட விலைக்கழிவு

Star Rest 10%

திருமண மண்டபம்

➤ இன்றில் இருந்து சகல விதமான வைபவங்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு 14.01.2020 வரை முற்கூட்டிய பதிவுகளுக்கு வழங்கப்படும்

➤ தங்களின் சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான இலங்கை, தென்இந்திய, மற்றும் சைனிஸ் உணவு வகைகளை ஓடர்செய்து பெற்றுக்கொள்ளலாம்

➤ X Mas பண்டிகையை முன்னிட்டு "ஸ்பெசல் பிரியாணி" குடும்பமாக உண்டு மகிழ்ந்திட எம்மால் வழங்கப்படும் கீழ்க்காணப்படும் சிட்டையினைப்பெற்று தங்கள் வரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(மதியம் 12.00 - பி.ப 3.00 மணி வரை)






➤ அதிநவீன வசதிகளுடனான Rooms மற்றும் kitchen வசதிகளுடன் கூடிய Apartment அத்துடன் Honeymoon packege உண்டு

➤ Rooftop & Garden தங்களது சகலவிதமான மாலை, இரவு வைபவங்களை கிளிநொச்சியின் எழில்மிகு மாலைக்காட்சியினை இரசித்தபடி உங்கள் மனதிற்கேற்றபடி கொண்டாடுவதிற்கான ஏற்ற இடம்

T.P: 021 228 0555 / 077 231 5521

160th Mile Post, 5th Canal Lane, A9 Road, Paranthan

இன்றில் இருந்து விசேட விலைக்கழிவு... 14.01.2020 வரை

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 15.11.2019 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர் திருமதி

## திரேசம்மா இராஜபொன்கலன் (ராசாத்தி)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து மரணச் சடங்கில் கலந்துகொண்டு ஆறுதல் வழங்கியவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும் சமூகவலைத்தளங்கள் வாயில்லாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, மலர் வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**08, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம்.**

**குடும்ப உறவுகள்.**

(CS.19919)(13.17)

# மரண அறிவித்தல்



CS2000(16/17)

## செபஸ்ரியன் பெர்ணாண்டோ இராசதுரை

**(Retired Chief Clerk - Colombo & Secretary - Saudi Arabia)**

சுண்டுக்குழி கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும்,இல.83, கீரிமலை வீதி, சண்டிலிப்பாய், கொழும்பு, சவூதி அரேபியா, லண்டன், அமெரிக்கா, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியன் பெர்ணாண்டோ இராசதுரை கடந்த **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பராணியின் (Baby) பாசமிகு கணவரும் மனோகரன் (Texas, U.S.A), சந்திரசேகரன் (Baba- Canada), மனோகரி (Pakistan), சுதாகரி (London) ஆகியோரின் அன்பு தந்தையும் Dr.உமா (Texas, U.S.A), நிரஞ்சனா (Canada), அசோகன் (Pakistan), ரமணன் (London) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற டெய்ஸி மற்றும் நீற்ரா ஜெயரத்தினம், காலஞ்சென்ற சைமன் சின்னராசா, குயின் (Canada), வில்லியம் சற்குணராசா (France) ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் காலஞ்சென்ற கனகராஜசிங்கத்தின் அன்பு மைத்துனரும் சைலஜன், சாருஜன், நிருஜன், பியோஜினி, பெலீசியன், சாருசன், தாருஜன், மயூரி ஆகியோரின் பாசமுள்ள பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **(16.12.2019)** திங்கட்கிழமை மாலை **3.00** மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக சண்டிலிப்பாய் புனித திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு விளான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மகள் - 076 632 5091
சகோதரி- 077 998 0361
மகன் - 077 916 4166**

**தகவல்:
குடும்பத்தினர்**

**கடைகள் வாடகைக்கு**

சாவகச்சேரி நகரின் மத்தியில், A-9 (கண்டி) வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. கிளை அலுவலகங்களுக்கு உகந்தது

**தொடர்பு - 075 426 7309, 077 152 6874**

**O/L ENGLISH LITERATURE**

Personal & Group Classes
Kindly Contact: Mr. Abraham
**076 886 5300**

# North Lanka IIT

## B.Ed| M.Ed
## Degree Programmes

**விரிவுரைகள் ஆரம்பம்**

திகதி : - **20.12.2019** நேரம் : - காலை 10.00 மணி

இடம் : - **NORTH LANKA IIT (PVT) LTD
TOP FLOOR, PEOPLES' BANK BUILDING
STANLEY ROAD
JAFFNA**

**Approved By
UGC &
Ministry Of Education**

பதிவுகள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு : - 94(0)21 4927088 | 0767504535

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பனான
**செ. ஜெகதீசன்**
அவர்களின் பரசமிகு தாயார்

## திருமதி செல்லையா தனலெட்சுமி

அவர்கள் காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!*

**சிறி மீனாட்சி நகை அகம்
உரிமையாளரும், பணியாளர்களும்.
138, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலட்சுமி ஹரிதாஸ்



**அன்னை மடியில் 12.02.1941**
**ஆண்டவன் அடியில் 30.11.2019**

**யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி ஹரிதாஸ் கடந்த 30.11.2019 அன்று கனடாவில் இறைபதம் எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நடராசா - சிவகெங்கை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி விவேகானந்தா - பரிமளாதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும், ஹரிதாஸின் ஆருயிர் மனைவியும், சிவானந்தன் (இலங்கை), சங்கரி (கனடா), நிர்மலானந்தன் (பாஹ்ரேன்), மனோகரி (இந்தியா), முருகானந்தன் (இலங்கை), லோகதாஸன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேந்திரன் (கனடா), யோகேஸ்வரன் (இந்தியா), நந்தினி (இலங்கை), தேவகலா (இலங்கை), ஜெயந்தினி (இலங்கை), சுதர்சினி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், மங்கையற்கரசி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகராசாவின் உடன்பிறவாச் சகோதரியும், இந்துசன், பிரணவன், பிரதாபன், அருண்ராஜ், நவீன்ராஜ், லக்ஷ்மன்ராஜ், நிசாந்தினி, ஹரிணி, லோகிதா, சரஞ்சன், சகானா, தனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (14.12.2019) சனிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9 மணிவரை இலக்கம் 737Dundas Street East Mississuaga வில் உள்ள St.John's Dixie Cemetery & Crematorium மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணிவரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்:**

**இராஜேந்திரன் (மருமகன் - கனடா) - (647) 280- 3394,
சங்கரி (மகள் - கனடா) - (647) 206 - 3394,
யோகேஸ்வரன் (மருமகன் - இந்தியா) - 91 917 639 0167,
சிவானந்தன் (மகன் - இலங்கை) - 94 77 717 4905,
நிர்மலன் (கமன் - பாஹறின் ) - 97 336 186 994,
முருகானந்தன் (மகன் - இலங்கை ) - 94 77 6675 125,
லோகதாசன் (மகன் - இலங்கை ) - 94 77 621 8850**

(CD/29948)(11,17)

## Jaffna College Institute Of Agriculture

### தேசிய தொழில்தகைமை ( NVQ ) சான்றிதழ் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள் க.பொ.த (உயர்தரம்) சித்தியடையாதோர் . பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழிற்தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**Field Assistant Agriculture**

**(விவசாய வெளிக்கள உதவியாளர் பயிற்சிநெறிகள்) - தமிழ்மொழி மூல பயிற்சி நெறிகள்.**

**தேசிய தொழிற்தகைமை மட்டம் 4**
**(ஒருவருட காலப்பயிற்சி நெறி)**

தகைமை **NVQ** மட்டம் 3 அல்லது க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்திருப்பதுடன் மேலதிகமாக விவசாயப் பாடத்திலும் சித்தியடைந்திருப்பதுடன் 16 - 26 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**பயிற்சிக் கட்டணம் இலவசம்**

தமிழ்மொழி மூலமான பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் **23.12.2019 காலை 9 மணிக்கு** எமது நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்குப் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம். கல்வித் தகைமைச் சான்றிதழ்கள். கிராம சேவையாளரின் நற்சான்றிதழ். வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

**மேலதிக விவரங்களுக்கு**
**பயிற்சிநெறி இணைப்பாளர்,**
**யாழ்ப்பாணக்கல்லூரி, விவசாய நிறுவனம்,**
**மருதனார்மடம், சுன்னாகம், யாழ்ப்பாணம்.**
Email:- jcinstituteofagriculture@gmail.com.
**தொலைபேசி :- 021 224 1420**

## மரண அறிவித்தல்

### திருமதி சோமசுந்தரம் நாகேஸ்வரி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் நாகேஸ்வரி கடந்த 13.12.2019 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்புத் துணைவியும், கரன் (கனடா), வட்சலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகன், சசி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மகேஸ்வரி, ஆறுமுகம், செல்வராஜா (பொலிஸ்) மற்றும் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, மதுரநாயகம், செல்வராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பொன்னுத்துரை**
**கேசவநாதன் (பேறாமகன்)**
**பாலச்சந்திரன் ரஜனி**
**(பேறாமகள்)**

**393/47, கோயில்வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(CS/29931(01.17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
05 . 04 . 1931

மறைவு
15 . 11 . 2019

### திருமதி கனகேஸ்வரி ஐயாத்துரை

கடந்த 15.11.2019 அன்று சிவபதமெய்திய எமது அன்புத் தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் சாவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலமும் ஊடகங்கள் மூலமும் எமது துயரில் பங்குகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருவடி, உசன்,**
**மிருசுவில்.**

**குடும்பத்தினர்.**
**021 205 0114**

## Job Opportunity

**பணியாளர்கள் தேவை**

**வாடிக்கையாளர் சேவை**
**(Call Center UK Time)**

**தகைமைகள்**
**Computer Knoweledge**
**English Knoweledge**

சாவகச்சேரி பிரதேசம் மற்றும் அருகிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. உங்களுடைய சுயவிபரக்கோவையுடன் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கத்தையும் இணைத்து அனுப்ப வேண்டிய முகவரி

E - mail: accounts@lankatec.com

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவர்களான மருத்துவ பீடத்தின் ஒட்டுண்ணியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளரான கலாநிதி ஆ.முருகானந்தன் அவர்களின் அன்புத்தாயாரும் மருத்துவபீடத்தின் நுண்ணுயிரியல் துறையின் தலைவர் கலாநிதி (திருமதி) கலாமதி முருகானந்தன் அவர்களின் அன்புத்தாயாருமான

திருமதி
**ஆறுமுகம் அழகம்மா**


அவர்கள் கடந்த 14.11.2019 அன்று இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

(CS 29922(14.17)

## மரண அறிவித்தல்

### லோகநாதன் குணரத்தினம்



யாழ். இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட லோகநாதன் குணரத்தினம் கடந்த **(07.12.2019)** சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கால்ஞ்சென்றவர்களான வல்லிபுரம்- பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஞானரூபியின் கணவரும், பிரதீப், பிரசன்னா, பிரீத்தா, அபிராம் ஆகியோரின் தந்தையும் கலாவதி (கனடா), சீலாவதி (ஜேர்மனி), யோகநாதன் (மன்னார்), புஸ்பலதா (கந்தர்மடம்), குணநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் வசந்தரூபி (லண்டன்), உதயகுமாரி (கனடா), மோகனரூபி (கொக்குவில்), சுவர்ணரூபி (இணுவில்), காந்தரூபன் (கனடா), பிரேமரூபன் (கனடா), யோகரூபி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(15.12.2019)** ஞாயிற்றுக்கிழமை கனடா (மொன்றியல்)இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS29951(16/17)

**தகவல்: குடும்பத்தினர்**



### திருமதி பாக்கியதேவி சுந்தரமூர்த்தி

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கு சந்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியதேவி சுந்தரமூர்த்தி நேற்றுமுன் தினம் (13.12.2019) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் செல்வவிநாயகம் சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், டட்ஷாயினி (ஆசிரியை - மு/ விசுவமடு மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தாயும், தபேசன் (கட்டார்) அவர்களின் அன்பு மாமியும், பவிஷியனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தை வீதி,**
**ஆவரங்கால்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS29969) (13.17)

**077 430 1975, 077 639 5747, 021 223 1930**

## தேவை

**Photoshop**

தெரிந்த வடிவமைப்பாளர்கள் தேவை.

**HUBIIMS**
**461, K.K.S Road** **077 165 9845**

## WORKSHOP

Cover Letter writing (With tips on Ms Word)
22 nd 11am - 1.00 pm (10 Seats Only)
Teachers needed for all subjects
No 20, K.K.S Road,
Kokuvil
070 199 1880

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் K.K.S Road இல் யாழ் இந்துக்கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள வீடு வாடகைக்கு குடும்பத்தினருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ கொடுக்கப்படும்

**தொடர்பு- 071 283 8425**

## சுயதொழில்

மாதாந்தம் ரூபா **60,000.00**ற்கு மேல் சம்பாதிக்க முழுநேரமாகவோ. பகுதிநேரமாகவோ எமது அகஸ்திய மூலிகை அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்யுங்கள்.
அகஸ்திய மூலிகை அழகு சாதனப்பொருட்கள்
**டாக்டர் காயத்திரி தொடர்பு- மனேஜர்**
**077 918 7863, 076 852 4004**

## வேலையாள் தேவை

பிரபல மாபிள் களஞ்சியத்திற்கு
1. Forklip
2. Heavy Vehicle சாரதி தேவை
மாபிள் கல் ஏற்றி. இறக்க வேலையாள் தேவை

விளம்பர இல.2001
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

## விற்பனைக்கு உண்டு

தடுப்பூசி போடப்பட்டது.
45 நாட்கள் உடையது German Shephed இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
- **இடம்:- இளவாலை, யாழ்ப்பாணம்.**
- **விலை:- நேரில்**
- **தொடர்புக்கு:- 077 886 1425**

## மணமகள் தேவை

Uk pr உயர்குலம் மணமகனுக்கு 94 - 2001 வரை படித்த அழகான மெல்லிய இந்து வேளாளர் மணமகளை சகோதரிகள் எதிர்பார்க்கிறார்கள். மணமகள் பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளுங்கள்.

**00447944641045** வைபர்

## IELTS CLASSES

யாழ் நகரில் கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் A1 Exam (வாழ்க்கைத்துணையுடன் இணைவதற்கான பரீட்சை) வெளிநாடு செல்வோருக்கான IELTS (Academic & General English Grammar & Spoken English) கற்பிக்கப்படுகின்றது.
Guranteed For 75 in IELTS Exam
Pass in A1 Exam
IELTS Exam Centre

Please Contact
**077 780 3970,078 5211351**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021493 1111

## பணியாள்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கிவரும் வியாபார நிறுவனம் ஒன்றுக்குப் பின்வரும் பணியாள்கள் தேவை.
1. **பொதி கட்டுபவர்கள் (பெண்)**
2. **விற்பனைப் பிரதிநிதி** (*Sales Rep*)

(30 தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்டவருக்கும், அனுபவமுள்ளவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)
**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**076 846 7146** (CS/29946) (11,17)

**Study in USA, Canada, UK, Ireland, Germany, Holland New Zealand, Switzerland, Singapore, Sweden, Malta**

GCE (O/L) அடிப்படைத் தகுதியுடன் Government Colleges/Universities அனுமதியை பெற்றுக்கொள்ள. குறைந்த செலவில் வெளிநாட்டில் உயர்கல்வி
VISA கிடைத்த பின் College கட்டணம்.

**16 Years Celebrating Of Excellence**

**More than 370 Government Funded Universities and Colleges**

Nottingham College of London,
Phone: 0773547049
Website: www.lifetimencl.com,
www.srilanka.eie-group.com

## வட...

கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. அதனைப் பெறுவதற்கு நாம் தொடர்ந்து முயற்சிப்போம். அதனை எவராலும் தடுக்க முடியாது.

சிங்கள மக்கள், தமிழ் மக்களின் தீர்வுக்கு எதிரானவர்கள் இல்லை. சிங்கள மக்களின் விருப்பமின்றி தமிழ் மக்களின் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

சிங்கள மக்களைப்போல தமிழ் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகளை வழங்கினால் தான், நாடு பொருளாதார ரீதியாக முன்னேற முடியும். அரசியல் அதிகாரப் பகிர்வினூடாகவே உலகில் உள்ள அனைத்து மக்களும், சமமாகவும், சமாதானமாகவும் வழ்கிறார்கள். இது இலங்கைக்கு புதுமையான விடயமல்ல. சிங்கள மக்களுக்குப் பெரும்பான்மைத் தலைவர்கள் உண்மையைக் கூற வேண்டியக் காலம் விரைவில் வரும்.

இந்த் அரசைப் பகைக்க நாம் விரும்பவில்லை. அரசியல் தீர்வைக் காண்பதற்காக, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நாம் எப்போதும் உதவத் தயாராகவே இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் காலதாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் செய்தபோது பல தடவைகள் அவருடன் கலந்துரையாடி உள்ளோம். இந்தியாவுக்குச் சென்று நாம் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடுவோம்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சில தினங்களுக்குள்ளாகவே இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாக வாழ வேண்டும் எனவும், அதற்கான அரசியல் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கூறியிருந்தார்.

தீர்வு விடயத்தில் இந்தியாவை சந்தேகக் கண் கொண்டு பார்க்கக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகள் 70 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு, கிழக்குக்கு அப்பால் சில மாவட்டங்களிலும் போட்டியிடும். மலையக மக்களின் பிரதிநிதிகளுக்கு நாம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராகவே இருக்கிறோம். இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா உருவாக்குவதற்கு மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதே காரணம். மலையகத்துக்கும் வடக்குக்குமான தொடர்பு ஆழமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எந்தவிமானப் பிளவுகளும் இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், ஒற்றுமையின்மை, ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை அறிவிப்பதற்கு எடுத்துக்கொண்ட காலதாமதமே, ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவின் தோல்விக்குக் காரணம்.

புதிய அரசமைப்பு கொண்டு வருவதில் ஏற்பட்டத் தோல்விக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் கடந்த அரசில் ஏற்பட்ட பிளவுகளே காரணம் - என்றார். (ஓ,5,22)

## ராஜித...

சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் மங்கள சமரவீர ஆகியோரிடம் வாக்குமூலம் பெற வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

கடத்தியவர்கள் துப்பாக்கியைக் காண்பித்து பெண் அதிகாரியை அச்சுறுத்தியதாக ராஜித சேனாரத்ன தகவல் வெளியிட்டார். அவர் எங்கிருந்து அவதானித்தார் என்பது தொடர்பில் கேள்வி எழுகின்றது. இது தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் - என்றார். (ஓ,5,22)




## 83 ஆயிரம்...

ரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. ஆகக்கூடுதலாக 50 ஆயிரம் மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களுக்கான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தகவல் தொடர்பாடல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 50 ஆயிரம் பேரால் அதிகரிப்பது தொடர்பில் உயர் கல்வி அமைச்சு, அமைச்சரவையில் விரிவாக பேச்சு நடத்திவருவதாகத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, பல்கலைக்கழகங்களின் வசதிகள் தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் கூறினார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை அறிவிப்புக்கு அமைவாக இளையோருக்கு இடம் கிடைப்பதாகவும் இதன் கீழ் பல்வேறு நிறுவனங்கள் உருவாகும் என்றும் அமைச்சர் கூறினார். (ஒ,5)

## வண்ணமயமாகும்...

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பொதுச் சுவர்களை வர்ணமயமான ஓவியங்களால் அலங்கரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோத்தாபய ராஜபக்ஷ் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதை தொடர்ந்து தென்னிலங்கையின் பல பகுதிகளில் தமது பகுதிகளை சுத்தமாக வைத்திருக்க இளையவர்கள் களமிறங்கியிருந்தனர். தமது பகுதிகளிலுள்ள வீதியோர சுவர்களில் சித்திரங்கள் வரைந்து வருகிறார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இந்த நடவடிக்கையில் இளையவர்கள் களமிறங்கியுள்ளனர். தென்னிலங்கையில் போர் வெற்றி மற்றும் இராணுவத்தின் வீரசாகசங்களை கூறும் சித்திரங்கள் வரையப்பட்டு வரும் நிலையில், யாழ். நகரத்தில் அழுக்காக இருந்த கட்டட சுவர்களுக்கு இளையோர் வெள்ளையடித்தனர். யாழ். நகரத்தில் நவீன சந்தை கட்டடத் தொகுதியில் இளையவர்கள் வெள்ளை வர்ணம் தீட்டும் முயற்சியில் இறங்கினர்.

யாழ்ப்பாணம் மாநகர மேயரின் அனுமதியுடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுச் சுவர்களை இளையோர் அடையாளப்படுத்தி மாநகர மேயரின் அனுமதி பெறப்படும். அதன் பின்னர் வரையப்படவுள்ள ஓவியமும் மேயருக்கு காண்பிக்கப்பட்டு அவரது அனுமதியுடன் வரையப்படுகின்றன. (ஓ,5)

## கைது...

வேளை காங்கேசன்துறைப் பொலிஸார், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கொல்லன்கலட்டியைச்சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர். அத்துடன் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

நவாலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கப் ரக வாகனத்தில் சென்று தாக்குதல் நடத்திய சம்பவத்தில், வாகனச் சாரதியை சங்கானைப் பகுதியில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். அவரது வாகனமும் மீட்கப்பட்டுள்ளது. (ஓ,5,26)

## மயிரிழையில்...

சென்று கொண்டிருந்த ரயிலுடன் கார் மோதியது. சாவகச்சேரியிலிருந்து வந்த கார், அரசடிச் சந்தியில் தாமோதரம் பிள்ளை வீதிக்குச் செல்வதற்காக திரும்பிய போது கடுகதித் ரயிலுடன் மோதியது. காரின் முன்பக்கம் சேதமடைந்தது. இருப்பினும் சாரதியும் அவருடன் பயணித்தவரும் மயிரிழையில் உயிர் தப்பினர். (ஓ,5,131,159)

## சிமெந்து...

வரி 17 சதவீதமாகவிருந்து 8 சதவீதமாக டிசெம்பர் முதலாம் திகதி முதல் குறைக்கப்பட்டது. அதற்கு அமைவாக சிமெந்தின் விலைக் குறைப்பு செய்யபட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். (ஓ,5)

## மண்ணைக்...

புதிய ஜனாதிபதியாக கோத்தாபய பதவியேற்றதன் பின்னர் மணல் மற்றும் கிரவலுக்கான வழி அனுமதிப் பத்திரம் இல்லாமல் செய்யப்பட்டது. பொலிஸார் தலையீடு செய்யாமலிருப்பதனால் மணல் வியாபாரிகள் சுதந்திரமாக சட்டவிரோத மணல் மண் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு எதிராக வடமராட்சி கிழக்கு, தீவகம் உள்ளிட்ட பிரதேசங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் உச்சக்கட்டமாக, சட்டவிரோத மணல் ஏற்றிய உழவியந்திரங்கள் தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவமும் வேலணையில் நடைபெற்றிருந்தது. இந்த நிலையில் கிளிநொச்சி மக்களும் நேற்றுக் களத்தில் இறங்கினர்.

கிளிநொச்சியின் பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி, கோவில் வயல் மக்களே நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இயக்கச்சி சந்தியில் ஒன்று திரண்ட மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரம் ஏ-9 வீதியின் போக்குவரத்து பாதிக்கப்ப்ட்டது. உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பளைப் பொலிஸ் நிலைய பொலிஸார், மக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

இயக்கச்சி, கோவில் வயுல் என்பன ஆனையிறவு நீரேரி, சுண்டிக்குளம் நீரேரிக்கு இடையில் அமைந்துள்ள ஒடுங்கிய தாழ் நிலப்பரப்பு என்றும், தற்போது மேற்கொள்ளப்படும் துரித மண் அகழ்வால் கிராமம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர். அத்துடன், முள்ளியான் மண்டலாய் வாய்க்காலும், அதை அண்டிய மணல் மேடும் பிரதேசத்தின் வெள்ள இடரைக் குறைத்து வந்ததாகவும், அந்த பகுதியும் மணல் கொள்ளையர்களால் திருடப்படுவதால் தமது கிராமங்கள் அழிவடையும் சூழல் உருவாகுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் உடனடியாக கவனமெடுப்பதாகவும், மணல் கொள்ளையர்கள் பயன்படுத்தும் வீதிகளில் காவல் கடமையில் பொலிஸாரை நிறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், பொலிஸாரின் காவல் கடமைக்கு பிரதேச மக்களும் இணைந்து ஒத்துழைப்பு வழங்குவதென முடிவானது. இதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர். (ஓ,5)

## கைக்குண்டு...

ளது. காணியைத் துப்புரவு செய்தபோது கைக்குண்டு இருப்பதாக உரிமையாளரால் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக இன்று அது செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ,5,26)

## மயங்கினார்...

லிருந்து தெரியவந்துள்ளது. அவர் முழுமையாக விசாரிக்கப்பட வேண்டியிருப்பதால் மேலும் அறிக்கை பதிவு செய்யப்படும். டிசெம்பர் 8 ஆம் திகதி அவரிடம் முழு அறிக்கையையும் பதிவு செய்ய முடியவில்லை. அவர் இரண்டு முறை மயக்கம் அடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன, என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர். (ஓ.5)


# கடின உழைப்பு வெற்றிக்கு வழி

## ரோட்டி எஸ்ட்விக் தெரிவிப்பு

ஒருநாள் போட்டித் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் நன்றாக செயற்படுவார்கள் என்று அந்த அணியின் உதவி பயிற்சியாளர் ரோட்டி எஸ்ட்விக் தெரிவித்துள்ளார்.

இந்தியா-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் முதலாவது ஒருநாள் போட்டி சென்னை சேப்பாக்கத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்த போட்டிக்காக இரு அணி வீரர்களும் பயிற்சிகளை மேற்கொண்டனர். இந்தப் பயிற்சிக்குப் பின்னர் உதவிப் பயிற்சியாளர் தெரிவிக்கையில்;



ஹெட்மயர், பூரன், ஹோப் ஆகிய இளம் வீரர்கள் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். இது எங்களுக்கு உற்சாகம் அளிக்கிறது. நீங்கள் எந்த அளவுக்கு கடினமாக உழைத்து போட்டிக்கு தயாராகிறீர்கள் என்பது தான் முக்கியமான தாகும். கடினமான உழைப்பின் மூலம் தான் கோக்லி உயர்ந்த நிலையை எட்டி இருக்கிறார். அவரிடம் இருந்துஇதனைநிறையவே வீரர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுக்கு வாய்ப்பு கிடைத்தாலும், கடினமாகஉழைக்கவில்லை என்றால் சாதிக்க முடியாது. கடின உழைப்பு உங்களுக்கு சலிப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அது தான் உங்களுக்கு சிறந்த வெற்றியை தேடிக்கொடுக்கும். இந்தப் போட்டித் தொடரில் எங்கள் அணி வீரர்கள் சிறப்பாகச்செயற்பட்டு வருகிறார்கள். உண்மையிலேயே எங்கள் வீரர்கள் கடினமாக உழைத்து வருகிறார்கள். இதனால் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. ரி-20 போட்டியில் ஹெட்மயர் ஆட்டம் அருமையாக இருந்தது.

இந்தியாவுக்கு எதிரான ரி-20 ஓவர் போட்டித் தொடரில் எங்கள் அணியினர் ஆடிய விதம் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த- 20 தொடரில் இரு அணிகளுக்கும் இடையே சிறிய வித்தியாசம் தான் தெரிந்தது. இதேபோல் ஒருநாள் போட்டித் தொடரிலும் நாங்கள் நன்றாகச் செயற்படுவார்கள் என்று நம்புகிறேன் - என்றார்.

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.15

கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த வியாழக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக பழைய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் யுனைரெட் அணிக்கும், கொலின்ஸ் வொரியஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சநிலையில் முடிவடைந்தது. நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் ரைடஸ் அணிக்கும், கொலின் வொரியஸ் அணிக்கும்இடையிலானஆட்டத்தில் கொலின் வொரியஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் கொலின்ஸ் கொங்கிரஸ் அணிக்கும், கொலின்ஸ் யுனைரெட் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கொலின்ஸ் யுனைரெட் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



## காலநிலை சீரின்மையால்

# இலங்கை - பாகிஸ்தான் டெஸ்ட் கைவிடப்பட்டது

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் சீரற்ற காலை நிலை மற்றும் போதிய வெளிச்சமின்மை காரணமாக முழுமையாக கைவிடப்பட்டது.

10 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானில் நடைபெறும் வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளமை வீரர்களுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும், ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

முதல் மூன்று தினங்களிலும் 91.5 பந்துப்பரிமாற்றங்கள் மாத்திரமே வீசப்பட்டுள்ளதுடன் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. தனஞ்சய டி சில்வா 87 ஓட்டங்களுடனும் டில்ருவன் பெரேரா 6 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இரவு பெய்த கடும் மழை மற்றும் நேற்றுப் காலை நிலவிய மப்பும் மந்தாரமுமான காலநிலை காரணமாக நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் விளையாடப்படாமல் முழுமையாக கைவிடப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டது.

# மேற்கிந்தியத்தீவுகள் - இந்தியா முதலாவது ஒருநாள் போட்டி இன்று



மேற்கிந்தியத்தீவுகள் - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் ரி -20 போட்டியை இந்திய அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது ஒருநாள் போட்டி இன்று சென்னை சேப்பாக்க மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ரி-20 போட்டியின் வெற்றிக் களிப்புடன் களமிறங்கும் விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணியின் துடுப்பாட்டத்தை பொறுத்தவரைக்கும் நம்பிக்கையான துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். சர்மா, ஜடேஜா, மய்ங்க் அகர்வால், கே.எல்.ராகுல், மனிஸ் பாண்டே, ரிஷப் பந்த் ஆகிய பலமான துடுப்பாட்ட வரிசை காணப்படுகின்றது. பந்து வீச்சிலும் சமி, சாஹல், யாதவ், புவனேஸ்வர் குமார் ஆகியோர் அணிக்கு வலுச் சேர்க்கின்றனர். பும்ரா அணியில் இல்லாதது இந்திய அணியைப் பொறுத்தவரையில் வெற்றிடமாகவே காணப்படும் என்பதில் சந்தேகமில்லை.

பொல்லார்ட் தலைமையில் களமிறங்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துடுப்பாட்டத்துக்கும் பஞ்சமிருக்காது. அம்பேர்ஸ் ஹட்ரல், சேஸ், ஹட்மயர், கோல்டர், ஹோப், லூயிஸ், போரன் அணிக்குப் பெரும் பலமுள்ள துடுப்பாட்ட வரிசை காணப்படுகின்றது. பந்து வீச்சு சிறிது பலவீனமாகக் காணப்பட்டாலும் இந்திய துடுப்பாட்ட வீரர்களை ஓரளவு கட்டுப்படுத்த கூடிய அளவில் பந்து வீச்சாளர்கள் இருக்கின்றனர். ரி-20 போட்டியின் தோல்விக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்த ஒருநாள் போட்டியில் பதிலடி கொடுக்கும் முனைப்பில் களமிறங்கும் என்பதில் சந்தேகமில்லை.



# முதல் இன்னிங்ஸில் சுருண்டதற்கு பழி தீர்க்கும் நியூசிலாந்து அணி



**மிச்சல் ஸ்ராக்கின் பந்து வீச்சால் நியூசிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸில் சவுத்தியின் பந்து வீச்சில் ஆஸ்திரேலியா அணியும் திணறுகின்றது.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 416 ஓட்டங்களைக் குவித்தது. அணி சார்பில் லாபஸ்சாக்னே 143 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

பந்து வீச்சில் சவுத்தி, வாக்னர் 4 இலக்குகளையும், கிராண்ட்ஸ்ஹோம், ராவல் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணி நேற்று முன்தின நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. ரெயிலர் 66 ஓட்டங்களுடனும், வற்லிங் ஓட்டமெதனையும் பெறாது களமிறங்கினர். இருவரும் களமிறங்கி ஆரம்பத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போது வற்லிங் 8 ஓட்டங்களைப் பெற்ற போது கம்மின்ஸ் அவரை பவிலியன் திருப்பினார். மறுமுனையில் ரெயிலர் ஓரளவு தாக்குப் பிடித்து 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் எவரும் பெரிதாக சோபிக்காதவிடத்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்து வீச்சில் மிச்சல் ஸ்ராக் 5 இலக்குகளையும், லயன் 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணிக்கு ஆரம்பத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் ஆஸ்திரேலியாவின் தூணாகக் காணப்படுவருமான வோர்னரை பவிலியன் திருப்பினார் சவுத்தி இணைந்தார் நம்பிக்கை நட்சத்திரம் லாபஸ்சாக்னே. அவர் பேர்ன்ஸுடன் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவருக்குமிடையில் நல்லதொரு இணைப்பாட்டம் சென்றுகொண்டு இருக்கையில் கடந்த போட்டியில் சதம் கடந்து அணியை வலுப்படுத்திய லாபஸ்சாக்னே 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இணைந்தார் சிமித். அவரும் 16 ஓட்டங்களில் ஆட்டமிழக்க ஆஸ்திரேலியாவின் நிலை பரிதாபகரமானது. பின்வரிசை வீரர் வந்த வேகத்திலேயே நடையைக் கட்ட அணி நேற்றைய நாள் முடிவில் 167 ஓட்டங்களுக்குள் 6 இலக்குகளை இழந்தது. பந்து வீச்சில் சவுத்தி 4 இலக்குகளையும், வெகனர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.



## ஹசில்வுட்டுக்கு காயம்



நியூஸிலாந்துக்கு எதிராக ஆஸ்திரேலியாவில் இடம்பெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹசில்வுட் காயம் காரணமாக வெளியேறினார். அவர் இந்த டெஸ்ட் போட்டியில் மேலும் விளையாட முடியாது என்பதோடு இந்த பருவ காலத்தில் நடைபெறும் எந்த டெஸ்ட் போட்டியையும் ஆட முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் ஆஸ்திரேலியா அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இவருக்குப் பதிலாக ஜேம்ஸ் பேட்டின்சன் இருக்கிறார் என்றாலும் அவரும் காயத்துக்கு அடிக்கடி இலக்காகக் கூடியவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஹசில்வுட்டுக்கு இடது பின் தொடையில் காயம் ஏற்பட்டுள்ளது. அவர் இல்லாததையடுத்து ஆஸி. அணி முதல் டெஸ்ட் போட்டியில் கமின்ஸ், ஸ்டார்க்கை வைத்தே வேகப்பந்து வீச்சை முடிக்க வேண்டும். மேலும் லயன் கைகொடுப்பார்.

## பி.வி சிந்துவுக்கு ஆறுதல் வெற்றி



உலக டூர் பைனல் பூப்பந்தாட்டத் தொடரிலிருந்து இந்தி வீராங்கனை பி.வி.சிந்து ஆறுதல் வெற்றியுடன் வெளியேறி னார். சீனாவின் குவாங்கோ நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் சிந்து தனது முதல் இரு ஆட்டங்களில் ஜப்பானின் அகானே யமகுச்சி, சீனாவின் சென் யுஃபி ஆகியோரிடம் தோல்வியடைந்தார்.

இந்த நிலையில் தனது இறுதி ஆட்டத்தில் சிந்து நேற்று சீனாவின் பிங் ஜியோ வோவை எதிர்கொண்டார். இதில் சிந்து 21:19, 21:19 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

ஏற்கெனவே இரு ஆட்டங்களில் தோல்வியடைந்ததால் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்து ஆறுதல் வெற்றியுடன் தொடரில் வெளியேறினார் பி.வி.சிந்து.

# நினைவுப் பேருரை இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 15
மருத்துவர் ந.சிவராஜாவின் நினைவுப்பேருரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடி கூவர் அரங்கில் இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நடைமுறைப் பொதுச் சுகாதாரம் பற்றியும் சிவராஜாவுடன் பணிபுரிவதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் எனும் தலைப்பிலும் பேருரை இடம் பெறவுள்ளது.

யாழப்பாணப் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறையினர் இதை ஏற்பாடு செய்துள்ளனர். (து)



# சென்றலைட்ஸ் வி.க. அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.15
அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.ஸி.ஸி.ஸி கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் ஆண்களுக்கான பிளே ஒவ் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான பிளே ஒவ் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 65:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

# தென்னாபிரிக்கா தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

## ஜோ ரூட் நீக்கம்

தென்னாபிரிக்கா தொடருக்கான இங்கிலாந்து ரி-20 அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. முதலில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் இரு அணிகளுக்குமிடையில் ரி-20 தொடர் இடம்பெறவுள்ளது.

ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் ரி-20 அணியில் ஜோ ரூட்டுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அடுத்த வருடம் ரி-20 உலகக் கிண்ணப் போட்டி இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்கான சிறந்த அணியை உருவாக்க ஒவ்வொரு அணியும் முயற்சி செய்து வருகிறது.

அதனடிப்படையில் ஜோ ரூட் நீக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்கா தொடருக்கான ரி-20 இங்கிலாந்து அணி விவரம்:

மோர்கன் (அணித் தலைவர்), மொயீன் அலி, ஜாஃப்ரா ஆர்ச்சர், பேர்ஸ்டோவ், பட்லர், பேட் பிரவுன், சாம் குர்ரான், டாம் குர்ரான், ஜோ டென்லி, கிறிஸ் ஜோர்டான், தாவித் மாலன், மத்யூ பார்கின்சன், அடில் ரஷித், ஜேசன் ராய், பென் ஸ்டோக்ஸ், மார்க் வுட்.



**துரித தபால்கள் பொதிகள் சேவை**
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 525/=
Germany - 625/=
Australia - 850/=
Swiss - 850/=
TCN EXPRESS
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி.
Hotline - 077 755 4528

**வேலையாள்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்தில் கீழ்வரும் பதவி நிலைகளுக்கு தகுதிவாய்ந்த பெண் வேலையாள்கள் தேவை.
கணக்கு பதியுநர் (கணினி அறிவு அவசியம்)
களஞ்சிய பொறுப்பாளர்.
யாழ் நகரிற்கு அண்மையாக உள்ளவர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 076 137 9330

**S.V.M. 70 GSM தரமான கொப்பிகள் மலிவு விற்பனை**
அப்பியாசக் கொப்பிகள் 70GSM தடிப்பான தாள்களுள்ள B5 கொப்பிகள். A5 கொப்பிகள் CR கொப்பிகள் மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இடம்:- சாவகச்சேரி பொதிகை புத்தகசாலை
112, A9 வீதி, கொமர்ஷல் வங்கி முன்பாக (076 895 5636)
மித்திரன் மல்ரி ஸ்பொட் (076 120 6368)
மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி அருகில்.
71A புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (075 927 3306)
(CR/29914)(11,17)

**வேலைவாய்ப்பு**



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
1). வரவேற்பாளர்கள்
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
3). விநியோக ஊழியர்கள் (இரவு, பகல்)
தகுதியானவர்கள் எதிர்வரும் 17.12.2019 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

INFORMATION TECHNOLOGY PARK
*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Digital Infrastrucature & Information Technology*
MPCS Building
127,K.k.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
JANUARY BATCH
Dip.in Microsoft Office
Dip.in Desktop publishing
Dip.in information Technology
Dip.in Computer Programming
Online Course
Dip.in PC Application & Office Management
Languages
VB.net PHP C/C++
C# Java AutoCAD
Workshops
Internet & e-mail
Webpage Designing & Development
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 24.01.2020
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 25.01.2020
CENTRE FOR INFORMATION TECHNOLOGY
- Executive Officer

**வீட்டுப் பணிப்பெண் தேவை**
கொழும்பு தெஹிவளையில் உள்ள வீட்டில் சமைக்க, சிறு குழந்தையை பராமரிக்கக் கூடிய தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் உடனடியாகத் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
076 073 5363, 077 127 9784

**பதவி வெற்றிடம்**
அலுவலக உதவியாளர் தேவை
A/L கற்றவர்கள் நேரில் வரவும்
பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை
The Express Institute
Irupalai Junction, Kopay.

**வேலையாள்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் எலக்ரோனிக்ஸ் கடைக்கு வேலையாள்கள் தேவை. ஆண் - 18 - 40, பெண் - 18 - 25. ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும்.
No:- 26K கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6807, 070 304 3633

**விற்பனைக்கு**
தேக்க மரத்திலான கட்டில், கதிரை, சாப்பாட்டு மேசை, சோபா செற்றி, அலுமாரி என்பன உடன் விற்பனைக்குண்டு.
(CS/29924)(11,17)
070 304 3636, 070 304 3647



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.